விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.con
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 18 சனிக்கிழமை (02.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196

# கலந்துரையாடல் தோல்வி
# ஞாயிறு நள்ளிரவு தொடக்கம்
# தனியார் பேருந்து பகிஷ்கரிப்பு



(கொழும்பு)

**போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியளிக்காததால் நாளை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தனியார் பேருந்து சங்கங்கள் அறிவித்துள்ளன.**

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அனைத்து இலங்கை தனியார் பஸ்கள் சம்மேளனம், மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சங்கம், தென் மாகாண பஸ் சங்கம், இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் உட்பட பஸ் சங்கங்கள் பல கலந்து கொண்டிருந்தன. இதன்போது வருடாந்த பஸ்

23ஆம் பக்கம் பார்க்க....

## உதய கம்மன்பில பிணையில் விடுதலை



(கொழும்பு)

மோசடி குற்றச்சாட்டில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த உதய கம்மன்பில

23ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் மாணவர் உரிமை ஆராய்வு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவர்களின் மத, கலாசார உரிமைகளைஉறுதிபபடுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரி

23ஆம் பக்கம் பார்க்க....




## இராணுவத்தினரே சுட்டுக் கொன்றனர்

### அநு. மேல் நீதிமன்றில் நேற்று சாட்சியம்


(அநுராதபுரம்)

திருகோணமலை, கிளிவெட்டி - குமாரபுரம் பகுதியில் 1996ஆம் ஆண்டில் 26 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழககில், மேலும் இருவர் நேற்று சாட்சியமளித்துள்ளனர்.

ஜூரிகள் முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இந்த படுகொலை வழக்கு விசாரணைகள் ஐந்தாவது நாளாகவும் நேற்று நடைபெற்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

## 103 போராளிகள் மர்ம மரணம்
## "சந்தேகத்துக்கு என்னால் பதில் வழங்க முடியாது"



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் போராளிகளாகவிருநது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையாகிய முன்னாள் போராளிகள் மர்மமாக உயிரிழந்து வருகின்ற சம்பவம் குறித்து

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா. அமர்வு நிறைவடைவு

(ஜெனிவா)

ஜெனிவாவில் கடந்த மூன்று வாரகாலமாக நடைபெற்று வந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 32ஆவது கூட்டத் தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது.

கடந்த மாதம் 13ஆம் திகதியிருந்து நேற்று முதலாம் திகதி வரை இந்த கூட்டத்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்

### அமைச்சர் ரவீந்திர யாழில் உரை




(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள இளைஞர் யுவதிகள் இன்னும் சில வருடங்களில் தமது வாழ்க்கையை சுயமாக கொண்டு செல்வதற்குரிய நிலையைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம் என தொழில் மற்றும் தொழில்

24ஆம் பக்கம் பார்க்க....

## வருங்காலத் தலைவர்களை உருவாக்க பாடுபடுங்கள்

### ஆசிரிய நியமனம் வழங்கலில் முதலமைச்சர் உரை



(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக சரியத் தொடங்கியுள்ள வடக்கு கல்லூரிகளின் சாதனைகளை திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களிடமே உண்டு என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விகனேஸ்வரன் தெரிவித

24ஆம் பக்கம் பார்க்க....

## சில மாணவர்களின் வாழ்க்கை போதைவஸ்துக்களால் சீரழிவு

### எச்சரிக்கிறார் இளஞ்செழியன்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர்ப்புறத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் போதைவஸ்து பாவனை சில மாணவர்களின் வாழ்க்கையை சீரழித்து வருவதாக கவலை வெளியிட்டுள்ள யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், பாடசாலை நேரத்தில் போதைவஸ்து பாவனை குற்றச் செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவதாக உறுதியாகும் பட்சத்தில் அத்தகைய மாணவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு செயலர் நினைத்தால்தான் மேலும் காணிகளை விடுவிக்கலாம்

### மீள்குடியேற்ற அமைச்சர் கைவிரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் மேலும் காணிகளை விடுவிக்க வேண்டுமென்றால் அது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நினைத்தால்தான் முடியும் என மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் கைவிரித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ்.வந்த அமைச்சர் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கான நீர் விநியோக திட்டத்தை ஆரம்பித்து வைத்ததோடு, பலாலி வடக்கில் மக்களுக்கான வீடுகளுக்கு அடிக்கல் நாட்டியிருந்தார். இந்நிகழ்வுகளின் பின்னர் வடக்கில் இன்னமும் இராணுவத்தின் வசம் ஐயாயிரத்து நூறு ஏக்கர் காணி உள்ளது.

அவற்றை விடுவிப்பதற்கு ஏதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா?

23ஆம் பக்கம் பார்க்க....


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்று 17 அகவை இல்

2000 2016

# கரிகணன்

## வடக்கின் அச்சகதாரர்



இன்று 17ஆம் அகவையில் அழுத்தமான காலடிகளை எடுத்து வைக்கும் நாம், இவ்வேளையில் வடக்கின் தனிப்பெரும் அச்சகதாரர்களாக எம்மை வளர்த்தெடுக்க உதவிய வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள், பணியாளர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைக் காணிக்கை ஆக்குகிறோம்.

**Harikanan**
PRINTERS OF THE NORTH

Offset | Digital | Screen | Design

**Head Office:**
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
W www.harikanan.com
E print@harikanan.com
F harikananprinters S harikanan
T +94 21 222 2717 | 8

Why US??? Lowest Price | Best Quality | Fast Delivery | 100% Satisfaction

# உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடைபெறும்

## அமைச்சர் பைசர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகள் 23 இல் 17 மாநகரசபைகள் மற்றும் ஒரு நகரசபை உட்பட 18 சபைகள் ஒரு விசேட ஆளுநருக்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.


மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபையின் அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், 5 பிரதேச சபைகளின் காலம் முடிவுற்றுள்ள நிலையில், குறித்த பிரதேச சபைகள் பிரதேசசெயலாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்த விடயம் குறித்து விரைவில் ஜனாதிபதியுடன் பேசி இறுதியான தீர்வு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெறும் எனவும், உள்ளூராட்சி மன்றங்களின் காலம் நீடிக்கப்படவுமில்லை கலைக்கப்படவுமில்லை என கூறினார்.

உள்ளூராட்சி எல்லை நிர்ணயங்கள் இன்னும் பூர்த்தியாக்கப்படாமையினாலேயே தேர்தலுக்கான காலம் நீடிக்கப்படுவதாகவும் அமைச்சர் பைசர் முஸ்தபா மேலும் தெரிவித்தார். (இ-10)




# சுதந்திரமாக மதங்களைப் பின்பற்றும் உரிமை உறுதிசெய்யப்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**சகல இனத்தவரும் சுதந்திரமாக தத்தமது மதங்களைப் பின்பற்றுவதற்கான உரிமை உறுதி செய்யப்பட்டு, சுதந்திரமான சமூகமொன்றுக்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



இதன் மூலம் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை வலுவூட்டுவதற்கு சந்தர்ப்பம் கிட்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் மூலம் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை வலுவூட்டுவதற்கு சந்தர்ப்பம் கிட்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

புனித ரம்ழான் நோன்பை முன்னிட்டு அலரி மாளிகையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்தார் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்த விடயங்களைக் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் அழைப்பின் பேரில் இஸ்லாம் மதத் தலைவர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையானோர் இப்தார் வைபவத்தில் கலந்து கொண் டனர்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, அனைவரும் ஒன்றிணைந்து மத ரீதியான வைபவங்களை ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியமானதாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

# தொழில் சேவை மத்திய நிலையம் யாழில் நேற்றுத் திறந்து வைப்பு





மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களத்தின் கீழ் மாவட்டபொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர அமரவீரவினால் நேற்றைய தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் தொழில சங்க உறவுகள் அமைச்சினால் மாவட்டங்களில் உள்ள வேலைவாய்ப்பின்மையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் ஊடாக மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்தியநிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக நேற்றைய தினம் குறித்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக வேலை கோரி விண்ணப்பித்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 3 பேருக்கு நியமனம் வழங் கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து 6 தனியார் நிறுவன பிரதி நிதிகள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்புக் கோரி விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வை நடத்தியிருந்தனர். (இ-9)

# 2025 ஆம் ஆண்டுக்குள் சகலருக்கும் வீடு- சஜித்

நாட்டின் வீடற்ற சகல பிரஜைகளுக்கும், 2025 ஆம் ஆண்டுக்குள் வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று, வீடமைப்பு துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டி அஞ்சலக கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எந்தவித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படுவதில்லை என்று மகிந்த அணியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

எனினும் அவர்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்திகள் நாட்டில் மேற்கொள்ளப்படுவதில்லை.

நல்லாட்சி அரசாங்கம் பிரதமரை வளப்படுத்திக் கொள்ளவோ, ஜனாதிபதி தமது பைகளை நிரப்பிக் கொள்ளவோ, அமைச்சரவையை கொள்ளையிடவோ இடமளிக்காது.

எனினும் இவையே மகிந்த அணியினரின் எதிர்பார்க்கும் அபிவிருத்தி என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கான வளமான நாடொன்றையே உருவாக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# 10 பெண்களின் சடலம் மீட்பு

லிபியக் கடற்பரப்பில் மூழ்கிய புகலிடக் கோரிக்கையாளர்களின் படகிலிருந்து 10 பெண்களின் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக இத்தாலி கடற படையினர் தெரிவித்துள்ளனர்.

புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகில் நீர் புகுந்ததன் காரணமாக படகு மூழ்கியுள்ளதாகவும் இத்தாலி கடற்படையினர் தெரிவித்தனர்.

கடலில் தத்தளித்துக்கொண டிருந்த நிலையில், 107 புகலிடக் கோரிக்கையாளர்களை காப்பாற்றும் முயற்சியில் இத்தாலி கடற்படையினர் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் படகு மூழ்கியதையடுத்து மூச்சுத்திணறல் ஏற்பட்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

படகிலிருந்த ஏனைய 106 பேரும் பின்னர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக இத்தாலி கடற்படையின் பேச்சாளர் தெரிவித்தார். (இ-10)


# படகு உற்பத்தி நிலையம் மருதங்கேணியில் திறப்பு





யாழ்.வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் படகு உற்பத்தி நிலையம் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்க வளாகத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ். அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5-15-64)

# மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான 144 வீடுகளுக்கு நேற்று அடிக்கல்





(யாழ்ப்பாணம்)

பலாலி வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான 144 வீடுகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும் வீமன்காமம், வறுத்தலை விளான், நகுலேஸ்வரம் உட்பட தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தண்ணீர் விநியோக திட்டத்தினையும் அவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அமைச்சர் சுவாமிநாதன் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட மூன்று கிராமங்களில் மேற்படி குடிநீர்த்திட்டத்தை ஆரம் பித்து வைத்தார். இதற்கான மூன்று தண்ணீர தாங்கிகளையும் அவர் திறந்து வைத்துள் ளார்.

இந்த ஒரு தண்ணீர் தாங்கியில் நாற்பது குடும்பங்கள் பயன்பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் நான்கு தண்ணீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன. (செ-4)

# மனவளர்ச்சி குன்றிய பெண் மீது துஷ்பிரயோகம்

## குடும்பஸ்தரை தேடி பொலிஸ் வலை வீச்சு

(மல்லாவி)

ஏ9 வீதி மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்குவாரி கிராமத்தில் தாயாருடன் வசித்து வந்த மனவளர்ச்சி குன்றிய பெண் ஒருவரை அக் கிராமத்தில் வசித்த குடும்பஸ்தர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட பிரஸ்தாப பெண் சிகிச்சைக்காக மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களின் பொது வைத்தியசாலைகளுக்கு அவசர சிகிச்சைக்காக அடுத்தடுத்து அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தனது தாயாரின் உதவியுடன் வசித்து வந்த மனவளர்ச்சி குன்றிய 36 வயதுடைய பிரஸ்தாப பெண், தாயார் மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருட்கள் வாங்கச் சென்ற நிலையில் வீட்டில் தனித்திருந்துள்ளார். இதனை அவதானித்த மேற்படி கிராமத்தில் வசித்த குடும்பஸ்தர் ஒருவர் அவ் பெண்ணின் வீட்டிற்குச் சென்று குறித்த பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதன்போது பாதிப்படைந்த நிலையில் காணப்பட்ட பெண்ணை கடையில் இருந்து திரும்பிய தாயார் மீட்டு மாங்குளம் ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றி சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் மேலதிக அதிதீவிர சிகி ச்சைகளுக்காக பிரஸ்தாப பெண் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு ள்ளார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் பாதிக்கப்பட்ட பெண்ணிடமும் அவரது தாயாரிடமும் சம்பவம் தொடர்பான தகவல்களைப் பெற்று பதிவுசெய்துள்ளனர்.

அத்துடன் கிளிநொச்சி, வவுனியா மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளினால் வழங்கப்படும் பாலியல் துஷ்பிரயோகத்தை உறுதிப்படுத்திய வைத்திய அறிக்கையினையும் பெற்றுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் மாங்குளத்திலிருந்து தலைமறைவா ி யுள்ளதாக தெரிவிக்கும் மாங்குளம் பொலிஸார் நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சந்தேக நபர் தொடர்பான தகவல்களை அனுப்பி அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ-15)

# பொதுக்கூட்டம்

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் எனவும் இதில் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் பே. சுபாகர் கேட்டுக் கொண்டுள்ளார். (செ)


## முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபை (வ-து)

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையின் தலைமைக் காரியாலயத்துக்காக கட்டட நிதி வளர்ச்சிக்காக மாபெரும் விற்பனை நடைபெற்றுக்.கொண்டிருக்கின்றது. இவ் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு திகதி 02.07.2016 என அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் இத் திகதி பிற்போடப்பட்டுள்ளது. இதன் சீட்டிழுப்பு திகதி பின்பு அறிவிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல் :-
தலைவர், மாவட்ட கூட்டுறவு சபை
முல்லைத்தீவு.


# 34 ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் யாழில் வேலைகோரி விண்ணப்பிப்பு

## யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்பினை கோரி 34 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் யாழ். மாவட்ட செயலகத்தில் விண்ணப்பத்துள்ளனர். இவர்களுக்குரிய வேலைவாய்ப்பினை விரைவாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் கீழ் மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அதில் கலந்து கொண்டு உரையா ற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்மாவட்டத்தில் பல்வேறு தேவைகள பிரச்சினைகள் இருந்தாலும் தற்போதுள்ள பெரும் பிரச்சினையாக வேலை வாய்ப்பின்மையே காண ப்படுகின்றது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது மிகமிக அவசியமாக உள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

யுத்தம் காரணமாக இயங்காமல் இருக்கின்ற தொழிற்சாலைகளை இயக்குவதுடன் புதிய தொழிற்சாலைகளையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் மாவடத்தில் வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

குறிப்பாக கடந்த கால யுத்த நிலைமைகளினால் யாழ்.மாவ ட்டம் உட்பட வடக்கு மாகாணம் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தது. அந்தவகையில் இங்கு கடந்த காலங் களில் இயங்கிய பல தொழிற்சாலைகளும் அழிக்கப்பட்டிருப்ப துடன் மேலும் பல தொழிற்சாலைகள் இயங்காத நிலைக்குச் சென்றுள்ளன. இதனால் இங்கு வேலையில்லாத பிரச்சினை பெரும் பிரச்சினையாக மாறியிருக்கின்றது.

குறிப்பாக வேலையில்லாமல் பல ஆயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் இருக்கின்றனர். அதிலும் குறிப்பாக சுமார் 34 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பு கோரி தமது பதிவுகளை யாழ் மாவட்டச் செயலகத்தில் மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கான வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

ஆகவே இதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு அரசாங்கம் இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாகவே இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முடியும். இதுவே இன்றைய தேவையாகவும் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-9)


தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு
வருகை தந்திருக்கும் T.M.S. சௌந்தரராஜனின்
புதல்வர் செல்வகுமாரையும்,
பின்னணிப் பாடகி விஜயலட்சுமியையும்
உங்கள் இடங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிக்கு
அழைக்க தொடர்பு கொள்ளவும்.
077 7030234


# முதல்வர் இல்லத்தில் கொள்ளையிட்டவர் விளக்கமறியலில்

கொழும்பு கறுவாத்தோட்டம் கேம்பிரிஜ் டெரஸ் பிரதேசத்தில் உள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்க ஆபரணங்கள் மற்றும் பணத்தை கொள்ளையிட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த கொள்ளையில் ஈடுபட்ட நபர் எனக் கூறப்படும் வெலிபென்னே கே. பிரியந்த பெரேரா என்ற இந்த நபரை எதிர்வரும் 7ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய நேறறு உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளையிட்டதாக கூறப்படும் தங்க ஆபரணங்களின்ஒரு தொகையை சந்தேக நபர் பேருவளை தர்கா நகரில் உள்ள ஒருவ ருக்கு விற்றுள்ளதுடன் அவர் அதனை உருக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

சந்தேக நபர் கறுவாத்தோட்ட பிரதேசத்தில் உள்ள 5 பங்களாக்களிலும், கல்கிஸ்சையில் 10 பங்களாகளிலும் திருடியுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

# இளைஞனும், சிறுமியும் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

சிறுமி ஒருவருடன் தங்கியிருந்த இளைஞனும் அச் சிறுமியும் பருத்தித்துறை பொலிஸாரினால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடத்தனை பொற்பதிப் பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, அல்வாய் தெற்கை சேர்ந்த 15 வயதுடைய சிறுமி ஒருவரை சுன்னாகத்தை சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் அழைத்துச் சென்று குடத்தனை பொற்பதி பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் தங்க வைத்திருந்துள்ளார்.

இது தொடர்பில் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தைப் பிரிவினருக்கு கிடைக்க பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த சிறுமியையும் இளைஞனையும் கைது செய்துள்ளனர். (செ-60)



தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய தரம் 6,7 மாணவர்கள் சந்தைப் பொருட்களை விற்பனை செய்த நிகழ்வு சுன்னாகம் மயிலணி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நேற்று நடைபெற்ற போது... (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# ஒருவரைக் கடத்திச் சென்று கொள்ளையிட்டவர்கள் கைது

(கொழும்பு)

ஜா-எல கெப்பிட்டிபொல பிரதேசத்தில் ஒருவரை கடத்திச் சென்று அவரிடம் இருந்து பணம் மற்றும் நகையை கொள்ளையிட்ட சந்தேக நபர்கள் சிலரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கடத்திச் சென்ற நபரிடம் இருந்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி, 30 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு இது குறித்து தகவல் கிடைத்ததும் விரைந்து செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட ஆட்டோவுடன் 4 பேரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து தங்கச்சங்கிலி மற்றும் பணம் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

ஜா-எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# கொழும்பில் 75,000 பேர் வாக்காளர் பட்டியலில் இன்னும் பதிவு செய்யவில்லை

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு இருப்போர் சுமார் 75 ஆயிரம் பேர் இதுவரை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படவில்லை என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த வீடுகளில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வசிப்போர் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு எவ்வித தடையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு வாடகை வீடுகளில் வசிப்போருக்கு இதற்கான வசதியை செய்து கொடுக்க வேண்டியது வீட்டு உரிமையாளர்களின் கடமை என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த வருடம் முதல் தேர்தல் இடாப்புகளில் பதிவு செய்தல் கட்டாயம் என்றும், இதுவரை நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் வாக்காளர் படிவங்கள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வாக்காளர் படிவங்களை சகல வீடுகளுக்கும் வழங்குவது, நிரப்பப்பட்ட படிவங்களை சேர்ப்பது என்பன கிராம உத்தியோகத்தர்களின் கடமை என்றும் எந்தவொரு கிராம உத்தியோகத்தரும் தமது பொறுப்புகளில் இருந்து தவறும் பட்சத்தில் அது தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-10)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# வெளிநாட்டுக்கடன் சொந்த தேவைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது-நளின் சாடல்

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை திட்டமிட்டு சரியான முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹ குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

மேலும், கடந்த கால அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்காக கடன்களைப் பெற்று பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தது.

எனினும் அவை பாதியிலேயே நின்றுவிட்டதாகவும், அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது தற்போதைய ஆட்சியின் கடமையாகிவிட்டது எனவும் தெரிவித்தார்.

மகிந்த ஆட்சியில் வீதி அபிவிருத்திக்காக பெற்ற வெளிநாட்டுக் கடன்கள் அபிவிருத்திக்காக மட்டும் பயன்படுத்தாமல் சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய நல்லாட்சியில் முறையான விலைமனுக்களைப்பெற்று ஒப்பந்த அடிப்படையில் வேலைதிட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் நளின் பண்டார தெரிவித்தார். (இ-10)

# கதிர்காம யாத்திரிகர் குழுவினரை யானை தாக்கியதில் ஐவர் காயம்

கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு குமண காட்டுப் பாதை ஊடாக பாதயாத திரை சென்ற அடியார் குழுவினர் மீது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை காட்டு யானைகள் தாக்கியதில் 2 பெண்கள் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் 3 பேர் பாணமை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வண்ணாத்தி கிணற்றடி என்ற இடத்தில் உறங்கிக் கொண்டிருந்த இவர்களை திடீரென அங்கு வந்த காட்டு யானைகள் தாக்கியுள்ளன. இதன்போது, யாத்திரிகர் குழுவினர் கத்தி கூச்சலிட்ட சத்தத்தைக் கேட்டு அங்கு விரைந்த இராணுவத்தினர் யானைகளை விரட்டியதுடன், காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கவும் உதவியளித்தனர்.

மட்டக்களப்பு, பழுகாமம் மற்றும் முகத்துவாரம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இந்தச் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். (இ-10)

# இராசி பலன்

02.07.2016
(ஆனி 18, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 9.13மணிவரை
ரோகிணி முன்னிரவு 9.59மணிவரை
சுபநேரம் 2.56-4.26 மணிவரை
இராகுகாலம் 8.56-10.26 மணிவரை
சனிப்பிரதோச விரதம்
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | சூரி புத சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்**: காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்**: எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்**: எங்காவது வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்**: குடும்ப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்**: முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.

**கன்னி**: தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், பணவரவுகள் இன்று எளிதில் வசூலாகலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**: பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம்.

**விருச்சிகம்**: எடுத்த கருமங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு**: ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**மகரம்**: செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப்போட்டிகள் மாறும்.

**கும்பம்**: மைத்துனர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்**: உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், காரிய அனுகூலமுண்டு, பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்கள் ஏற்படலாம்.

# ஆலயத்தின் புனிதத்தன்மையை பேணும் வகையில் அனைவரது செயற்பாடுகளும் அமைய வேண்டும்

## நல்லூர்க்கந்தன் அடியவர்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தனின் வருடாந்த மஹோற்சவம் நடைபெறும் காலத்தில் ஆலயத்தின் புனிதத் தன்மையை பேணிப் பாதுகாக்கும்வகையில் அனைவரது செயற்பாடுகளும்அமைய வேண்டுமென நல்லூர் திருவிழா தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆலய வளாகத்தை அசுத்தப்படுத்தாது ஆலயத்தின் சுற்றாடலைப் பாதுகாத்து ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பேணி ஆலய திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு திருவிழா ஆயத்தம் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் மாநகர மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

அதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. குறிப்பாக திருவிழா விசேட தினங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் ஆலய சூழலின் புனிதத் தன்மை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே நல்லை ஆதீன குருமுதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர்க் கந்தன் உற்சவகாலம் வரவிருக்கின்ற நிலையில் ஆலயத்தின் உற்சவ முன்னேற்பாடுகள் தொடர்பாக பல்வேறு தரப்பினர்களும் கூடி ஆராய்கின்றோம். இதற்கமைய கடந்த வருடத்துடன் ஒப்பிடுகின்றபோது இந்த முறை ஆலயத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அல்லது மாற்றங்களை செய்ய வேண்டியவைகள் தொடர்பிலே அதிக கவனம் செலுத்தவேண்டும்.

இதற்கமைய ஆலயத்தின் புனிதத்தன்மை தொடர்பில் இம்முறை அதிக கவனம் செலுத்த வேண்டியது மிக மிக அவசியமாக இருக்கின்றது. குறிப்பாக ஆலயச்சூழலை அசுத்தப்படுத்துகின்ற செயற்பாடுகளை அனைவரும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.


உணவுக் கழிவுகளை வீசுதல் முதல் ஒவ்வொருவராலும் மேற்கொள்ளப்படுகின்ற விரும்பத்தகாத செயற்பாடுகளை அனைவரும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஆலயத்தின் புனிதத்தை மதித்து அதனைப் பேணிக் காக்கின்ற வகையிலேயே அனைவரதும் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

இவ்வாறு அனைவரும் ஆலயத்தின் புனிதத்தை பாதுகாக்கும் வகையில் செயற்பட்டு ஆலயத் திருவிழாவை எல்லோருமாக இணைந்து மிகச் சிறப்பாக நடத்துவோம். அதற்கு எம்பெருமான் துணையிருப்பார்.

மேலும் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பு மிக்க இந்த ஆலயத்திற்கு பல இடங்களிலிருந்தும் பலரும் வந்து செல்கின்றமையால் ஆலயத்தின் புனிதத்தையும் மரபுகளையும்பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



யாழ். சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையின் பழைய மாணவனான மதன் பாலசுந்தரம் என்பவரால் பாடசாலைக்கு போட்டோபிரதி இயந்திரம் ஒன்று அண்மயில் வழங்கப்பட்டது. இவ் இயந்திரத்தினை பாடசாலை அதிபர் ப.சுதர்சன் பெற்றுக்கொள்வதனை படத்தில் காணலாம்.

# ஆசிரியர்களை அவமதிப்பதற்கு சமூகம் அனுமதிக்கக் கூடாது

## முன்னாள் நீதிபதி விக்னராஜா வலியுறுத்து



ஒருசில ஆசிரியர்கள் மேற்கொள்ளும் தகாத செயல்களுக்காக முழு ஆசிரிய சமூகத்தையும் அவமதிப்பதற்கு சமூகமானது அனுமதிக்க கூடாது என மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி, இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார்.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சமாதானத்துடன் கூடிய அறிவூட்டல் கல்வியானது மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என சர்வதேச சித்திரவதைகளுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழ். மனிதவுரிமைஆணைக் குழுவின் ஏற்பாட்டில் இடம் பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சித்திரவதைகள் என்பது எமது நாட்டில் போர்க்கால கட்டத்தில் நடந்தவை மட்டுமன்றி அன்றாட வாழ்விலும் நடைபெறுகின்றது. அவை சட்ட ஒழுங்கைபேணுகின்ற அதிகாரிகளால் நடைபெறுவது அல்ல.மாறாக சமூகத்தில் உள்ளவர்களாலேயே இடம்பெறுகின்றது.

மேலும் இது தொடர்பில் காலமாற்றத்திற்குள் உள்ளாகியிருக்கும் இளைஞர்.யுவதிகளை குறை கூறுவதில் எந்த விதமான பயனும்வந்து விடப் போவதில்லை. அத்துடன் இலங்கையின் உயர் நீதிமன்ற நீதியரசராகவும் சர்வதேச நீதிபதியாகவும் இருந்த வீரமந்திரர் குறிப்பிட்டது போன்று மாணவர்களுக்கு சமாதானம் பற்றிய அறிவூட்டல்கள் பாடசாலைமட்டத்தில் இருந்தே புகுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.

மேலும் மாணவன் உள்ளத்தில் சமாதானம் உருவாகி அது அவனில் இருந்து வெளியாகி அது அவனது சமூகத்தில் பரவி அச்சமூகமும் சமாதானம் மிக்க சமூகமாக மாற்றமடைய வேண்டும்.

அந்தவகையில் இச் செயற்பாடனது மாணவர்களது கல்வியில் அவர்களுடைய பாடத்துடன் அது எந்த பாடமாக இருந்தாலும் அந்த பாடக் கண்ணோட்டத்துடன் சமாதான கல்வியும் போதிக்கப்பட வேண்டும். மேலும் தற்போது ஆசிரியர்கள் தொடர்பாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

ஓர் சிலரால் மேற்கொள்ளப்படும் சம்பவத்துக்காக முழு ஆசிரிய சமூகத்தையும் அவமதிப்பதற்கு சமூகமானது அனுமதிக்கக் கூடாது. மார்ட்டின் லூதர் கிங் கூறிய தன்படி தீய செயல்களை செய்பவர்களை விடவும் புத்திஜீவிகள் மௌனித்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. அது சமூகத்திற்கு விரோதமான கேடான விளைவுகளை ஏற்படுத்தும்.

புத்திஜீவிகளும் சமூகத்தில் மதிக்கத்தக்கவர்களும் தங்களுடைய சமூகத்தை நோக்கியதான கடமைகளையும் பணிகளையும் செய்யாது மௌனித்திருப்பதன் விளைவே சமூகத்தில் சித்திரவதைகளுடன் கூடிய குற்றங்கள் இடம்பெறுவதற்கு காரணமாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-9)

## சரஸ்வதி முன்பள்ளியின் மெய்வல்லுநர் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 31 ஆவது மெய்வல்லுநர் விழா 2016 இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பொற்பதி அறிவாலய சரஸ்வதி முன்பள்ளித்தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி டாக்டர் ந.அரவிந்தன், நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் பொ.கனகசபாபதி, யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன் ஆகியோர் கலந்துகொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக அலியன்ஸ் காப்புறுதி நிறுவன யாழ்ப்பாண வலய முகாமையாளர் மா.புவிராஜ், சமூக ஆர்வலர் திருமதி நி.செல்வதி, வர்த்தகர் இ.சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)





யாழ்ப்பாணம் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்தமாக வித்தியதசாலை நிறுவுநர் தின நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. அதிபர் சி.சிவாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

## மதுரம் கிட்ஸ் முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டு விழா

கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள மதுரம் கிட்ஸ் முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மதுரம் கிட்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளித்தலைவர் மதுரம் எஸ்.கே. கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச சபைச் செயலாளர் யு. ஜெலிபன், இலங்கை வங்கி கிளிநொச்சிக் கிளை உத்தியோகத்தர் த.ஹரிகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலரால் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட செயலகத்தால் கீழே குறிப்பிடப்பட்ட பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

2.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மீள்குடியேற்ற பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 04.07.2016 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக மாவட்டச் செயலாளர்-காணி, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல:021 221 2631) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை மீள்குடியேற்ற பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 04.07.2016 முதல் 20.07.2016 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 500/- ஐ கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 21.07.2016 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் 21.07.2016 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7. முன் ஆயத்த கூட்டம் (Prebid Meeting) 15.07.2016 முற்பகல் 10.00 மணிக்கு அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

| கேள்வி இல | விபரம் | அண்ணளவான எண்ணிக்கை | மீளளிக்கப்படாத தொகை (ருபா) |
|---|---|---|---|
| JF/RES/LH/I/01/2016 | நீர் இறைக்கும் இயந்திரம் | 240 | 500/= |
| | தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் | 06 | |
| | மண்வெட்டி | 280 | |
| | பூவாளிகள், பட்டை | 23 | |
| | மருந்துதெளி கருவிகள் | 190 | |
| | மின்சார மோட்டர்கள் | 20 | |
| | Alkathene Pipe -30m | 300 | |
| | Alkathene Pipe -15m | 50 | |
| JF/RES/LH/I/02/2016 | தையல் இயந்திரம் | 150 | 500/= |
| JF/RES/LH/I/03/2016 | மீன்பிடி உபகரணங்கள் | 300 | 500/= |
| JF/RES/LH/I/04/2016 | நூலக அலுமாரி –Steel | 10 | 500/= |
| | துணிவெட்டும் மேசை –மரம் (Sewing Cutting Table) | 210 | |
| | கதிரை –மரம் | 160 | |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C-5066)


## அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள்

அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பிரபல அழகுக்கலை நிபுணர் **திருமதி தர்சினி ரஞ்சன்** அவர்களால், மணப்பெண் அலங்காரம், சிகை அலங்காரம், முக அலங்காரம் போன்ற அலங்கார வகுப்புக்கள் (Workshop) நடாத்தவுள்ளன.



வகுப்புக்கள்:- **03.07.2016 ஞாயிறு தொடக்கம்**
**08.07.2016 வெள்ளி வரை**

இலவச அறிமுக வகுப்புக்களும் அதனைத் தொடர்ந்து குறைந்த கட்டணத்தில் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!

தொடர்புகளுக்கு:- திருமதி *தர்சினி ரஞ்சன்*

தொ. பே இலக்கம்
071 110 3612
021 222 5158
Email - harishi09@gmail.com

179/5 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


# உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க யாழ்.வணிகர் கழகம் தயார்

வடமாகாணத்தில் உற்பத்தியாகும் எமது மண்ணுக்கேயுரிய தரமான உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய உற்பத்திப்பொருட்கள் போன்றவற்றிற்கு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கவும் புலம்பெயர் மக்களின் தேவைகளை பூர்த்தியாக்கும் வகையில் ஏற்றுமதி செய்யவும் பொருத்தமான வசதிகளைப் பெற்றுக்கொடுக்க யாழ். வணிகர் கழகம் முன்வந்துள்ளது.

இவ்வாறான பொருட்களின் தேவைகள் பற்றிய கேள்வி கோரல்கள் யாழ். வணிகர் கழகத்திற்கு ஏற்கனவே கிடைத்துள்ளது. இவ் அரிய வாய்ப்பை பயன்படுத்த வசதியாக எமது மண்ணில் இவ்வாறான உள்ளூரில் உற்பத்தியாகும் தரமான உணவுப்பொருட்கள்மற்றும் ஏனைய பொருட்கள் பற்றிய அனைத்து விபரங்களையும் உற்பத்தியாளர்கள் யாழ். வணிகர்கழகத்தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அல்லது ஈமெயில் வாயிலாகவோ விரைவாக அனுப்பி வைக்க முடியும்.

இவ்வாறானபொருட்களை ஏற்கனவே உற்பத்தியாக்கி சந்தை வாய்ப்பை பெற்றுள்ளவர்களும் தங்கள் விபரங்களை எமக்கு அனுப்பி வைத்தால் மேலதிக சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க முடியும். தங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் புகைப்படங்கள், தரம், விசேட தன்மைகள் போன்ற விபரங்களையும் தங்களால் வழங்கக்கூடிய தொகை பற்றிய விபரங்களையும் மற்றும் ஏனைய விஷேட தன்மைகள் பற்றிய விபரங்களையும் எமக்கு விரைவாக சமர்ப்பித்தல் வேண்டும் என யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் அறிவித்துள்ளார். யாழ். வணிகர் கழகம் 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியையோ அல்லது jaffnachamberofcommerce@gmail.com என்ற ஈமெயில் முகவரியையோ உற்பத்தியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 222 8593 இலக்க தொலைபேசி வாயிலாக தொடர்பு கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம் அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் நடத்தும் ஓய்வு பெற்ற அதிபர் வி.சிவஞானமோகன் சேவைப் பாராட்டு விழா நாளை பிற்பகல் 3 மணியளவில் நிலைய முன்றலில் நடைபெறும். அராலி ஸ்ரீ சனசமூக நிலையத்தலைவர் ச.மோகனதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# நாவலர் பாலர் கல்வி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி

வடமராட்சி புலோலி மேற்கு திருநாவலூர் கிராமத்தில் அமைந்துள்ள நாவலர் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் நாவலர் இலவசபாலர் கல்வி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

நாவலர் சனசமூக நிலையத்தலைவரும் முன்பள்ளி ஆரம்பப் பிள்ளைப்பருவ முகாமைத்துவ குழுத்தலைவருமான வ.ச.செல்வராசா தலைமயில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் க.தர்மலிங்கம், ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.தில்லைநாதன், உள்ளூராட்சித்திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக புலோலிமேற்கு கிராம சேவையாளர் செல்வி சி.சிவாஜினி, புலோலி மேற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பி.சிவரஞ்சினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:18 சூரி செவ் 5இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:A/L லண்டன்PR<br>தொ.இ: B/6011 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 22<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6029 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 5.5<br>தகைமை/தொழில்:IT பிரான்ஸ் PR<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது.<br>தொ.இ:B/6012 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 21<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6030 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 5<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்O/L சொந்த தொழில்<br>தொ.இ: B/6013 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 58 செவ் 4 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6034 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 42<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6014 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 78 செவ் 7 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6035 |

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# மக்கள் வாழ்விடங்கள் நோக்கி கொத்துக் குண்டுகள் வீசப்பட்டன

## உறுதிபட கூறுகிறார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர்

வடக்கில் கொத்துக் குண்டுகள் வீசப்பட்டுள்ளதை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உறுதிபட தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு உடையார் கட்டு மகா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையத்தை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,வடக்கில் கடந்த காலத்தில் இடம்பெற்ற போரின் போது கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதை பிரித்தானியாவை தளமாக கொண்டியங்கும் த கார்டியன் பத்திரிகை ஆதாரபூர்வமாக செய்தி வெளியிட்டுள்ளதை தொடர்ந்து தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் கூட்டத் தொடரிலும் இது தொடர்பில் பேசப்பட்டுள்ளது.




எனினும் தம்மால் முன்னெடுக்கப்பட்ட போரில் கொத்துக் குண்டுகள் எதுவும் பயன்படுத்தவில்லை என இலங்கை அரசும் அதன் அமைச்சர்களும் மற்றும் இராணுவமும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்து உரை நிகழ்த்திய போதே வடக்கு மாகாண கல்விஅமைச்சர் த.குருகுலராஜா இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப உலக நாடுகள் உதவிகளை செய்துள்ளன. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக பெருமளவு நிதியினை செலவீடுசெய்ய வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது. இருந்த போதிலும் போர் நடந்த காலத்தில் இவ்வாறான பரிந்துரைகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு அதிகளவு நிதி ஆயுதகொள்வனவுக்கு பயன்படுத்தப்பட்டது.

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் பெரும்பாலான பணத்தை போருக்கு செலவிட்டார்கள். நாங்கள் இடம்பெயர்ந்து போகின்ற போது எமது வாழ் இடங்களில் கொத்துக்குண்டுகளை போட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை இலங்கை அரசு தாம் இறுதிப் போரில் கொத்துக்குண்டு எவையும் பயன்படுத்தவில்லை என கூறிவரும் நிலையில்,

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆகியோர் இறுதிப் போரில் கொத்துக்குண்டு இலங்கை இராணுவம் பயன்படுத்தியது உண்மையேனகூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.இதற்கு இலங்கை அரசு எந்த மறுப்புக்களையும் தெரிவிக்கவில்லை என்பதும்குறிப்பிடத்தக்கது. (2-4-281)

# முல்லைத்தீவு மாவட்டத்தில்

# 2 ஆயிரத்து 586 ஏக்கர் நிலம் முப்படையின் வசம்

(பரந்தன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா சிங்கள் பிரதேச செயலக பிரிவைத் தவிர முப்படைகளின் கட்டுப்பாட்டில் 2 ஆயிரத்து 586 ஏக்கர் நிலம் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவல் தெரிவிக்கின்றது.

தரைப்படை, கடற்படை, விமானப்படை,பொலிஸ்ஆகிய தரப்புகளிடமே மேற்படி பரப்பளவு காணிகள் உள்ளன. இதில் பொலிஸாரிடம் அரச காணி இருபது ஏக்கர் மட்டுமே உள்ளது. ஏனையவை முப்படையினரின் வசம் காணப்படுகின்றன.

அந்த வகையில் அரச காணிகள் தரைப்படையினரிடம் 959 ஏக்கரும், கடற்படையினரிடம் 313 ஏக்கரும், விமானப்படையினரிடம் 14 ஏக்கரும், பொலிஸாரிடம் 20 ஏக்கரும் காணப்படுகின்றது.

மேலும் மக்களுடைய காணி அனுமதிப்பத்திரம் உள்ள காணிகளில் தரைப்படையினரிடம் 164 ஏக்கர் காணப்படுகின்றது.

இதனைதவிர தனியார் உறுதிக் காணிகளில் தரைப்படையினரிடம் 737 ஏக்கர் காணியும், கடற்படையினரிடம் 379 ஏக்கர் காணியும் காணப்படுகின்றது.

ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா சிங்கள பிரதேச செயலாளர் பிரிவைத் தவிர ஏனைய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் படையினர் இவ்வாறு காணிகளை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

அதனடிப்படையில் கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 671 ஏக்கர் காணியும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 316 ஏக்கர் காணியும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 141 ஏக்கர் காணியும், துணுக்காய் பிரதே செயலாளர் பிரிவில் 425 ஏக்கர் காணியும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 33 ஏக்கர் காணியும் படையினரிடம் காணப்படுகின்றது.

ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 41 ஆயிரத்து 465 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து முப்பதாயிரத்து 332 பேர் வாழ்கின்றனர். இதில் வெலிஓயா சிங்கள பிரதேச செயல்லாளர் பிரிவைத் தவிர ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்கின்ற மக்களில் பலருக்கு இதுவரையிலும் சொந்தக் காணிகள் இல்லாதிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-312)



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பைந்தமிழ் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா அண்மையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றபோது.... (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

## உருத்திரபுரீஸ்வரர் ஆலயத் திருவிழா

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ள திருவிழா நிகழ்வில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆருத்திரா தரிசனத்துடன் காலை 8 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடை பெறும். மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு திருக் கல்யான வைபவத்தை தொடர்ந்து பூங்காவனத் திருவிழா நடைபெறும். (2-254)

# முதுகில் பலத்த எரிகாயங்களுடன் கடத்தப்பட்ட குடும்பஸ்தர் விடுவிப்பு

## உயிலங்குளம் பகுதியில் சம்பவம்

மன்னார் உயிலங்குளம் சென். பீற்றர் ஆலய பங்கு பணிமனையில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட குடும்பஸ்தர் கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு காயங்களுடன் நொச்சிக்குளம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார். குறித்த குடும்பஸ்தரின் முதுகுப்பகுதியில் பலத்த எரிகாயங்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மன்னார் பள்ளிமுனை தெற்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான எஸ். அன்ரன் டெனி(வயது-38) என்ற குடும்பஸ்தர் கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை உயிலங்குளம் சென். பீற்றர் ஆலய பங்கு பணிமனையில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டிருந்தார்.

குறித்த கடத்தல் குறித்து அவரது மனைவி அன்றிரவு மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினை செய்திருந்தார். குறித்த குடும்பஸ்தர் உயிலங்குளம் சென். பீற்றர் ஆலய பங்கு பணிமனையில் கடமையாற்றி வந்த நிலையில் 29 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் ஆலய பங்கு பணிமனையில்வைத்து கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக அவரது மனைவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குறித்த கடத்தல் குறித்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடத்தப்பட்ட குறித்த குடும்பஸ்தர் கண் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு நொச்சிக்குளம் கிராம பகுதியில் விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த குடும்பஸ்தரின் அவலக்குரலை செவிமடுத்த சிலர் உடனடியாக உயிலங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று காயங்களுடன் காணப்பட்ட பிரஸ்தாப குடும்பஸ்தரை மீட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

குறித்த குடும்பஸ்தரின் முதுகுப்பகுதியில் பலத்த எரிகாயங்கள் காணப்படுகின்றதோடு, குடும்பஸ்தரின் கடத்தல் குறித்து மன்னார் மற்றும் உயிலங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர் ஏன், எதற்காக கடத்தப்பட்டார் என்ற விடயம் இதுவரை வெளியாகவில்லை. இதேவேளை வவுனியாவில் அண்மையில் பிரபல வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்ட நிலையில் இனந்தெரியாத நபர்களால் மீண்டும் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-4-281)

# அன்னாசிக்கன்றுகள் 200 பயனாளிகளுக்கு வழங்கல்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பழப்பயர்ச்செய்கை திட்டத்தின் கீழ் அன்னாசிச் செய்கையை விஸ்தரிக்கும் வகையில் இருநூறு பயனாளிகளுக்கு அன்னாசி செய்கைக்கான அன்னாசிக் கன்றுகள் வங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பழப்பயிர்ச் செய்கையினை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் அன்னாசிச் செய்கையினை விஸ்தரிக்கும் வகையில் 200 பயனாளிகளுக்கு அன்னாசிக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் மாவட்ட விவசாய (விரிவாக்க) திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை இரணைமடு விவசாய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கு 25 ஆயிரம் அன்னாசிக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு செய்கை பண்ணப்பட்டு சிறந்த நிலையில் உள்ள என்றும் மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (2-15)



முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுத் திறனாளி களை ஒன்றிணைத்து செயற்படும் ஒளிரும் வாழ்வு அமைப்பில் அங்கத்தவர்களாக உள்ள 15 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருட்களை உள்ளடக்கிய பொதிகள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினூடாக நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. புலம்பெயர் உறவான பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் அன் பர் ஒருவரின் பிறந்த தினத்தையொட்டி வழங்கப்பட்டுள்ளன.(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)


# குறைந்த ஆளணியுடன் 395 இடங்களில் கழிவகற்றல் நடவடிக்கை முன்னெடுப்பு

## கரைச்சி பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரால் கடந்த மூன்று மாத காலப்பகுதியினுள் 395 இற்கு மேற்பட்ட இடங்களில் கழிவு அகற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக கரைச்சி பிரதேச சபை [illegible]ர் கம்சநாதன் தெரிவித்துள்ளார்.அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில், இச்சபையின் ஆளுகைக்குட்பட்ட 135 இடங்களில் கட்டணம் பெற்று கழிவு அகற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் அரச மற்றும் பொது இடங்களில் எந்தவிதமான கட்டணங்களும் அறவிடப்படாமல் குறித்த பணி முன்னெடுக்கப்படுகின்றது. இதேவேளை இச் செயற்பாடுகள் தொடர்பில் எழுத்துமூல முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிகக்குறைந்த ஆளணியுடன் கழிவகற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதாக அவர் மேலும் கூறினார். (2-309)



கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்திய 13 ஆவது திருக்குறள் மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளாக கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் காலை அமர்வில் நடைபெற்ற நிகழ்வின் போது...

(படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# 15 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் திண்மக்கழிவு அகற்றும் திடல் அமைப்பு

## கரைச்சி பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு



(சோலைநகர்)

கரைச்சி பிரதேச சபையினால் உமையாள்புரம் பரந்தன் பகுதியில் 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் திண்மக் கழிவகற்றும் திடல் அமைக்கப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

கண்டாவளை பிரதேச செயலாளரினால் கரைச்சிப் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணியில் குறித்த திண்மக்கழிவு அகற்றும் திடல் நிறுவப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் பச்சிளைப்பள்ளி உள்ளிட்ட பரந்த நிலப்பரப்பில் நாளாந்தம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் தற்போது இத்திடலில் நாளாந்தம் கொட்டப்படுகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி உள்ளிட்ட கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட எந்தவொரு இடத்திலும் குப்பைகள், கழிவுகள் போடப்படுவது தெரியப்படுத்தப்படின் தகுந்த சட்ட நடவடிக்கை செயற்பாடு மேற்கொள்ளப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உமையாள் புரத்தில் அமைக்கப்பட்டுள்ள இத்திடலில் முன் அனுமதி பெற்று சேகரிக்கப்படும் கழிவுகளை யாரும் இத்திடலில் கொட்டமுடியும்.

கண்டாவளை பிரதேச செயலாளரினால் கரைச்சிப் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 10 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ள திண்மக் கழிவு அகற்றும் திடலுக்குசுற்றுவேலிகள் அமைக்கப்பட்டு நுழைவாயில் கதவு போடப்பட்டு சீராக இயங்கி வருவதாக அவர் தெரிவித்தார். (2-309)




## ஐயனார் வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் துர்நாற்றம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பள்ளி வாசலுக்கு செல்லுகின்ற ஐயனார் வீதியின் நுழைவாயில் குப்பைகள் அதிகளவில் கொட்டப்பட்டு முழுமையாக எரியூட்டப்படாமையால் துர்நாற்றம் வீசுவதுடன் அவ்விடத்தில் இருந்து ஈக்கள் ,கொசுக்கள் பெருக்கெடுத்து கிருமிகளை காவிச் சென்று கிருமி தொற்றுக்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் இவ் விடத்தை சுகாதார பரிசோதகர்கள் நேரில் சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த இடம் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் உள்ளமைகுறிப்பிடத்தக்கது.(2-271)

## உள்வாங்கப்பட்ட சங்கங்களுக்கு 50ஆயிரம் ரூபா சொத்தாகின்றது

### வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



முல்லை. மாவட்டத்தில் உள்ள பத்து சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கும் ஊக்குவிப்பு முன்னெடுப்பொன்று நடைபெற்றுள்ளது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் 2016ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து வழங்கப்பட்டது.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேசங்களில் இருந்தும் பத்து மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் உள்வாங்கப்பட்டு அவற்றுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபா வீதம் பண ஊக்குவிப்பு வழங்கும் முன்னெடுப்பொன்று கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

குறித்த இந்நிகழ்வானது முல்லை. மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் மாவட்ட பணிமனையில் நடைபெற்றது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பத்து சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர் ,செயலாளர் ,பொருளாளர்களும் கலந்து கொண்ட நிகழ்வில் ரவிகரன் உரையாற்றுகையில்,

இவ் ஊக்குவிப்பு முன்னெடுப்பில் உள்வாங்கப்பட்ட ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் சொத்தாகின்றது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கும் அத்தியாவசிய தேவையிலுள்ள வர்களுக்கும் சுழற்சி முறையில் வழங்கி உதவுவதோடு, ஒழுங்கான அறவீடுகளின் மூலம் உங்கள் சங்கங்கள் வளர்ச்சி அடைய வேண்டும்.

எமது மாவட்டத்தில் காணப்படும் 250 இற்கும் மேற்பட்ட கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் இப்படியான ஊக்குவிப்பு முன்னெடுப்புகளை வழங்கவேண்டும் என்பதே எம் நோக்காகிறது.படிப்படியாக ஏனைய சங்கங்களும் அவற்றின் இயங்கு நிலைக்கேற்ப உள்வாங்கப்படும என்று தெரிவித்தார். (2-250-281)

# எமது உறவுகளுக்கு நடந்தது என்ன? எமக்கு விரைவில் தீர்வு தர வேண்டும்

## த.தே.கூட்டமைப்பினரிடம் விளக்கம் கோருகின்றனர் காணாமற் போனோரின் உறவுகள்





போரின்போதும் அதற்குப்பின்னரும் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சரணடைந்த நிலையிலும் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கம் கோரும் முக்கிய சந்திப்பொன்று முல்லைத் தீவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நகரிலுள்ள வீரகத்தி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமானது.

முல்லைத்தீவு உட்பட வன்னியில் பாதிக்கப்பட்டவர்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த விளக்கம் கோருவதற்கான சந்திப்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மநாதன்,சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ் கந்தராசா, முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், அன்ரனி ஜெகநாதன், கந்தையா சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இங்குகருத்து தெரிவித்த பொதுமக்கள், கூட்டமைப்பினர் அனைவரும் ஒன்றாக இணைந்து எமது உறவுகளுக்குஎனன நடந்தது? அவர்கள் எங்கே? என்பதை கண்டறிந்து எமக்கு விரைவில் ஒரு தீர்வைத் தர வேண்டும்.தமது கணவன், பிள்ளைகளை பறிகொடுத்து நாம படும் துன்பங்கள் சொல்லிலடங்காதவை. எனவே எமது உறவுகளை விரைவில் கண்டுபிடிக்க உதவிபுரியுமாறும் கடந்த ஏழு வருடங்களாக நாங்கள் பதிவுகளை மேற்கொள்ளாத இடமே இல்லை. மாறி மாறி ஆட்சிக்கு வரும் அனைத்து தலைமைகளும் எமது பிரச்சினையை தீர்ப்பதாக இல்லை. எமக்கு சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துடன் எமது உறவுகளை கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும். காணாமற போனோரை கணடறியும் அலுவலகம் கொழும்பில் அமைக்கப்படவுள்ளதாக உள ளது. ஆனால் எம்மில் பலர் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள். நாங்கள் இந்த அலுவலகத்திற்காக கொழும்புக்கு அலைந்து திரிய முடியாது. மாறாக அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டததில் உளளமையால்இங்கு அமைப்பதே சறந்தது .தமிழ் பேசக் கூடிய நீதிபதிகள் ,சட்டத்தரணிகளை கொண்டிருக்க வேண்டும். இதற்காக நீங்கள் பாராளுமன்றம்,மாகாணசபை ஆகியவற்றில் கதைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதோடு குறித்த காலத்தில் எமக்கு சிறந்த தீர்வை பெற்றுத்தாருங்கள் என மன்றாட்டமாக கேட்டனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த மக்கள் பிரதிநிதிகள் இதுவரை உங்களுடைய பிரச்சினைகளை அறியாமல் இல்லை. நீங்கள் கூறிய விடயங்களை நாங்கள் கதைக்க வேண்டிய இடங்களில் கதைக்கின்றோம..

நாங்கள் ஒரு கால த்திலும் பின்வாங்க மாட்டோம். உங் களது பிரச்சினை தீர்க்கப்படும் வரை நாங்கள் உங்க ளுக்காக குரல் கொடுப்போம் எனவும் தெரிவித்தனர். (2-281)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—78

# பஞ்சத்தினை தீர்க்க பூச்சிகளை உணவாக்க ஆராய்ச்சி?




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இன்றைய தலைப்பு பலருக்கு அருவருப்பையும் வெறுப்பையும் தரும் என்றால் அது உண்மையே! பூச்சிகளை நாம் உணவாக்கலாமா என்னும் போதே மனதுக்குள் ஒரு நெருடல்,புலால் உண்பதுவே பாவம் என நினைக்கும் பூமியிலிருந்து இப்படியொரு விடயம் பற்றி கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு உள்ளதா என எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் உலகளாவிய நடப்பினை எம்மக்களுக்கு தெரியப்படுத்துவதே எழுதும் இக்கைகளின் நோக்கமாக இருப்பதனால் இது பற்றி கலந்துரையாட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. பூச்சிகள் என்பவை ஒரு வகை விலங்குகளாகும். ஆதலால் இங்கே பூச்சியுணவென்பது விலங்குணவாகும். ஆதலால் ஒரு பக்கம் விலங்குணவு என்பதனால் உண்ணுவதில் தவறில்லை என்பதும் மாறாக அருவருக்கத்தக்க பூச்சிகளை எப்படி நாம் உணவாக்கலாம் என்பதிலிருந்து அதற்கான வாய்ப்பே இல்லை என்பதும் தெளிவாகின்றது. ஆனாலும் உலக நடப்பினை சற்று உள்வாங்கினால் பூச்சிகளை உணவாக்கும் தன்மை பற்றி மேலும் தெரிந்து கொள்ளலாம.

ஏதோ விலங்குணவு, பூச்சியுணவு என மேலே கூறினாலும் இந்த பூச்சிகளை வளர்த்து உணவாக்குவது பற்றி உலகளாவிய ரீதியில் ஆய்வுகள் பல நடந்து கொண்டிருப்பதும் நடந்து முடிந்த ஆய்வுகளின்படி அதிகூடிய விலங்குணவை குறிப்பாக புரதத்தை பெறுவதற்கு பயிர்களை விடவும் இன்னும் கால்நடைக்ளை விடவும் பூச்சிகளை வளர்த்து உணவாக்குவது சிறந்ததாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறாக பூச்சிகளை வளர்ப்பது செலவு குறைவென்பதாலும் அவற்றில் அதிகமான புரதம் காணப்படுவதும் இதற்கு காரணமாகும். காலம் மாறி கோலமும் மாறும் என எண்ணுகின்றீர்களா? உலக உணவு ஸ்தாபனத்தின் தரவுகளின் படி பூச்சியுணவுக்கான மவுசு மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டு செல்வதாக குறிப்பிடப்படுகின்றது.

பூச்சிகளின் சுரப்புக்களை இன்னும் அவற்றுக்காக சேமிக்கப்படும் உணவை குறிப்பாக தேனை நாம் உண்ணுவது தவறாகத் தெரியவில்லை. இங்கே பூக்களிலிருந்து சேகரிக்கப்படும் தேன்சுரப்பு மிகவும் ஜதானதாக இருப்பதனால் அவற்றை தேனீக்கள் தமது வாயுறுப்பினால் உறிஞ்சி அவற்றினது உமிழ்நீர்ச்சுரப்பினால் கலந்து சற்று இறுக்கமானதாக்கி தேன்வதைகளிலே தமது இளம்பூச்சிகளுக்காக சேமித்து வைக்கின்றன. இவற்றினது உமிழ்நீர் கலப்பதனாலும் நீர்த்தன்மை வெகுவாக குறைந்து இறுக்கமானதாக இருப்பதனாலும் அதிக இனிப்பினைக் கொண்டிருப்பதனாலும் தேன் எப்போதும் கெட்டுப் போவதில்லை. நாம் தற்போது பயன்படுத்தும் தேனை பெறுவதற்கு சாதாரணமாக தேன்வதையை பிழிந்து எடுப்பார்கள்.



மலைத்தேனாக இருந்தால் தேனீயை புகையூட்டி அல்லது தேன்வதையை எரியூட்டி இறக்கச்செய்து தேனை பிழிந்தெடுப்பார்கள். இவ்வாறு செய்யும் போது இளம் தேனீக்களும் அவற்றினது புழுக்களும் சேர்ந்தே பிழியப்பட்டு தேனில் வரும். ஆக மொத்தத்தில் சுத்தமான தேன் என்றாலும் அது தேன்வதையை பிழிந்தெடுத்த தேனாகத்தான் இருக்குமே தவிர சுத்தமானதாக இருக்காது. ஆனால் அண்மையில் கண்டுபிடிப்பொன்றில் தேன்வதையை பிழிந்தெடுக்காது தேனீக்களுக்கு எந்த வித தொந்தரவும் கொடுக்காது தேனை புத்திசாதுரியமான முறையில் இலகுவாக பெறப்படுகின்றது. இதற்கான தேன்பெட்டியுடனான சிறப்பாக உருவாக்கப்பட்ட தேன்வதை ரூபா 60.000 -80.000 வரை விலைபோகின்றது.

ஆனால் பூச்சிகளை வளர்த்து உணவாக கொள்வது எமது கலாசாரத்தைப் பொறுத்த வரையிலும் இன்னும் எமது மக்களைப் பொறுத்தவரையிலும் ஒரு அருவருக்கத்தக்க விடயமாக கருதப்படுகின்றது. ஆபிரிக்க நாடுகளில் இந்த நடைமுறை இருப்பதாக தெரியவந்தாலும் பல பூச்சிகள் உணவாக உட்கொள்ளக் கூடியன என ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. அதே நேரத்தில் ஐரோப்பிய நாடுகளான பெல்ஜியம், பிரான்ஸ், மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இவ்வாறான பூச்சிகளின் உணவின் நம்பகத்தன்மை பற்றியும் அவற்றினால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் பற்றியும் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர். பூச்சிகளால் மனிதனுக்கு நோய் ஏற்படுவதற்கான பல வாய்ப்புக்கள் இருந்தும் வேறு வகையான உணவாக உட்கொள்ளக்கூடிய பூச்சிகளை பற்றிய ஆய்வினை முன்னெடுப்பதன் நோக்கம் இலகுவான, விலை குறைவான, சிறந்த புரதச்சத்தை பெறுவதற்காக ஆகும். பயிர்ச் செய்கைக்கு, கால்நடை வளர்ப்பிற்கு ஏற்படும் செலவினத்தை விட பூச்சிகளை வளர்ப்பது குறைவாக இருக்கும் என்பதும் ஒரு காரணமாகும்.

பூச்சிகளை உணவாக கொள்ளும் போது நுண்ணங்கிகளினால் மனிதனுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கின்றது என ஊகிக்கப்படுகின்றது. குறிப்பாக கால்நடைகளில் பிறையோன் எனப்படும் சமநிலையற்ற புரதத்தினால் போவைன் ஸ்பொன்ஜிபோம் என்செபலோபதி (Bovine spongiform encephalopathy) எனும் நோயும் மனிதனில் கிறெயெற்ச்பெல்ட் - ஜகோப் (Creutzfeldt-Jakob Disease) நோயும் ஏற்படுவதாக அறியமுடிகின்றது. மேலும் உணவு மாசடைதல் பற்றிய ஆய்வில் பூச்சிகளை பதப்படுத்தியோ அல்லது பதப்படுத்தாமலோ பயன்படுத்தும் போது உயிரியல் மற்றும் வேதியல் சார்ந்த மாசாக்கிகளின் பாதிப்பு மனிதனுக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாகவே கருதப்படுகின்றது. இது பற்றி விஞ்ஞான உலகம் இன்னும் அலசி ஆராய வேண்டும். இது தவிர பூச்சிகளை வளர்த்து உணவாக்கல் என்பதனை மாற்றி பூச்சிகளை வளர்த்து அவற்றிலிருந்து பெறக்கூடிய நன்மைகளை மட்டுமே உற்றுநோக்கினால் பட்டுப்பூச்சி வளர்ப்பு, தேனீவளர்ப்பு, ஒட்டுண்ணிகள் மற்றும் இரைகௌவிகள் வளர்ப்பு, இன்னும் மகரந்த சேர்க்கையாளர்களை வளர்த்தல், ஏனைய நன்மை தரும் பூச்சிகளை வளர்த்து பயன்பெறுதல் அனைத்தும் இதிலடங்கும்.

கோதுமைமாவில் தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தங்களில் பூச்சிகளின் முட்டைகள் புழுக்கள் கலந்திருக்க வாய்ப்புக்கள் உண்டு. சரியான முறையில் களஞ்சியப்படுத்தாத உணவுப் பொருட்களில் இந்த பிரச்சினை எழ வாய்ப்பிருக்கின்றது. கோதுமை மாவினை அரிக்கும் போது சிவப்பு நிற வண்டு ஒன்று அரிதட்டில் தட்டுப்படும். அதனை என்னவென்று நினைக்கின்றீர்கள். ஒருவகை கோதுமைமாவை உண்ணுகின்ற பூச்சியே அதுவாகும். இவ்வாறு பூச்சிகள் அதிகமாக இருந்தால் நிச்சயமாக அவற்றினது முட்டைகளும் அந்த மாவில் இருக்கும். அப்படியாயின் பாணும் கொத்து ரொட்டியும் பணிசும் இப்பூச்சிகளின் முட்டைகள் மற்றும் இளம்பருவங்களை சேர்த்து அரைத்தெடுத்ததாக இருக்கும் என உங்களது ஊகத்தை எவரும் மறுப்பதற்கில்லை.

இது பற்றிய விரிவான ஆய்வுகள் பல நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அவை பற்றிய முடிவுகள் வரும்போது தெரிந்து கொள்வோம். அதுவரை பூச்சிகளை உணவாக உட்கொள்வது பற்றி நாம் அவசரமாக முடிவெடுக்கத் தேவையில்லை.


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 95

# தென்சீனக்கடல் விவகாரத்தில் ஐ.நா.தீர்ப்பை ஏற்கமாட்டோம்

## சீனா திட்டவட்டம்

(பீஜிங்)

**தென்சீனக்கடல் விவகாரத்தில் ஐ.நா. தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ஏற்க மாட்டோம் என்று சீனா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**



தென் சீனக்கடல் விவகாரம்

சீனாவின் தென்பகுதியில், பசுபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாக அமைந்திருப்பது தென் சீனக்கடல். இது சிங்கப்பூர், தாய்வான் ஜலசந்திக்கு நடுவே இருக்கிறது. உலகின் 3 இல் ஒரு பகுதி கப்பல் போக்குவரத்து, இந்தப் பகுதி வழியே நடைபெறுவதால் இது முக்கியத்துவம் பெறுகிறது.

தவிரவும், இந்தக் கடலின் அடிப்பகுதியில் எண்ணெய், இயற்கை எரிவாயு வளம் இருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்த தென்சீனக்கடலின் பெரும்பகுதியை சீனா உரிமை கொண்டாடுகிறது.

அதுமட்டுமன்றி சர்ச்சைக் குரிய அந்தப் பகுதியில் செயற்கை தீவுகளை அமைத்திருக்கிறது. இது சர்வதேச அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிலிப்பைன்ஸ் வழக்கு

ஆனால் தென்சீனக் கடலில் தங்களுக்கும் பங்கு இருக்கிறது என்று பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருனை, தாய்வான் போன்ற நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன.

ஆனால் சீனாவின் மேலாதிக்கம், சர்வதேச அளவில் கடந்த காலத்தில் கண்டனங்களை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், சீனாவுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் வழக்கு தொடுத்துள்ளது.

இந்த வழக்கை ஐ.நா. சட்டதிட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள தீர்ப்பாயம் விசாரித்து வந்தது.

விசாரணை முடிந்த நிலையில், இந்த வழக்கின் மீது அந்த தீர்ப்பாயம் எதிர் வரும் 12ஆம் திகதி தனது தீர்ப்பை வழுங்கவுள்ளது.

சீனா அறிக்கை

இது தொடர்பாக சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஹாங் லெய் நேற்று முன்தினம் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறி இருப்பதாவது,

இந்த தீர்ப்பாயம், பிலிப்பைன்சின் ஒருதலைப்பட்சமான வேண்டுகோளின்படி அமைக்கப்பட்டதாகும்.

இது தனது இறுதி தீர்ப்பை ஜூலை 12 ஆம் திகதி வழாங்கவுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கிற அதிகார வரம்போ, இந்தப் பிரச்சினையை விசாரிக்கிற அதிகார வரம்போ அந்த தீர்ப்பாயத்துக்கு கிடையாது என்பதை மீண்டும் வலியுறுத்திக்கூறுகிறேன்.

இந்த விவகாரத்தை அந்த தீர்ப்பாயம் விசாரித்திருக்கக்கூடாது. தனது தீர்ப்பை வழுங்கவும் கூடாது.

'ஏற்க மாட்டோம்'

பிலிப்பைன்ஸ் தொடுத்துள்ள இந்த வழக்கின் தீர்ப்பை ஏற்க மாட்டோம். இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம்.

பிலிப்பைன்ஸ் போட்ட வழக்கு, சர்வதேச சட்டத்தை மீறிய செயலாகும்.

இந்த வழக்கை சீனா ஏற்காததும், விசாரணையில் பங்கேற்காததும் சர்வதேச சட்டத்தின்படிதான்.

சீனா தன் நில எல்லை அல்லது கடல் எல்லை விவகாரங்களில் மூன்றாவது நபர் மத்தியஸ்தம் செய்வதை ஒரு போதும் ஏற்காது என அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-10)

# பிரித்தானிய பிரதமர் பதவிக்கு நான் போட்டியிடப்போவதில்லை

## போரிஸ் ஜொன்சன் அறிவிப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலக வேண்டும் என்பதில் முன்னோடியாக செயற்பட்டிருந்த முன்னாள் லண்டன் மேயர் போரிஸ் ஜொன்சன், தான் பிரதமர் பதவிக்கு போட்டியிடபோவதில்லை எனும் அதிரடி முடிவை தெரிவித்துள்ளார்.

போரிஸின் இந்த அதிரடி முடிவு, அனைவரையும் அதிர்ச்சியடைய செய்துள்ளது. மேற்குறித்த முடிவினை அவர், நேற்று முன்தினம்வியாழக்கிழமை மத்திய லண்டனில் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் விளக்கம் அளித்த போது, "எனது சகாக்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் நிலவும் சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு பிரித்தானியாவை நகர்த்திச் செல்லும் பிரதமர் எனும் பதவிக்கு நான் பொருத்தமில்லை என தீர்மானித்துள்ளேன்" என தெரிவித்தார்.

பிரித்தானியாவின் வெளியேற்றம் தொடர்பில் முழு முயற்சியுடன் போரிஸ் செயற்பட்டமையால், அவரே இனி வரும் காலங்களில் பிரதமர் பதவிக்கு போட்டியிடுவார் எனவும், கன்சர்வேட்டிவ் கட்சிக்கு தலைமை தாங்குவார் எனவும் அனைவராலும் கருதப்பட்டது.

போரிஸின் இந்த அறிவிப்பு பிரித்தானியா மற்றும் ஏனைய உலக நாடுகளின் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சமூக வலைத்தளத்திலும் இது தொடர்பில் பல வகையான கருத்துக்கள் பரிமாறப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவின் வெளியேற்றமே, ஸ்ரேலிங் பவுணின் பெறுமதி வீழ்ச்சி, உலக சந்தையில் பாதிப்பு, ஸ்கொட்லாந்தின் சுதந்திரம் பெறும் முயற்சி மற்றும் நடப்பு பிரதமர் டேவிட் கமரூன் பதவி விலக தீர்மானம் மேற்கொண்டமை ஆகிய அனைத்திற்கும் பிரதான காரணமாக அமைந்தது என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## குவைத்தில் தீ விபத்து; 9 பேர் உயிரிழப்பு



குவைத் தென் பகுதியில் 15 கி.மீற்றர் தொலைவில் பர்வானியா என்ற இடத்தில் புறநகர் உள்ளது. அங்கு வெளி நாடுகளில் இருந்து சென்று குடும்பத்துடன் தொழிலாளர்கள் பலர் தங்கியுள்ளனர். அவர்களில் ஆசிய கண்டத்தை சேர்ந்தவர்கள் தங்கியுள்ள குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. முதலில் ஒரு வீட்டில் பிடித்த தீ மளமளவென பக்கத்து வீடுகளுக்கும் பரவியது.

தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில்ஈடுபட்டனர். அவர்களில் 9 பேர் உடல் கருகி பலியாகினர். அவர்களில் 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்தனர். இறந்தவர்களில் ஒரு குழந்தை யும் அடங்கும்.

இவர்கள் தவிர 25 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் தீயணைப்பு படை வீரரும் அடங்குவர். இவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளார். தீ விபத்து எப்படி ஏற்பட்டது என தெரியவில்லை. (இ-10)

## பங்களாதேஷத்தில் பூசாரி வெட்டிக்கொலை

பங்களாதேஷ் நாட்டில் கோயில் பூசாரிகளை குறி வைத்து தாக்கும் தீவிரவாதிகளின் அட்டூழியத்துக்கு நேற்று மேலும் ஒரு பூசாரி பலியானார்.

இங்குள்ள இந்து கோயிலில் பூசாரியாக பணியாற்றிவந்த ஷைமானந்தா(வயது 45) என்பவர் நேற்று அதிகாலை பூஜைக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார். அப்போது, அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று வாலிபர்கள் அவரை வீச்சரிவாளால் துடிதுடிக்க வெட்டிக் கொன்றுவிட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்த கொலை நடந்திருக்கும் விதத்தை வைத்துப் பார்க்கும்போது, இதற்கு முன்னர் நடந்த பூசாரிகள் கொலைக்கு காரணமான உள்ளூர் தீவிரவாதிகளின் கைவரிசையாகவே இந்த சம்பவத்தை பார்க்க வேண்டியுள்ளது என மாவட்ட தலைமை அதிகாரி மஹ்பூபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (இ-10)

## தென்னாபிரிக்காவில் பிரதமர் மோடி உரையாற்றும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள 10,000 பேர் முன்பதிவு


(ஜோகன்னஸ்பெர்க்)

இந்தியப் பிரதமர் மோடி இம்மாதம் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை 5 ஆபிரிக்க நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

மோடி தனது ஆபிரிக்க சுற்றுப்பயணத்தின் போது ஜோகன்னஸ்பெர்க்கில் இந்தியர்கள் மத்தியில் உரையாற்றவுள்ளார். இதுதவிர, மொசாம்பிக் தலைநகர் மப்டோவிலும், தான்சானியா தலைநகர் தார்-எஸ்-சாலம் நகரிலும் இந்தியர்கள் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்றுகிறார்.

இந்நிலையில், பிரதமர் மோடியை வரவேற்கும்வகையில் ஜோகன்னஸ்பெர்க்கில் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் பிரமாண்ட நிகழ்வில் பங்கேற்க இதுவரை 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் முன்பதிவு செய்துள்ளதாக வெல்கம் மோடி கமிட்டியின் தென்னாபிரிக்க தலைவர் ராமன் தவான் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி உரையாற்றும் இந்த நிகழ்ச்சிக்கான முன்பதிவு இரண்டு வாரங்களுக்கு முன்தான் ஆரம்பமானது. அதற்குள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)



# சூறாவளியுடன் மழை; இருளில் மூழ்கிய ஊட்டி



(சென்னை)

**நீலகிரி மாவட்டத்தில் சூறாவளி காற்றுடன் பெய்து வரும் மழையால் 100இற்கும் மேற்பட்ட இடங்களில் மரங்கள் மின்வயர்கள் மீது வேரோடு சாய்ந்து விழுந்தன. இதனால் ஊட்டி நகரம் இருளில் மூழ்கியது.**

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தென் மேற்கு பருவமழை தீவிர மாக பெய்து வருகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் இடைவிடாமல் மழை கொட்டி வருகிறது.

கடந்த 6 நாட்களாக பகல், இரவு என்று பெய்து வரும் மழையால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் முடங்கிக் கிடக்கிறார்கள். சூறாவளி காற்றுடன் மழை கொட்டி வருவதால் 100இற்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்து மின்கம்பங்களில் விழுந்தன.

இதனால் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மின் தடை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்து கொணடே இருப்பதால் மின் வயர்களை சரி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஊட்டி நகரம் கடந்த 2 நாட்களாக மின்சாரம் இன்றி இருளில் மூழ்கி கிடக்கிறது. தொடர் மழை காரணமாக ஊட்டிக்கு சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்து விட்டது. மேலும் பல்வேறு இடங்களில் மண் சரவு ஏற்படும் அபாயம் உள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் பயிரிடப் பட்டிருந்த முட்டைக்கோஸ், பீன்ஸ், உருளைக்கிழங்கு, கரட் உள்ளிட்ட காய்கறிகள் அழுகி வருகிறது. காய்கறி தோட்டங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் செடிகள் அழுகிக் காணப்படுகின்றன.

சாய்ந்து விழும் மரங்களை அகற்றி போக்குவரத்தை சீர்படுத்தவும் மண் சரிவு ஏற்பட்டால் அவற்றை போர்கால அடிப்படையில் எதிர்கொள்ளவும் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது.

இதேபோல் வெள்ள சேத நிவாரண பணிகளை மேற்கொள்ள வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை, நகராட்சி நிர்வாகம், பொலிஸ்துறை, மின்துறை, நெடுஞ்சாலைத் துறை, உள்ளாட்சித்துறை, வனத்துறை ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும் மழைச்சேதம் குறித்த தகவல்களை பெற மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டு 1077 என்ற கட்டணமில்லா சேவை எண் கொடுககப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வெள்ளச் சேதம் குறித்து இந்த எண்ணிற்கு தகவல் தெரிவித்தால் மீட்புப்படையினர் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபடுவார்கள். இதேபோல் மண்சரிவு ஏற்பட்டால் மீட்பு பணயில் ஈடுபட தயார்நிலையில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் உள்ளனர்.

குன்னூர் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 3 மணிவரை சூறாவளி காற்று வீசியது. இதனால் வீடுகளில் கூரைகள் பறந்தன.

மழை தீவிரம் அடைந்தால் பவானி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இதே போல் வால்பாறை, சின்ன கல்லார் பகுதியிலும் நேற்று முன்தினம் மாலை மழை பெய்தது. இரவில் மழை பெய்யவில்லை. ஆனாலும் குளிர்ந்த காற்று வீசியது. மழையின் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது. (இ-10)

# சூரிய சக்தி திட்டங்களுக்கு ரூ.6700 கோடி நிதி உதவி

## இந்தியாவுக்கு வழங்குகிறது உலக வங்கி





பிரதமர் மோடியை உலக வங்கி தலைவர் ஜிம் யாங் கிம் சந்தித்து பேசினார். இதன்போது இந்தியாவில் சூரிய மின்சக்தி விரிவாக்க திட்டங்களுக்கு உலக வங்கி ரூ.6,700 கோடி நிதியுதவி வழங்கும் என அதன் தலைவர் அறிவித்தார்.

**உடன்பாடு கையெழுத்து**

சூரிய மின்சக்தி உற்பத்தி மற்றும் உபயோகத்தை பெருக்குவதை குறிக்கோளாக கொண்டு, இந்தியா தலைமையில் 121 நாடுகளைக் கொண்டு சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டணி என்ற அமைப்பு செயற்படுகிறது.

உலக அளவில் சூரிய மின்சக்தி உபயோகத்தை அதிகரிப்பதற்கு ஒத்துழைக்கும் விதத்தில், சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டணியுடன் உலக வங்கி நேற்று முன்தினம் ஒரு உடன்பாட்டில் கையெழுத்திட்டது. இந்த உடன்பாடு, மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, மின்சார அமைச்சர் பியுஷ் கோயல், உலக வங்கி தலைவர் ஜிம் யாங் கிம் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

**ரூ.6,700 கோடி நிதியுதவி**

அப்போது சூரிய மின்சக்தி விரிவாக்கம் என்னும் இந்தியாவின் இலட்சிய முயறசிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், உலக வங்கி ஒரு பில்லியன் டொலர் (சுமார் ரூ.6,700 கோடி) நிதியுதவி வழங்குவதாக அறிவித்தது.


இந்த நிதியானது, உலக வங்கியின் ஆதரவுடன் செயற்படுத்துகிற கூரையில் சூரிய மினநகடுகள் பொருத்தி சூரிய மின்சக்தி உற்பத்தி செய்தல், சூரிய மின்சக்தி பூங்காக்களுக்கான கட்டமைப்புக்களை உருவாக்குதல், புதுமையான சூரிய மற்றும் கலப்பு ரக மின்உற்பத்தி தொழில்நுட்பங்களை சந்தைக்கு கொண்டு வருதல், சூரிய மின்சக்தியை அதிகமாக உற்பத்தி செய்கிற மாநிலங்களுக்கு தடங்கள் அமைத்தல் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும் என உலக வங்கி கூறியுள்ளது.

**மோடியுடன் சந்திப்பு**

விநியோக கட்டமைப்புடன், கூரைகளில் சூரிய மின்சக்தி பேனல்களை பொருத்தி மின்சாரம் உற்பத்தி செய்கிற திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசும் உலக வங்கியும் 625 மில்லியன் டொலர் (சுமார் ரூ.4,187 கோடியே 50 இலட்சம்) மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இதற்கிடையே பிரதமர் நரேந்திர மோடியை உலக வங்கி தலைவர் ஜிம் யாங் கிம் சந்தித்து பேசினார். அப்போது அவர், இந்தியாவில் தொழில் தொடங்கும் நடைமுறைகளை (குறிப்பாக தளவாட துறையில்) எளிமைப்படுத்தி, அபாரமாக முன்னேற்றம் கண்டு இருப்பதற்காக பிரதமர் மோடியை பாராட்டினார். (இ-10)

# தமிழக அரசுக்கு 4 இலட்சம் கோடி கடன்-கருணாநிதி



தமிழக அரசின் கடன் சுமை ரூ.4 இலட்சம்கோடியை தாண்டி விட்டதாகவும், அதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் பதில் என்னவென்று கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தற்போது, மாநிலங்களின நிதிநிலை குறித்த கையேட்டை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. மாநில அரசுகளின் நிதிப்பற்றாக்குறை தொடர்பாக விரிவாக ஆய்வுசெய்துள்ள ரிசர்வ் வங்கி, இந்தியாவில் நிதிப் பற்றாக்குறை அதிகமுள்ள மாநிலங்களில் தமிழகம் தான் முதலிடத்தில் உள்ளதாகக் கூறியுள்ளது. ஒரு மாநிலத்தின் கடன் அளவை குறைக்க வேண்டும் என்றால், நிதிப்பற்றாக்குறையை குறைக்க வேண்டும். அந்த வகையில் மராட்டிய அரசு வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால், இவ்விடயத்தில் தமிழகம் தோல்வியடைந்து விட்டது. இனிவரும் ஆண்டுகளில் தமிழகத்தின் மொத்த கடன்சுமை அதிகரிப்பதற்குத்தான் இதுவகை செய்யும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான 7ஆவது ஊதியக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மத்திய அரசு ஒப்புக்கொண்டு நேற்று முன்தினம் அறிவித்துவிட்டது. அதைப் பின்பற்றி தமிழகத்திலும் தமிழக அரசின் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு உடனடியாக அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஊதியக்குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழ்நாட்டின் கடன் மேலும் அதிகரிக்கும். நிதி நிர்வாகத்தை அரசு மேம்படுத்தாவிட்டால் அடுத்த சில ஆண்டுகளில் மீளமுடியாத கடன் சுமையில் தமிழகம் சிக்குவது உறுதி. ஆனால், இந்த ஆபத்தில் இருந்து தமிழகத்தைக் காப்பதற்கான எந்த முயற்சியையும் அ.தி.மு.க. அரசு மேற்கொள்ளவில்லை.

**முன்னேற்றம் இல்லை**

கடந்த 5 ஆண்டு ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசு எந்தவகையிலும் முன்னேற்றம் அடையவில்லை. 2011 ஆம் ஆண்டில் ரூ.1.01 இலட்சம் கோடியாக இருந்த தமிழக அரசின் நேரடிக் கடனை இப்போது ரூ.2.47 இலட்சம் கோடியாகவும் மறைமுகக் கடனையும் சேர்த்து ஒட்டு மொத்தக் கடனை ரூ.4.48 இலட்சம் கோடியாகவும் உயர்த்தியதுதான் ஜெயலலிதா அரசின் முதல் சாதனையாகும். 2010ஆம் ஆண்டு ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பேரவையில் இந்தக் கடன் சுமை பற்றி என்ன சொன்னார் தெரியுமா? "இந்த கடன் சுமை எதனால் ஏற்பட்டது? தமிழ்நாடு அரசின் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களான வீதி அமைத்தல், பாடசாலைகள் கட்டுதல், புதிய வைத்தியசாலைகள் தொடங்குதல் போன்ற திட்டங்களில் முதலீடு செய்யப்படுவதற்காக இவ்வளவு பெரிய கடன் பெறப்பட்டதா? இல்லை. அதற்குப் பதிலாக எந்தப் பயனும் இல்லாத வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் இதர இலவசப் பொருட்களுக்காக, இந்தக் கடன் சுமை ஏற்படுத்தப்பட்டுள்ளது" என்று பேசினார். இன்றும் பேரவையின் அவைக் குறிப்பிலே இந்தப் பேச்சு இடம் பெற்றுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (இ-10)


# முதன்முறையாக இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட இரு 'தேஜாஸ்'போர் விமானங்கள் படையில் சேர்ப்பு

(டில்லி)

பாகிஸ்தானின் JF 17 போர் விமானங்களை விட அதிக சக்தி வாய்ந்த இலகு ரக போர் விமானமான தேஜாஸ் முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்டதாகும்.

நீண்டகால தாமதத்திற்கு பின் முதல்முறையாக நேறறு 2 தேஜாஸ் போர் விமானங்கள் இந்திய விமானப்படையில் சேர்க்கப்பட்டன. பெங்களூர் விமானப்படை தளத்தில் ஒப்படைக்கப்பட்ட இந்த 2 விமானங்களையும் இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்கல் நிறுவனமும், ஏரோநாட்டிக்கல் டெவலப்டெண்ட் ஏஜென்ஸியும் (ஏ.டி.ஏ) இணைந்து பல ஆண்டு முயற்சிகளுக்கு பின் உருவாக்கியுள்ளது.

நடப்பு நிதியாண்டில் இது போன்ற மேலும் 6 போர் விமானங்களையும், அடுத்த ஆணடில் 8 விமானங்களையும் தயாரித்து வழங்க இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் திட்டமிட்டுளளது. (இ-10)



கணக்கீடு பகுதி-II விடைகள்

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## பொருளியல் பகுதி-II

Teacher: N.B.Kageetharan, B.A,H.N.Dip in Acc, P.G.Dip in Ed, M.A(Econ) Visiting Lecturer-Technical College, colombo.

01) 1.சார்பு அமையச் செலவு ஏற்படுவதற்கான காரணங்களைப் பொருளியல் ரீதியாகப் பரிசீலிக்குக.
2.உள்ளார்ந்த செலவு-அமையச்செலவு-வெளிப்படையான செலவு போன்றவற்றிற்கிடையிலான வேறுபாடுகளைப் பரிசீலிக்குக.
3.பொருளியலின் நேர்க்கூற்று-நியமக்கூற்று என்பவற்றை வேறுபடுத்துக.
4.ஒரு பொருளாதாரத்தின் பொருளியல் செயற்பாடு என்றால் என்ன என்பதனை ஆராய்க.
(4X5=20 புள்ளிகள்)

02) 1.பொருளியல் ரீதியாக சிந்திக்கும் கருமம் எவ்வாறு வள ஒதுக்கீட்டுத்திறனுடன் தொடர்புபடும் என ஆராய்க?
2)உற்பத்தியில் வினைத்திறன் அற்ற நிலை ஒன்று காணப்படும் நிலையினை PPC ஊடாக விளக்குக.
3)கல்வி முன்னேற்றம் அடைவதால் ஏற்படும் பொருளாதார விளைவினைப் பரிசீலித்து PPC யினூடாக காட்டுக.
4)ஈடுசெய் முதலீடு என்றால் என்ன? இதன் பொருளாதார முக்கியத்த்துவத்தை ஆராய்க!
(4X5=20புள்ளி)

03) 1.குறித்த ஒரு பொருள் பற்றிய தரவுகள் பின்வருமாறு தரப்படுகின்றது
$Qd_{xx}=400-0.5P_x$, $Q5_{xx}=1/2P_x$ மதிப்பிடுக.
1.சந்தைச் சமநிலை யாது?
2.சமநிலையின் போது பொருளாதார மிகை யாது?
3.சமநிலையின் போது கேள்வி நெகிழ்ச்சிக்குணகம் யாது?
(3X3=9 புள்ளிகள்)

2.$Ed_x=400-2P_x$ $Qs_x=100+2P_x$ மதிப்பிடுக
1.சமநிலை விலை தொகையின் போதான Edp, Esp
2.அரசு 100/= வினை நேரில் வரியாக தீர்மானிக்குமாயின் வரிக்குப்பின் நுகர்வோர், உற்பத்தியாளர் மிகை யாது?
3.தேறிய சமூக இழப்பு யாது?
3.வரி விதித்தலின் மிகைச்சுமை என்றால் என்ன?
(மொத்தம் 20புள்ளிகள்)

04) 1.செலவு வழி தேசிய மதிப்பீட்டின் போது சேர்க்கப்படாத விடயங்கள் எவை?
2.வீட்டுத்துறையின் செலவிடக்கூடிய உற்பத்தி-மொத்தத் தேசிய செலவிடக்கூடிய உற்பத்தி என்பவற்றை வேறுபடுத்துக
3.எல்லை நுகர்வு நாட்டத்திற்கும் முதலிட்டுப் பெருக்கிக்கும் (MPC-K) இடையிலான தொடர்பை உதாரணம் மூலம் விளக்குக.
4.தேசியவருமானத்துண்டுப்பிடும்போதுசமநிலைத்தேசியவருமானத்தின்வேறுபாடுஎவ்வாறு அமைகின்றது?
5.உள்நாட்டுச் சேமிப்பை அதிகரிக்கக்கூடிய வழிமுறைகள் எவை?
(5X4=20புள்ளி)

05) 1.தேசிய மதிப்பீடு தொடர்பான 2015ம் ஆண்டின் கற்பனையான தரவுகள் வருமாறு-எல்லாம் மில்லியன்களில்

| | | |
|---|---|---|
| வீட்டுத்துறையின் செலவிடக்கூடிய உற்பத்தி | - | 4000 |
| அரச நடைமுறைமாற்றல் செலவு | - | 200 |
| அரச மூலதன மாற்றல் செலவு | - | 2000 |
| வீட்டுத்துறைச் சேமிப்பு | - | 1200 |
| தனியார் அரச மொத்த முதலீட்டுச் செலவு | - | 6500 |
| அரச வரவு செலவுத்திட்ட கடன்(10%) | - | 3300 |
| சென்மதி நிலுவையின் தேறிய ஏற்றுமதி | - | 100 |
| சென்மதி நிலுவையின் முதலாம் தகு வருமானம் தேறியது | - | 1200 |
| அரசுக்கு கடன் வழங்கி பெற்ற வீட்டுத்துறை வட்டி | - | 120 |
| சர்வதேச இரண்டாம் நிலை வருமான கணக்கு நிலுவை | - | 350 |
| பெறுமானத்தேய்வுகள் | - | 280 |

மதிப்பிடுக
1.மொத்த உள்நாட்டு உற்பத்தி
2.மொத்தத் தேசிய உற்பத்தி
3.தேறிய தேசிய உற்பத்தி, மொத்தத் தேசிய சேமிப்பு
2.மொத்த உள்ளார்ந்த செலவினுள் உள்ளடங்கும் செலவுகள் ஏவை?
3.மறைந்திருக்கும் பொருளாதார நடத்தைகள் என்றால் என்ன?
(மொத்தம் 20 புள்ளி)

06) 1.பணவீக்க இடைவெளி என்றால் என்ன?வரைபடத்தினூடாக விளக்குக
2.மத்திய வங்கியின் முகவர் தொழிற்பாடுகள் எவை?
3.மத்திய வங்கியின் பொருளாதார விலை உறுதி, நிதியியல் உறுதி போன்றவற்றை ஏற்படுத்தப் பயன்படும் கருவிகள் எவை?
4.பின்வரும் விடயங்களின் கீழ் வங்கிப்பணிகளை ஆராய்க?
அ)வைப்புப் பணிகள்
ஆ)கொடுகடன் பணிகள்
இ)ஏனைய பணிகள்
(மொத்தம் 20புள்ளிகள்)

07) 1.வணிக வங்கிகளின் "இடர்நேர்வு முகாமைத்துவம்" என்றால் என்ன? அவ்வாறான முகாமைத்துவங்கள் 7 தருக?
2.வணிக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் எவை?இதன் வீதம் எவ்வாறு மதிப்பிடப்படும்?
3.கடன்தரப்படுத்தல் என்றால் (Credit Rating) என்றால் என்ன? இதனை வழங்கும் நிறுவனங்கள் எவை?
4.உயர்வலுப்பணம் எவ்வாறு பணப்பெருக்கிகளை உருவாக்குகின்றன என ஆராய்க?
(4X5=20புள்ளிகள்)

08) 1.வறுமைத் தணிப்புத்தந்திரோபாயத்தில் அரசின் வகிபாகங்கள் எவ்வாறு அமையலாம் எனக்காட்டுக
2. 2012,2013,2014 இல் அரச வருமானம் பற்றிய போக்கினைக் காட்டுக?
3.சந்தைத் தோல்விக்கான ஆறு காரணங்களைக் காட்டுக
4.வருமான மற்றும் விலைமட்டத் தளம்பல்களிற்கு எதிராக எவ்வாறு பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடியும்?

09) 1.சென்மதி நிலுவை அட்டவணையின் கற்பனையான மாதிரி ஒன்றைக் காட்டுக
2.இலங்கையின் கடந்த 5 ஆண்டுகளாக வர்த்தக நிலுவையில் பாரிய பற்றாக்குறை நிலவுவதற்கான காரணங்கள் எவை?
3.நல்லாட்சி என்பதனுள் உள்ளடங்கும் எட்டு விடயங்களும் எவை?
4.இலங்கையில் கடந்த இரு ஆண்டுகளில் எவ்வாறான மானுட அபிவிருத்திப் போக்குகளை இனம்காண முடிகின்றது? (4X5=20புள்ளிகள்)

10) 1."சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல் பொறிமுறை" என்றால் என்ன?
2."வியாபாரச்சூழல்" என்றால் என்ன?இதன் பகுதிகளை வரைபடத்தினூடாகக் காட்டுக.
3.தங்கிவாழ்வோர் அதிகரிப்பின் பொருளாதார விளைவுகளைப் பரிசீலிக்குக.
4.அண்மைக்காலங்களில் இலங்கையில் கொண்டு வரப்பட்ட பாரிய வறுமை ஒளிப்புத் திட்டங்கள் எவை? (4X5=20புள்ளிகள்)

## பொருளியல் பகுதி-I விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 11) | 2 | 21) | 1 | 31) | 5 | 41) | 5 |
| 2) | 3 | 12) | 1 | 22) | 4 | 32) | 2 | 42) | 2 |
| 3) | 4 | 13) | 3 | 23) | 5 | 33) | 3 | 43) | 4 |
| 4) | 5 | 14) | 3 | 24) | 2 | 34) | 1 | 44) | 3 |
| 5) | 4 | 15) | 2 | 25) | 2 | 35) | 3 | 45) | 1 |
| 6) | 1 | 16) | 4 | 26) | 4 | 36) | 1 | 46) | 4 |
| 7) | 4 | 17) | 4 | 27) | 4 | 37) | 3 | 47) | 4 |
| 8) | 2 | 18) | 3 | 28) | 1 | 38) | 1 | 48) | 5 |
| 9) | 5 | 19) | 4 | 29) | 3 | 39) | 2 | 49) | 3 |
| 10) | 5 | 20) | 2 | 30) | 2 | 40) | 1 | 50) | 2 |


# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★


## வணிகக்கல்வி பகுதி-I

Teacher: S.K.Balasabesh H.N.Dip-in-Acc P.G.Dip.in Ed

01) ஒருசமுதாயத்தின்விருப்பங்கள்அல்லதுதேவைகளைநிறைவுசெய்யபொருட்களையும்சேவைகளையும் வழங்குகின்ற அதேவேளை இலாபத்தை உருவாக்குகின்றதுமான பதத்தை தெரிவு செய்க.
1.முதலம் நிலைக் கைத்தொழில்
2.இரண்டாம் நிலைக் கைத்தொழில்
3.மூன்றாம் நிலைக் கைத்தொழில்
4.வணிகம்
5.வியாபாரம்

02) பின்வரும் அட்டவணையானது வணிக வகைப்படுத்தல்களின் அடிப்படைகளையும், வணிக வகைகளையும் தருகின்றது.

| வகைப்படுத்தலுக்கான அடிப்படை | வணிக வகைகள் |
|---|---|
| 1.தன்மை or உற்பத்தி மட்டம் | A.விவசாயம்/கைத்தொழில்/ சேவை |
| 2.உற்பத்தி துறைகள் | B.சிறிய/ நடுத்தர/ பாரிய |
| 3.உடைமை | C.முதனிலை/ இரண்டாம் நிலை/மூன்றாம் நிலை |
| 4.நோக்கம் | D.இலாபம் ஈட்டல்/ சேவை வழங்கல் |
| 5.அளவு | E.தனியார்/ பொது |

வகைப்படுத்தலின் அடிப்படைக்கும் வகைகளுக்கும் பொருத்தமான இணைப்பை தெரிவு செய்க.
1) 1A, 2B, 3C, 4D, 5E
2)1A, 2C, 3E, 4D, 5B
3)1C, 2A, 3D, 4E, 5B
4)1C, 2A, 3E, 4D, 5B
5)1B, 2A, 3E, 4C, 5D

03) நவீன தொழில்நுட்ப மீன்பிடித்தல், உபகரணங்களுடன் கூடிய படகுகள் பயன்படுத்தும் வகையில் கொண்டமைந்துள்ள ஆழ்கடல் மீன் பிடித்தலானது ஒரு
1.முதனிலை உற்பத்தி
2.இரண்டாம் நிலை உற்பத்தி
3.மூன்றாம் நிலை உற்பத்தி
4.கட்டளை உற்பத்தி
5.பாய்ச்சல் உற்பத்தி

04) மன்னாரில் சொந்தமாகக் கப்பலொன்றினை வைத்து ஐந்து மீனவர்களை அதில் பணிக்கமர்த்தி ஆழ்கடல் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற விஜய் என்பவர் தனது மீன்களை பதப்படுத்தி தகரத்திலடைத்து தயார்ப்படுத்தும் தொழிற்சாலையொன்றினையும் மன்னாரில் வைத்திருக்கின்றார். மேலதிக மீன்களை வெள்ளவத்தையில் விற்பனை செய்வதற்கான ஒரு நவீன வசதிகளுடனான கடையொன்றினையும்நடத்திவருகின்றார். இவ்விடயத்துடன்தொடர்புடையசரியானதொடர்பை காட்டுவது எது?
1.உற்பத்தி பல்வகைப்படுத்தல்
2.உற்பத்தி கலவை
3.உற்பத்தி சங்கிலி
4.உற்பத்தி சக்கரம்
5.உற்பத்தி முறைமை

05) பாடசலை மாணவர்களை ஏற்றி செல்ல பயன்படுத்தப்படும் கஜனின் வாகனத்திற்கு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஒரு சோடி இறப்பர் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந் நிகழ்வு
1.வசதிப்பண்ட வகைகளுக்குரியதாகும்
2.கடைப்பண்ட வகைகளுக்குரியதாகும்
3.விசேடப் பண்ட வகைகளுக்குரியதாகும்
4.வணிகப் பண்ட வகைகளுக்குரியதாகும்
5.நாடாப்பண்ட வகைகளுக்குரியதாகும்

06)இலங்கை அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கை எது?
1.கைத்தொழிலை பன்முகப்படுத்தல்
2.தனிப்பட்ட துறை ஒத்துழைப்புடன் ஏற்றுமதியை அடிப்படையாக கொண்டமைந்ததாகும்
3.கைத்தொழிலின் அடிப்படையை விரிவாக்கம் செய்தல்
4.பிரதேச ரீதியான அபிவிருத்தி
5.பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் சிறப்பாக பயன்படுத்தல்

மிகுதி திங்கட்கிழமை வெளிவரும்

## பொருளியல் பகுதி-I நேற்றைய தொடர்ச்சி...

25)பொருளாதாரமொன்று உயர் மட்டத்திலான கேள்வித் தூண்டல் பணவீக்கத்தை அனுபவிக்குமாயின் எத்தகைய கொள்கை பொருத்தமானதாக அமையும்
1.அரச செலவை குறைத்தல்,வரிகளை அதிகரித்தல் மற்றும் வட்டிவீதங்களை குறைத்தல்
2.அரச செலவை குறைத்தல்,வரிகளை அதிகரித்தல் மற்றும் வட்டி வீதங்களை அதிகரித்தல்
3.அரச செலவை அதிகரித்தல், வரிகளை குறைத்தல் மற்றும் வட்டி வீதங்களை அதிகரித்தல்
4.அரச செலவை அதிகரித்தல், வரிகளை குறைத்தல் மற்றும் வட்டி வீதங்களை குறைத்தல்
5.அரச செலவை குறைத்தல்,வரிகளை குறைத்தல் மற்றும் வட்டிவீதங்களை குறைத்தல்

26)அண்மைய ஆண்டுகளில் நட்டத்தில் இயங்கி வருகின்ற பொது வணிகங்களை உள்ளடக்கும் தொகுதி
1.இலங்கை வங்கி,தேசிய சேமிப்பு வங்கி,அரச மரக்கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகார சபை
2.இலங்கை கனியமணல் கம்பனி, றுகுணு அபிவிருத்தி வங்கி,வரையறுக்கப்பட்ட மில்கோ, தனியார் கம்பனி
3.இலங்கை டெலிகொம் கம்பனி,விமான நிலைய விமான சேவைகள் கம்பனி,மக்கள் வங்கி
4.இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,தேசிய நீர்வழங்கல் சபை, துறைமுக அதிகார சபை, இலங்கை போக்குவரத்துச்சபை
5.இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச்சபை,இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி.

27)பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றுக்களை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க?
a.பொருளியலில் உற்பத்தி செலவு என்பது எல்லாப் பொருளாதார வளங்களின் அமையச் செலவாகும்.
b.அமையச் செலவு என்பது ஒரு மெய் ரீதியான எண்ணக்கருவாகும்.
c.அமையச் செலவினுள் வெளிவாரிச்செலவு உள்ளடங்கும்.
d. அமையச் செலவு நேர்க்கணியப் பெறுமானத்தைக் கொள்ளும் பொருட்கள் பொருளாதாரப் பண்டம் எனப்படும்
1.a,b 2.a,b,c 3.a,b,c,d 4.a,b,d 5.a,d

28) வெளித்தள்ளுகை விளைவானது(crowding out effect) எனப்படுவது
1.வட்டிவீத அதிகரிப்பினால் தனியார் முதலீடு வீழ்ச்சியடையும்போது
2.வட்டிவீத அதிகரிப்பானது பணத்திற்கான கேள்வியை குறைக்கும்போது
3.வட்டிவீத வீழ்ச்சியானது சேமிப்பை ஊக்கமிழக்கச் செய்யும்போது
4.வட்டிவீதங்களை அதிகரிக்கும்போது
5.வட்டிவீத அதிகரிப்பினால் அரச முதலீடு வீழ்ச்சியடையும்போது

29) மறைமுக வேலையின்மை (Disguised unemployment) என்பது
1.தொழில்நுட்ப மாற்றங்களால் ஏற்படும் வேலையின்மையாகும்
2.வியாபார சகட ஓட்ட நிலைமைகளினால் ஏற்படும் வேலையின்மையாகும்
3.தேவையான ஊழியர்களை விட அதிக ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்படல்
4.ஊழியர்கள் விருப்பமில்லாமல் பகுதிநேர வேலைகளில் ஈடுபடுதல்
5.ஊழியத்தின் திறன் மட்டத்திற்கு பொருந்தா வேலையில் ஈடுபடல்

30)பொருளாதாரத்தின் வெளிவாரியான உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய அரசும் இணைந்து மேற்கொள்ளக்கூடியதாக நாணயமாற்று இறைக்கொள்கைகள் பொருத்தமுடையதாக இருக்கும்
1.குறிப்பிட்ட இறக்குமதிகள் மீதான தீர்வை குறைத்தல் மற்றும் வட்டி வீதத்தைக் குறைத்து இறக்குமதிகளுக்கு வங்கிகள் கடன் வழங்குவதாக அனுமதித்தல்
2.குறிப்பிட்ட இறக்குமதிகள் மீதான தீர்வையை அதிகரித்தல் மற்றும் வட்டி வீதத்தை அதிகரித்து இறக்குமதிகளுக்கு வங்கிகள் கடன் வழங்குவதை அனுமதித்தல்
3.குறிப்பிட்ட இறக்குமதிகள் மீதான தீர்வையை அதிகரித்தல் மற்றும் வட்டிவீதத்தை அதிகரித்து இறக்குமதிகளுக்கு வங்கிகள் கடன் வழங்குவதை அதைரியப்படுத்துதல்
4.குறிப்பிட்ட இறக்குமதிகள் மீதான தீர்வையைக் குறைத்தல் வட்டிவீதத்தை அதிகரித்தல் மற்றும் நேர்வரிகளை அதிகரித்தல்
5.குறிப்பிட்ட இறக்குமதிகள் மீதான தீர்வையைக் குறைத்தல்,வட்டிவீதத்தை அதிகரித்தல் மற்றும் நேர்வரிகளை குறைத்தல்

31)தற்போது இலங்கையின் பிரதான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நாடுகள்

| இறக்குமதி நாடு | ஏற்றுமதி நாடு |
|---|---|
| 1.ஐக்கிய அமெரிக்கா | ஜப்பான் |
| 2.சீனா | ஐக்கிய அமெரிக்கா |
| 3.இந்தியா | ஐக்கிய இராச்சியம் |
| 4.ரஷ்யா | சீனா |
| 5.இந்தியா | ஐக்கிய அமெரிக்கா |

32)பத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோளாக அமையாதது பின்வருவனவற்றில் எது?
1.மோசமான வறுமையையும் பட்டினியையும் இல்லாதொழித்தல்
2.வேலையின்மையைக் குறைத்தலும் நிறை தொழில் மட்டத்தை அடைதலும்
3.அபிவிருத்திக்காக உலக பங்காளிகளின் உதவியைப் பெறல்
4.பால் சமத்துவத்தையும் மகளிர் வலுவூட்டல்களையும் ஊக்குவித்தல்
5.சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்

33)குடித்தொகை சார் அனுகூலம் (demographic dividend) என்பது ஒரு நாட்டில்
1.சிறுவர் தங்கியிருத்தல் குறைவாகவும் முதியவர் தங்கியிருத்தல் அதிகமாகவும் இருப்பதைக் குறிக்கும்
2.ஊழியப் படையின் பங்குபற்றல் வீதம் குறைவாக இருத்தல்
3.இயங்கும் குடித்தொகை அதிகமாகவும் தங்கியிருப்போர் வீதம் குறைவாகவும் இருப்பதை குறிக்கும்
4.வேலைவாய்ப்பு அதிகரித்து வேலையின்மை குறைதல்
5.இயங்கும் குடித்தொகை குறைவாகவும் இயங்காத குடித்தொகை அதிகமாகவும் இருத்தல்

34)முதுமைச் சுட்டெண் (Index of aging) என்பது பின்வருவனவற்றில் எதனைக் குறித்து நிற்கும்
1)60வயதிற்குமேற்பட்ட முதியோர்எண்ணிக்கையினை 15 வயதுக்குகுறைந்தசிறுவர் சதவீதமாக கூறுதல்
2)15 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கையினை60 வயதிற்கு மேற்பட்ட முதியோர் சதவீதமாகக் கூறுதல்
3)15 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கையினையும் 60 வயதிற்கிடைப்பட்ட சனத்தொகையின் சதவீதமாக கூறுதல்
4)60 வயதிற்கு மேற்பட்ட முதியோர் எண்ணிக்கையினை 15-60 வயதுக்கிடைப்பட்ட சனத்தொகையின் சதவீதமாக கூறுதல்
5)15 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கையினை 15-60 வயதுக்கிடைப்பட்ட சனத்தொகையினை சதவீதமாக கூறுதல்

35)இலங்கையில் தங்கியிருப்போர் வீதம் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?
1)10 வயதுக்கு குறைந்தவர்களையும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களையும் மொத்த சனத்தொகையின் சதவீதமாகக் கூறுதல்
2)15 வயதுக்கு குறைந்தவர்களையும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களையும் மொத்த சனத்தொகையின் சதவீதமாகக் கூறுதல்
3)0-14 வயதிற்கிடைப்பட்டவர்களையும் 65 வயதும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களையும் 15-64 வயதுக்கு இடைப்பட்ட சனத்தொகையின் சதவீதமாகக் கூறுதல்
4) 0-14 வயதுக்கிடைப்பட்டவர்களையும் 65 வயதும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களையும் ஊழியப் படையில் சதவீதமாகக் கூறுதல்
5) வேலையற்றவர்களின் எண்ணிக்கையினை ஊழியப்படையின் சதவீதமாக கூறுதல்

36)மத்திய வங்கியானது பணக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகத் தெரிவு செய்துள்ள ஆரம்ப இடைநிலை இறுதி இலக்குகள் முறையே
1.பண அடித்தளம், திரட்டிய விரிந்த பணநிரம்பல்,விலையுறுதி
2.விலையுறுதி,திரட்டிய பணநிரம்பல்,பண அடித்தளம்
3.திரட்டி விரிந்த பணநிரம்பல், பண அடித்தளம், விலையுறுதி
4.பண அடித்தளம், விலையுறுதி, பண நிரம்பல்
5.பண நிரம்பல், பண அடித்தளம், விலையுறுதி

37)பின்வருவனவற்றுள் நிரம்பல் பக்கக் கொள்கைக்குரிய செயற்பாடாக அமைவது எது?
1.அரசு அரிசி இறக்குமதி மீது வரியை குறைத்தால் வாழ்க்கைச் செலவு குறையும்
2.அரசு மாற்றல் கொடுப்பனவுகளின் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்
3.பொருளாதாரத்தை நிறைதொழில் மட்டத்தை நோக்கி நகர்த்த விரிவாக்க இறைக்கொள்கை அவசியமாகும்
4.பொருளாதார வளர்ச்சியானது பிரதானமாக வெளியீட்டிற்காக ஏற்படும் மொத்தக் கேள்வியின் அதிகரிப்பின் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது
5.வருமான வரிக்குறைப்புக்கள் வேலை செய்வதற்கான ஊக்குவிப்புக்களை அதிகரித்து அதன் மூலம் வேலைவாய்ப்பு மட்டத்தை அதிகரிக்கும்

38)பேண்தகு அபிவிருத்தியின் பிரதான மூலதனங்களைக் கொண்ட தொகுதி யாது?
1.மனித மூலதனம்,இயற்கை மூலதனம்,சமுகமூலதனம்,பௌதீக மூலதனம்
2.இயற்கை மூலதனம்,மனித மூலதனம்,நிதி மூலதனம்,பௌதீக மூலதனம்
3.பொருளாதார மூலதனம்,இயற்கை மூலதனம்,நிதி மூலதனம்,மனித மூலதனம்
4.சமூக மூலதனம்,மனிதமூலதனம்,இயற்கை மூலதனம்,பொருளாதார மூலதனம்
5.சமூக மூலதனம்,இயற்கை மூலதனம்,பொருளாதார மூலதனம்,பௌதீக மூலதனம்

39)ஒரு நாட்டின் சென்மதிநிலுவைப் பற்றாக்குறையொன்றைத் தோற்றுவிப்பதில் செல்வாக்குடைய காரணி
1.நாணயப் பெறுமதியிறக்கம் 2.நாணயத்தின் மிகை மதிப்பீடு
3.சுங்கத்தீர்வை குறைக்கப்படுதல் 4.தாராள வர்த்தகக் கொள்கையைக் கடைப்பிடித்தல்
5.ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துதல்

40)ஒரு நாட்டின் அபிவிருத்தி தொடர்பான புதிய வரைவிலக்கணமொன்றின் அடிப்படையில் பௌதீக வாழ்க்கைப் பண்புத்தரவுச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்படும் கூறுகள் யாவை?
1.வயது ஒரு வருடத்தின்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம்,சிசுமரணவீதம்,எழுத்தறிவு
2.எழுத்தறிவு,சார்பு வருமானப்பரம்பல்,சிசுமரணவீதம்
3.வயது வந்தோர் எழுத்தறிவு,ஆயுட்காலம்,தனிநபர் வருமானம்
4.தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி,ஆயுட்காலம்,சிசுமரணவீதம்
5.தலாவருமானம்,எழுத்தறிவு,சிசுமரணவீதம்


41)"இலங்கையினது குடும்ப அலகுகளுக்கான வருமானக் கினிக்குணகம் 2006/2007இல் 0.49 என்பதிலிருந்து 2009/2010 இல் 0.47 குறைவடைந்துள்ளது" இக்கூற்றின் கருத்து யாது?
1.செல்வம் ஒரு சிலரிடம் குவிந்து காணப்படுகின்றது
2.அரசாங்கத்துறை உற்பத்திகள் தனியார் துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது
3.கினிக்குணகத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் லோறன்ஸ் வளையியின் வலப்பக்க நகர்வு
4.அரசின் வறுமைத்தணிப்புத் திட்டங்கள் விருத்தியடையவில்லை
5.அரசாங்கம் வறியவர்களுக்குச் சார்பான செயற்றிட்டங்களில் அதிக கவனம் செலுத்தியமை

42)ஒரு நாட்டின் மொத்த சனத்தொகை 110 மில்லியன் எனவும் சிறுவர்கள்,வயோதிபர்கள் 20 மில்லியன் எனவும் ஆய்வறிக்கைப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.இதில் 5 மில்லியன்பேர் தொழில்தேடுவோராகவும் 5மில்லியன் பேர் தொழில் தருநர்களாகவும் மற்றும் 40 மில்லியன் பேர் சம்பளம் பெறும் ஊழியர்களாகவும் உள்ளனர் என அந்த அறிக்கை கூறுகிறது.இந்நாட்டின் தொழில் இன்மை வீதம்,தொழில் வாய்ப்பிலுள்ளோர் வீதம் என்பவற்றின் சேர்க்கை எது?

| தொழிலின்மை வீதம் | தொழில்வாய்ப்பு வீதம் |
|---|---|
| 1) 5% | 95% |
| 2) 10% | 90% |
| 3) 15% | 85% |
| 4) 20% | 80% |
| 5) 8% | 92% |

43)வணிக வங்கியொன்று 3000 மில்லியன் வைப்புக்களையும் 1800 மில்லியன் காசு ஒதுக்குகளையும் பேணுகின்றன எனக்கருதி தேவைப்படும் காசொதுக்குத் தேவைக்குரிய K-4 எனின் இவ்வங்கியிடமுள்ள மிகை திரவத்தன்மை
1)4000மில் 2)1500மில் 3)500மில்
4)1050மில் 5)1350மில்

44)




X,Y ஆகிய இரு நாடுகள் கையடக்கத்தொலைபேசிகள்,கணனிகள் ஆகிய இரு பண்டங்களை உற்பத்தி செய்கின்றன எனக்கருதுக. இவ் இரு தெரிவுகளையும் குறிக்கும் உற்பத்திச் சாத்திய எல்லைகள் பின்வருமாறு இதன்படி பின்வரும் எக்கூற்று சரியானது
1.இருபண்ட உற்பத்தியிலும் நாடு X முழு நன்மை பெற்றுள்ளது
2.Y நாடு கணனி X நாடு கைத்தொலைபேசி உற்பத்திகளில் முழு நன்மை பெற்றுள்ளன
3.Y நாடு கணனி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையினைப் பெற்றுள்ளது
4.இரு பண்ட உற்பத்தியிலும் Y நாடு ஒப்பீட்டு நன்மை பெற்றுள்ளது
5.X நாடு கையடக்க தொலைபேசி உற்பத்தியில் முழுநன்மையினைப் பெற்றுள்ளது

45)

| | அலகொன்றின் விலை (000) | அலகுகள் (000) | அலகொன்றின் விலை(000) | அலகுகள்(000) |
|---|---|---|---|---|
| ஆண்டு 1 | 20 | 20 | 25 | 8 |
| ஆண்டு 2 | 40 | 12 | 40 | 6 |
| | ஏற்றுமதி | | இறக்குமதி | |

ஆண்டு ஒன்று ஆண்டு இரண்டுக்கிடையிலான வர்த்தக மாற்று விகிதம் வர்த்தக மீதி என்பன தொடர்பான மிகச்சரியான முடிவுகள்

| வர்த்தக மாற்று விகிதம் | வர்த்தக மீதி |
|---|---|
| 1.முன்னேற்றமடையும் | முன்னேற்றமடையும் |
| 2.வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| 3.முன்னேற்றமடையும் | வீழ்ச்சியடையும் |
| 4.வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| 5.மாற்றமிராது | வீழ்ச்சியடையும் |

46)படித்த இளைஞர்களுக்கிடையே இலங்கையில் உயர் வேலையின்மை நிலவுவதற்கான பிரதான காரணம்
1.குறைந்த மட்டப் பொருளாதார வளர்ச்சி
2.தொழில் புரியும் கால எல்லை கூடுதலாயிருத்தல்
3.படித்த இளைஞர்களுக்கிடையே நிலவும் வெள்ளைக் காற்சட்டைத் தொழில் மனப்பாங்குகள்
4.ஊழியச் சந்தையின் மந்தமான வேலைவாய்ப்பு மட்டங்கள்
5.கிராமியத்துறையில் நிலவும் உயர் அளவினதாக கீழ் உழைப்பு நிலைமைகள்

47) தனியார் துறையினரை முதலீடு செய்யத் தூண்டுவதற்காக ஓர் அரசு பின்வருவனவற்றுள் எக்கொள்கையினை நடைமுறைப்படுத்துதல் கூடாது
1.பாதீட்டு ஆலோசனைகள் மூலம் முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகைகள் வரி விடுதலைகளை வழங்குதல்
2.பணச்சந்தையில் வட்டிவீதக் குறைப்பினைச் செய்தல்
3.அடிப்படைக் கீழ்க்கட்டுமான வசதிகளை விரிவுபடுத்தல்
4.இறக்குமதிகள் தொடர்பான அளவு சார் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்
5.திறமையானதொரு முகாமையின் மூலம் பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்தல்

48)

| உற்பத்தி | மொத்தச்செலவு |
|---|---|
| 0 | 100 |
| 1 | 140 |
| 2 | 170 |
| 3 | 190 |
| 4 | 200 |

இச்செலவு அமைப்பில் உள்ள நிறுவனம் 4 ஆவது உற்பத்தி அலகின் போது எதிர்நோக்கும் சராசரி மாறும் செலவு (AVC)
1) 50 2) 20 3) 10 4) 30 5) 25


49) பின்வரும் தகவல்கள் ஒரு நிறுவனத்தின் உற்பத்திச் செலவு பற்றிய விபரமாகும்
மொத்த மாறும் செலவு ரூபா 7200
சராசரி நிலையான செலவு ரூபா20
சராசரி மொத்தச் செலவு ரூபா 100 எனின்
நிறுவனத்தின் மொத்த வெளியீடு எவ்வளவு?
1) 60 அலகுகள் 2) 72 அலகுகள் 3) 90 அலகுகள் 4) 100 அலகுகள்
5) அதன் வருமானம் தரப்படவில்லை. ஆகவே கண்டுபிடிக்க முடியாது

50)நுகர்வோரின் மெய்வருமான அதிகரிப்பு வாடகைக்காரில் பிரயாணம் செய்வதற்கான கேள்வியை அதிகரிப்பதையும் பொதுப் போக்குவரத்தில் பிரயாணம் செய்வதற்கான கேள்வியை குறைப்பதையும் முன்னெடுத்தது. அப்படியாயின் அது பின்பற்றுவது
1.வாடகைக் காரில் பயணிப்பதும் பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதும் எதிர்க்கணிய குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியை கொண்டது
2.வாடகைக் காரில் பயணிப்பது சாதாரண பண்டமாகவும் பொதுப் போக்குவரத்தில் பயணிப்பது இழிவுப்பண்டமுமாகும்
3.வாடகைக்காரில் பயணிப்பதற்கான கேள்வி வருமான நெகிழ்ச்சியும் பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதற்கான கேள்வி வருமான நெகிழ்ச்சி அற்றதுமாகும்.
4.வாடகைக்காரில் பயணிப்பதும்பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதும் இணைப்புப் பண்டமாகும்
5.வாடகைக் காரில் பயணிப்பது இழிவுப் பண்டமாகும். பொதுப் போக்குவரத்தில் பயணிப்பது சாதாரண பண்டமாகும். ◆◆◆

# பெருநகர அபிவிருத்தித்திட்டத்தில் இந்திய நிறுவனங்களை உள்ளீர்க்க இலங். விருப்பம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)



**கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணம் முழுவதையும் உள்ளடக்கி 15 ஆண்டுகள் இலக்குடன் 44 பில்லியன் அமெரிக்க டொலரில் மேற்கொள்ளும் பெருநகர அபிவிருத்தித் திட்டத்திற்குள் இந்தியாவின் உயர் மட்ட நிறுவனங்களான டாடாஸ் மற்றும் இன்போசிஸ் ஆகியவற்றை உள்ளீர்க்க இலங்கை விருப்பம் வெளியிட்டுள்ளது.**

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, 'டாடாஸ் ஏற்கனவே இங்கு செயற்படுகின்றது. இந்திய வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் தொழிற்றுறை சம்மேளனங்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு இந்திய அரசாங்கத்திடம் நாங்கள் கோரியுள்ளோம்.

ஏற்கனவே நாங்கள் தென்கொரியா மற்றும் ஜேர்மனியுடன் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளோம். இது தொடர்பில் நல்லதொரு பதிலை நாம் பெற்றுள்ளோம். இதே போன்று வெகுவிரைவில் இந்தியாவுடனும் எனது அதிகாரிகள் பேச்சுக்களை நடத்துவர்கள் எனத்தெரிவித்தார்.

'ஜேர்மன் நாட்டின் வர்த்தகப் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு பயணம் செய்தது டன் எம்முடன் தமது தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான ஆர்வத்தையும் வெளிப்படுத்தியது. ஜேர்மனின் சீமன்ஸ் நிறுவனம் போன்ற பல பிரபல நிறுவனங்களும் இதில் கலந்து கொண்டிருந்தன.

தென்கொரியாவின் ஹூண்டாய் போன்ற பல நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கையில் தமது பணிகளை விரிவுபடுத்தியுள்ளன. இதேபோன்று சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் சீன நிறுவனங்களும் தமது பணிகளை இலங்கையில் விரிவுபடுத்தியுள்ளன.

நீர் முகாமைத்துவத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான சாதக பாதகங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக தென்கொரியாவின் நீர் வளமுகாமைத்துவ அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்' என சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார். மேல் மாகாணத்தில் 100,000 வரையான குடிசை வீடுகள் உள்ளனஎனவும்இவற்றுள்68,000 குடிசை வீடுகள் கொழும்பு நகரத்தில் உள்ளதாகவும் இக்குடிசை வீடுகளுக்குப் பதிலாக பெரிய வீடுகளை நிர்மாணிக்கவேண்டிய தேவையுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-10)

# இலங்கையின் பொருளாதாரத்துக்கு எட்கா உடன்பாடு கைகொடுக்குமாம்

## இந்திய நிபுணர்கள் வலியுறுத்து

இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையை (எட்கா) இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இது இலங்கையின் பொருளாதார நலன்களுக்கு ஆதரவாக இருக்கும் எனவும் அனைத்துலக உறவுகள் தொடர்பான இந்திய வல்லுநர்களின் சுயாதீனக் குழு ஒன்று வலியுறுத்தியுள்ளது.

இலங்கையிலிருந்து டில்லிக்குப் பயணமாகிய ஊடகவியலாளர் குழு ஒன்றுடனான சந்திப்பிலேயே இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

இந்தியா- இலங்கை இடையே, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் இலங்கையில் இந்தியப் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் மற்றும் இலங்கையின் உள்ளூர் தொழிற்றுறைகளை இந்தியா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடும் என்கின்ற கருத்து தவறானது எனவும் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டால் இலங்கையின் உள்ளூர் தொழில் வாய்ப்புக்களுக்கு ஆபத்து ஏற்படும் மற்றும் இந்தியர்கள் இலங்கைக்குள் அதிகளவில் பணியாற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்கின்ற கருத்துக்கள் பொய்யானவை என அனைத்துலக உறவுகள் தொடர்பான வல்லுநரும் டில்லியிலுள்ள சுயாதீன அமைப்பான பாதுகாப்புக் கற்கைகள் மற்றும் ஆய்வுகளுக்கான நிறுவகத்தின் தற்போதைய இயக்குநர் நாயகமுமான ஜெயந்த் பிரசாத் தெரிவித்தார்.

'இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கையர்கள் அதிகளவு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்' எனவும் ஜெயந்த் பிரசாத் தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையை எதிர்த்து இலங்கையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் 'அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்டவை' என இலங்கை- இந்திய உறவுகள் தொடர்பான வல்லுநரும் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தென்னாசியக் கற்கைகளுக்கான அனைத்துலக உறவுகள் தொடர்பாக 40 ஆண்டுகளாக விரிவுரையாளராகப் பணியாற்றுபவருமான பேராசிரியர் எஸ்.டி. முனி தெரிவித்தார்.

இலங்கையுடனான இந்த உடன்படிக்கையின் வாயிலாக இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவு மேலும் விரிவுபடுத்தப்படுவதோடு மட்டுமல்லாது, இந்தியாவின் புதிய தொழில்நுட்ப நல்வாய்ப்புக்களுக்குள் இலங்கையையும் உள்ளீர்த்துக் கொள்வதற்கும் உதவும் என பேராசிரியர் முனி சுட்டிக்காட்டியுள்ளார்.

இது போன்ற இரு தரப்பு உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் ஏற்படும் நன்மைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக பங்குதாரர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களை வல்லுநர் குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் உயர் ஆணையாளர் என்.ஜா, ஆய்வாளர் ஜி.சுல்தானா மற்றும் அனைத்துலக உறவுகள் தொடர்பான உயர் மட்ட வல்லுநர் குழுவினரும்இலங்கை ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## வெறுங்கையோடு போகலாமா?

எப்போதும் ஏதும் வாங்கிச் செய்பவர்களிடம் இந்த வீட்டுக் குழந்தைகள் படு பிரியமாக இருப்பதை நாம் நடைமுறையில் காண்கிறோம். குழந்தைகளினால் தொடங்கும் அந்தப் பிரியம், நாளடைவில் பெரியவர்களிடத்திலும் பரவி நல்லதொரு சூழ்நிலையை உருவாக்குகிறது.

அன்றாடமோ, அடிக்கடியோ ஒரு வீட்டிற்குப் போகிறோம்.போகும் போதெல்லாம் ஏதேனும் வாங்கிப் போவது சாத்தியமா? சாத்தியமில்லை தான். ஆனால் எப்போதேனும் ஒருமுறை வாங்கிப்போகலாமே!

சிறு பிள்ளைகள் இருக்கும் வீடுகளுக்கு பிஸ்கட் வாங்கிப் போகலாம். வெண்கள் பெண்களைப் பார்க்கப் போகும் போது காய் கறி வாங்கிப் போகலாம். ஆனால், நீங்கள் மிட்டாய் வாங்கிக் கொடுத்ததில் இருந்து எங்க வீட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் இருமல். உங்களுக்கு ஐந்து ரூபா தான் செலவு. அதனால் எங்களுக்கு ஐம்பது ரூபா செலவு என்று அவர்கள் புகார் படிக்கும் பொருட்களாக இல்லாமல் ஆரோக்கியத்திற்கு உதவும் படியான பொருட்களாக வாங்கிப் போவது நல்லது.

இதை ஒரு வீண் செலவு என்று எண்ணுபவர்கள் தவறு செய்கிறார்கள். அவரவர்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தால் போல் வாங்கிச் சென்றால் போதும். ஓர் அப்பிளை வாங்கிப் போக இயலாத நேரத்தில் ஓர் எலுமிச்சம்பழம் கூடவா வாங்க முடியாமல் போகும்!

ஒரு சில விவஸ்தையற்ற ஜென்மங்கள் இருக்கின்றன. குடும்பத்தோடு போய் நண்பர்கள் வீட்டிலோ , உறவினர் வீட்டிலோ ஒரு வாரம் வரை தங்கும் இந்த ஆத்மாக்கள், அவர்களுக்கு ஏகப்பட்ட செலவுகளை வைத்து விட்டுக் கிளம்பி விடும். ஓர் ஹோட்டலில் அறையெடுத்துத் தங்கினால் கூட எவ்வளவு செலவு என்றெல்லாம் எண்ணிப் பார்த்து அதில் கால் வாசியேனும் பெறுகின்ற ஒரு பொருளை வாங்கிப் போக இவர்களுக்கு மனம் வராது.

மற்றவர்களுக்கு அநாவசியச் செலவு வைக்க நமக்கு எவ்வித உரிமையும் இல்லை.

எவ்வளவு தான் நெருக்கமிருக்கட்டும். உதவிகள் என்பது ஒரு வழிப் பாதையாய் இருந்தால் அந்த உறவின் முடிவு மனக் கசப்பாகத் தான் இருக்கும்.

நாம்ஒன்றை வாங்கிப்போகஅதற்குஇணையாக ஒன்றை அவர்கள் பின்னர் வாங்கிவர, கணக்கு நேராகி விட்டாலும், ஆகாவிட்டாலும் பின்விளைவாக நெருக்கம் பரவி அன்பும் நன்மதிப்பும் பெருகும் என்பதை மறுக்க முடியுமா?

சில வசதியற்ற வீடுகளில் நான் பார்த்திருக்கிறேன். நாம் வாங்கிப் போகும் பொருட்களையே தட்டில் கொண்டு வந்து வைப்பார்கள். காரணம் உள்ளே வேறு ஏதும் இல்லை. ஆக, நாம் அவர்களது வறுமையின் மூலம் ஏற்பட்ட இக்கட்டை நாம் போக்கியவர்கள் ஆகிறோம்.

பேச்சுவாக்கில் நாம் தேடிப் போகும் வீட்டினருக்கு என்ன பிடிக்கிறது. அந்த வீட்டின் சிறு அத்தியாயத் தேவைகளுள் எதை நம்மால் பூர்த்தி செய்ய முடியும் என்பது போன்ற கேள்விகளை எழுப்பி அதற்கு ஏற்ப பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டும்.

அத்தகைய பொருட்கள் கண்ணெதிரேயே அமர்ந்து நம்மைப் பற்றிய நினைவுகளைப் பார்வையில் பதிப்பதோடு அவர்களது உள்ளத்திலும் நல்ல எண்ணங்களைப் பதிக்க காரணமாக அமைந்து விடும்.

**லேனா தமிழ்வாணன்**

# வீட்டை கையளிக்காதது ஏன்? விளக்குகிறார் ரங்கே பண்டார

கடந்த ஆட்சியின்போது மின் சக்தி இராஜாங்க அமைச்சராக விருந்த பாலிதரங்கே பண்டார அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வீட்டினை இது வரை மீளக் கையளிக்கவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானம் தெரிவித்துள் ளது.

மேலும் குறித்த வீட்டிலிருந்த அவரை வெளியேற்ற கொழும்பு கோட்டை நீதிமன்றில் இலக்கம் 56654.05.16ன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், இதற் கமைய குறித்த வீட்டினை மீளக் கைளிக்குமாறு அவரிடம் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போதைய நல்லாட்சியில் திறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கும் பாலித ரங்கே பண்டார இதுவரை நீதிமன்றின் உத்தரவை செவி மடுக்காமல் உள்ளமை பெரும் பிரச்சினையாக உள்ளதாக இலங்கை பெற்றோலியக்கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் இன்னும் தனக்கான வீடு ஒன்று அரசாங்கம் மூலம் கிடைக்கவில்லை என்றும், எனவே அது கிடைக்கும் வரை குறித்த வீட்டில் வசிப்பதற்கு தனக்கு அனுமதி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நீதிமன்றின் உத்தரவு தனக்கு கிடைக்கவில்லை என்றும் பாலித ரங்கேபண்டார தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-01.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.23 | 147.87 |
| பிரிட்டன் | பவுண்ட் | 191.53 | 198.33 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.02 | 165.38 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.77 | 152.71 |
| கனடா | டொலர் | 110.51 | 114.96 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.41 | 111.23 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.66 | 110.61 |
| இந்தியா | ரூபா | 2.1517 | ------- |
| சீனா | யுவான் | 21.8286 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 480.7692 |
| ஓமான் | ரியால் | 377.2678 |
| கட்டார் | ரியால் | 39.8891 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7287 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5464 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 100 | 60 | 80 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 550 | 600 | 550 | 600 | 600 | 600 | 600 |
| தக்காளி | 260 | 380 | 230 | 240 | 240 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 60 | 70 | 80 | 80 | 100 |
| கோவா | 160 | 200 | 100 | 150 | 140 | 160 | 150 |
| கரட் | 280 | 400 | 100 | 260 | 240 | 280 | 300 |
| பூசணி | 120 | 140 | 90 | 80 | 90 | 100 | 200 |
| புடோல் | 80 | 100 | 60 | 80 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 150 | 80 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 140 | 120 | 160 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 90 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 250 | 400 | 150 | 200 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 100 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 100 | 120 | — | — | 150 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 160 | 200 | 120 | 120 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 150 | 200 | 100 | 120 | 120 | 160 | 100 |
| கறிமிளகாய் | 350 | 400 | 250 | 200 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 300 | 400 | 450 | 300 | 500 |
| போஞ்சி | 200 | 200 | 170 | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 5 | 30 | 50 | 50 | — | 60 | — |
| கீரை - 1பிடி | 20 | 30 | 10 | 20 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 200 | 160 | 160 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 300 | — | 160 | — | — | 160 |
| வெங்காயப்பூ | 250 | 20 | 200 | 200 | — | 400 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | — | 80 | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 50 | 40 | 60 | 60 | 50 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கருணா வெளிநாட்டுக்குத் தப்பியோட்டம்! 218

கருணா ஆதரவு படையினர் 300 பேர் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தனர்.

### 2ஆவது நாள் போர்

தொடர்ந்து 2ஆவது நாளாகப்போர் நீடித்தது.

பிரபாகரன் ஆதரவு விடுதலைப்புலிகள் தளபதிகள் ஜெயந்தன், டி.ரமேஷ், பிரபா ஆகியோர் தலைமையின் கீழ் தனித்தனி பிரிவுகளாக பிரிந்து தாக்குதல் நடத்தியதுடன் கருணா ஆதரவுப் படையினரின் முக்கிய மையமாக விளங்கும் வாகரை என்ற இடத்தை நோக்கி முன்னேறினர்.

### கைப்பற்றினர்

தளபதி ஜெயந்தன் தலைமையில் செல்லும் படைப் பிரிவினர் கருணா ஆதரவுப் படையினர் தாக்குதலை முறியடித்துக் கண்டலடி பகுதியைக் கைப்பற்றினர். இந்த இடம் மட்டக்களப்பில் இருந்து வடக்கே 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

பிரபாகரனினால் கிழக்குப் பகுதியின் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்ட டி.ரமேஷ் தலைமையில் மற்றொரு படைப்பிரிவு, வெருகல் ஆறு-மன்கர்னிக்கு இடையேயான கடலேரப்பகுதியில் தாக்குதல் நடத்தியபடி முன்னேறியது.

பாலசேனை என்ற இடமும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. பாலசேனை அருகே தளபதி பிரபா தலைமையிலான மற்றொரு படைப்பிரிவு தாக்குதல் நடத்தியது.

### கருணா படை பின்வாங்கியது

இப்படியாக விடுதலைப் புலிகள் பல்வேறு முனைகளில் இருந்தும் பீரங்கித்தாக்குதல் நடத்தியதால் அதை சமாளிக்க முடியாமல் கருணா படையினர் பின்வாங்கினர். தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மையப்பகுதி முகாம்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில் அவர்கள் பின் வாங்கிச் சென்றதாக கூறப்பட்டது.

2ஆம் நாள் போரில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற தகவல் எதுவும் வெளியாகவில்லை.

### 11 ஆயிரம் பேர் வெளியேற்றம்

போர் நடந்த பகுதியில் உள்ள ஊர்களில் இருந்து மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் கூட்டம் கூட்டமாக வெளியேற்றினர். நீண்ட தூரம் செல்ல முடியாதவர்கள் வீடுகளை காலி கெய்துவிட்டு அருகில் உள்ள பாடசாலைகளிலும் அரச கட்டிடங்களிலும் தஞ்சம் அடைந்தனர்.

11ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றதாகவும் சுமார் 4000ஆயிரம் பேர் பாடசாலைகள் அரச கட்டடங்கள் மற்றும் பாதுகாப்பான இடங்களில் உள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கி இருந்ததாகவும் மட்டகளப்பு மாவட்ட நிர்வாக அதிகாரி புண்ணிய மூர்த்தி கூறினார்.

### கருணா படைகள் சுற்றி வளைப்பு

இருதரப்பு படைகளுக்கும் இடையேயான போர் 3ஆவது நாளாக நீடித்தது.

கருணா ஆதரவு படைகள் வசம் இருந்த கண்டலடி, வாழைச்சேனை, அம்பாறை உள் ளிட்ட சில பகுதிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றி கொண்டு பீரங்கி தாக்குதல் நடத்தியபடி தொடர்ந்து முன்னேறினர். அவர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் திருக்கோவில் அக்கறைப்பற்று பகுதிகளில் இருந்த கருணா ஆதரவுப் படைகள் பின்வாங்கின.

தோபிகாலா காட்டுபகுதியில் கருணா ஆதரவு படைகளை விடுதலை புலிகள் சுற்றி வளைத்தனர்

### தலைமையகம் வீழ்ந்தது

கருணா படைகளுக்கு அடிமேல் அடி விழுந்தது. கிழக்குப் பகுதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் விடுதலைப் புலிகள் கொண்டு வந்தனர்

கருணா படைப்பிரிவின் தலைமையகமான மீனகம் மட்டகளப்பு பகுதியில் செயற்பட்டு வந்தது. அங்கிருந்த வீரர்கள் தப்பி ஓடியதும் உள்ளூர் மக்கள் அந்த அலுவலகத்தை சூறையாடினார்கள். மின்சார ஜெனரேட்டர்கள் மற்றும் மின்னணு கருவிகளை தங்கள் வீடுகளுக்கு அவர்கள் எடுத்து சென்றனர்.

மீனகம் அலுவலகம் இராணுவத்தின் கட்டுப்பாட்டு எல்லையைத் தாண்டிய பகுதியில் இருந்தது.

இதனால் பொதுமக்கள் அதை சூறையாடியதை இராணுவத்தினரால் தடுக்க முடியவில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

### கருணாவுக்கு இராணுவம் ஆதரவு

இந்நிலையில் கருணா தங்களிடம் தஞ்சம் அடைந்தால் அவருக்கு அடைக்கலம் கொடுக்க தயார் என்று இராணுவத் தலைமைத் தளபதி லயனஸ் பலகல்லே அறிவித்தார். ஆனால் கருணா எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை என்றும் அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று இருக்கலாம் என்று பத்திரிக்கையில் செய்தி வெளியாயிற்று. கருணா ஆதரவு பெண் தளபதி ரேணுகா பி.பி.சி (லண்டன்) ரேடியோ தமிழ்ச் சேவை பிரிவுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

தளபதி கருணா அனைத்துப் படைப் பிரிவுகளையும் கலைத்து விட்டார் அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமான 10 மெய்காப்பாளர்கள் மட்டுமே தற்போது அவருடன் இருக்கிறார்



(தொடரும்)

# ரூ.8.503 பில்லியன் வெளிநாட்டுக்கடன்

## பதில் நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**உயர்வட்டி வீதங்களுடன் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களால் நாட்டின் நிதி நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாகத் தெரிவித்த பதில் நிதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, கடந்த மாத இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக்கடன், 8.503 பில்லியன் ரூபாவாக இருந்தது எனவும் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கமானது, சாத்தியமான அளவுக்கு வரியை அதிகரித்துள்ளது. இனிமேல் வரி அதிகரிப்பதற்கான சாத்தியம் இல்லை. பிராந்தியத்தில் இலங்கையிலேயே மிகவும் குறைவான வரி வருமானம் காணப்படுகின்ற நிலையில், அதை அதிகரிப்பதற்கான ஏனைய வழிமுறைகளை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. மொத்தத் தேசிய உற்பத்தியில் 1995 ஆம் ஆண்டு 20.4 சதவீதமாக இருந்த அரச வருமானம் 2014ஆம் ஆண்டில் 11.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தால் முகங்கொடுக்கப்படும், தற்போதைய நிதி நெருக்கடிக்கு அரச வருமானம் குறைவடைந்தமையே பிரதான காரணமாகும். அந்த மோசமான நிலைமைக்கு முன்னைய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். உயர்வட்டி வீதங்களுடன் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களால் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதோடு, கடந்த மாத இறுதியில் மொத்த வெளிநாட்டுக்கடன் 8.503 பில்லியன் ரூபாவாக இருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஐக்கிய இராச்சியம் வெளியேறியமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அபே குணவர்தன, இந்த வெளியேற்றம் நேர்மறையான ரீதியாகவும் எதிர்மறையான ரீதியாகவும் இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்" எனத் தெரிவித்தார்.

"இலங்கையில் வருடாந்த மொத்த உற்பத்தியில் 40 சதவீதமானவை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு செல்கின்றன. அதில், 25 சதவீதமானவை ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்கின்றன. ஐக்கிய இராச்சியத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, ஏற்றுமதித் துறைக்கு இடர்களும் குழப்பங்களும் ஏற்படும். ஆகவே அதன் காரணமாக, இந்த நிலைமையைத் தீர்ப்பதற்கு, ஐக்கிய இராச்சியத்துடன், வேறானதும் தனியானதுமான ஏற்றுமதி, இறக்குமதி ஒப்பந்தமொன்று தேவைப்படுகிறது" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## பொறுப்புக் கூறல் விடயங்களில் இலங்கையை கனடா உற்சாகப்படுத்தும்

### அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கையை கனடா தொடர்ந்தும் உற்சாகப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையின் அடிப்படையில் மொழி, சமயம் மற்றும் இனம் என்பவற்றின் அடிப்படையில் அனைவரும் திருத்திக்கொள்ளும் வகையில் தீர்வு அமைய வேண்டும் என்று கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெல்லி விட்டிங் தெரிவித்துள்ளார். இந்த நிலைமை சமாதானத்துக்கு உதவும்என்று தாம்எதிர் பார்ப்பதாக உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## கடல் பாதுகாப்பு ஆற்றலை வலுப்படுத்த ரூ.2.4 பில்லியன் கொடையாக வழங்கல்

### இலங்கை-ஜப்பான் உடன்பாடு

கடல்சார் பாதுகாப்பு ஆற்றலை முன்னேற்றும் திட்டத்தின் கீழ், இலங்கைக்கு 2.4 பில்லியன்ரூபாவைஜப்பான்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கை கடலோரக் காவற்படை கடல்பாதுகாப்பு ஆற்றலை முன்னேற்றும் நோக்கில் ஜப்பான் இந்த உதவியை வழங்கியுள்ளது.

இதன் மூலம், கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, கடற்கொள்ளை முறியடிப்பு, கடல்கடந்த குற்றங்களை தடுத்தல், கடல்வளங்கள் அழிக்கப்படுவதை தடுத்தல் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு, இலங்கை கடலோரக்காவற்படைக்கு இரண்டு ரோந்துக் கப்பல்கள் வாங்கப்படவுள்ளன. இந்த இரண்டு ரோந்துக் கப்பல்களும் 30 எம் ரகத்தைச் சேர்ந்தவையாகும். ஜப்பானில் கட்டப்படும் இந்தக் கப்பல்கள் இலங்கையிடம் ஒப்படைக்கப்படும். அத்துடன் இலங்கை கடலோரக் காவற்படையினருக்கும் ஜப்பான் பயிற்சி அளிக்கவுள்ளது. இந்த கொடையை வழங்குவது தொடர்பான உடன்பாட்டில் நேற்று முன்தினம் இலங்கைகக்கான ஜப்பானிய தூதுவர், கெனிச்சி சுகநுமாவும், இலங்கை நிதி அமைச்சின் செயலாளர் சமரதுங்கவும் கையெழுத்திட்டனர். (இ-10)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 767

Nagendram Home


மது




கமலா




சந்திரன் சிந்து



நிசா



கிசோக்குமார்




துவேனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடக்கு மாகாணத்தில் 315 பேருக்கு நேற்று ஆசிரியர் நியமனம் வழங்கல்




வடக்குமாகாண பாடசாலைகளில் தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புகளுக்கு கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களுக்கான ஆசிரியர் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கணிதபாடத்துக்கு 86 பேருக்கும், விஞ்ஞான பாடத்துக்கு 152 பேருக்கும், ஆங்கில பாடத்துக்கு 77 பேருக்குமாக 315 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டதுடன் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, வட மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடமாகாண கல்வி திணைக்கள பணிப்பாளர் செ.உதயகுமார், வடமாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், வடமாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7.9)

# நல்லாட்சியிலும் சிறுபான்மையினருக்கு அநியாயங்கள் இழைக்கப்படுகின்றன

## கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் விசனம்

நல்லாட்சியிலே சிறுபான்மையினருக்கு தொடர்ந்தும் அநியாயங்கள் இழைக்கப்படுவதாக கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா குற்றம் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலய மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் பொ.நேசதுரை தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் இந்த இடத்தில் சமகால அரசியலையும் சிலாகித்துப் பேச வேண்டியுள்ளது. இந்த நல்லாட்சி பேரளவிலே இருக்கிறதே ஒழிய செயற்பாட்டில் நல்லாட்சியைக் காணோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் விசாரணைக்கு முகம் கொடுத்து வருகின்றார். ரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஹென்றி மஹேந்திரனை விசாரணைக்காக அழைத்துள்ளார்கள்.

தமிழர்களை அழிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட சாலாவ ஆயுதக் களஞ்சியசாலை வெடி விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணமும் இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளது. அப்படியென்றால் கடந்த 25 வருட காலம் ஏற்பட்ட உள்நாட்டின் போர் காரணமாக தமது உயிருடமைகளை இழந்த வடக்கு கிழக்கிலே வாழ்கின்ற சிறுபான்மை இனங்களுக்கு இழப்பீடு வழங்குவது பற்றி ஏன் இந்த நல்லாட்சி அரசினால் இதுவரை சிந்திக்க முடியவில்லை.

கடந்த கால யுத்தத்தை சாட்டாக வைத்து வடக்கு கிழக்கு பிரதேச மக்களின் வீடுகள் பயிர்ச்செய்கை நிலங்கள் காணிகள் படையினரால் கைப்பற்றப்பட்டன. கடந்த வாரம் இராணுவ தளபதி ஊடகங்கள் மூலமாகத் தெரிவித்திருந்த விடயத்திலே இனி இலங்கையில் யுத்தம் ஏற்படாது என்று கூறியிருக்கிறார். இவ்வாறு இருக்கும் போது ஜெனிவாவிலே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தமிழர்களின் காணிகளை 2018 அளவில் விடுவிக்கலாம் என்று கூறியிருக்கிறார். ஆகவே இனிமேல் யுத்தம் வராது என்று கூறினால் தமிழர்களின் காணிகளை ஏன் இன்னமும் பிடித்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

தென்னிலங்கையிலே மக்களுக்குபாதிப்புஏற்பட்டால் உடனடியாக அவர்களின் வீடுகள் திருத்தி கொடுக்கப்படும் பொழுது சிறுபான்மையரின் காணிகளை வீடுகளை முடக்குவதிலே கவனம் செலுத்தபடுகின்றது. இது நல்லாட்சியின் ஒரு தெளிவானபாகுபாடாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

**196**

## ஆசிய–ஆபிரிக்க பட விழாவில் சிறந்த நடிகராக சிவாஜிகணேசன் தேர்வு

*பி.ஆர்.பந்துலு*

கட்ட பொம்மனை திரைப் படமாகத் தயாரிக்க பத்மின் பிக்சர்ஸ் அதிபர் பி.ஆர். பந்துலு விரும்பினார். அதற்கு மகிழ்ச்சியுடன் சிவாஜி சம்மதித்தார்.

நாடகத்துக்கு வசனம் எழுதிய சக்தி கிருஷ்ணசாமி படத்துக்கும் வசனம் எழுதினார்.


கட்டபொம்மன் வரலாற்றை புத்தகமாக எழுதிய சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், திரைக்கதை அமைப்பதற்கு ஆலோசனைகள் கூறினார்.

இசை:ஜி.ராமநாதன். டைரக்‌ஷன்: பி.ஆர்.பந்துலு.

கட்டபொம்மனாக சிவாஜிகணேசன், அவர் மனைவியாக எஸ்.வரலட்சுமி, வெள்ளையத்தேவனாக ஜெமினி கணேசன், வெள்ளையம்மாளாக பத்மினி, கட்ட பொம்மனுக்கு தூக்குத் தண்டனை விதிக்கும் பானர்மேனாக ஜாவர் சீதாராமன் ஆகியோர் நடித்தனர்.

வெள்ளையத்தேவன் வேடத்தில் எஸ்.எஸ்.ராஜேந்திரன் நடிப்பதாக இருந்தது. ஆனால் கட்டபொம்மனுக்கு போட்டிப் படமான சிவகங்கை சீமையில் கதாநாயகனாக நடித்து வந்தார். அதனால் கட்ட பொம்மன் படத்தில் நடிக்க இயலாது என்று கூறிவிட்டார்.

எனவே வெள்ளையத் தேவன் வேடத்தில் நடிக்கும்படி ஜெமினிகணேசனை கேட்டுக் கொண்டார்கள்.



கட்டபொம்மன் படப்பிடிப்பு ஜெய்ப்பூரில் நடந்தபோது சிவாஜி, ஜெமினிகணேசன் ஆகியோருடன் டைரக்டர் பி.ஆர்.பந்துலு.

அப்போது சாவித்தரி நிறை கர்ப்பிணியாக இருந்தார். கட்டபொம்மன் படத்தின் பெரும் பகுதி, ஜெய்ப்பூருல் படமாக்கப்பட்டது. பல நாட்கள் சாவித்திரியை பிரிந்திருக்க வேண்டுமே என்று ஜெமினி யோசித்தார். ஆனால் சாவித்திரி, அண்ணன் (சிவாஜி) நடிக்கும் முக்கியமான படம். என்னைப் பற்றி கவலைப்படாமல் ஜெய்ப்பூருக்கு போய் வாருங்கள் என்றார்.

அதன் பேரில், ஜெமினியும் கட்டபொம்மன் குழுவினருடன் ஜெய்ப்பூர் சென்றனர்.

மத்திய அரசின் அனுமதி பெற்று இந்திய இராணுவத்தின் குதிரைப்படையையும் இராணுவ வீரர்களையும் பயன்படுத்தி சண்டை கட காட்சிகளை ஆங்கிலப் படங்களுக்கு நிகராகப் படமாக்கினார்.

இது டெக்னி கலர் படம். லண்டனுக்கு சென்று பிரிண்ட் எடுத்தார்கள்.

16-05-1959இல் வெளி வந்த வீரபாண்டிய கட்ட பொம்மன் வெள்ளி விழா படமாக அமைந்தது. கட்ட பொம்மனை தன் அற்புத நடிப்பால் நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தினார் சிவாஜி.

பராசக்தி மனோகரா ஆகிய படங்களுக்குப்பிறகு, சிவாஜியின் சிம்மகர்ஜனையை இப் படத்தில் கேட்க முடிந்தது.

வானம் பொழிகிறது பூமி விளைகிறது, உனக்கேன் கொடுப்பது, கிஸ்தி? எங்களோடு வயலுக்கு வந்தாயா? நீர் பாய்ச்சி நெடு வயல் நிறையை கண்டாயா? நாத்து நட்டாயா? கழனி வாழ் உழவருக்குக் கஞ்சிக் கலயம் சுமந்தாயா? அங்கு கொஞ்சி விளையாடும் எம் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப்பணி புரிந்தாயா? என்ற வசனம் ரசிகர்களுக்கு மனப் பாடம் ஆகியது.

**ஆசிய-ஆபிரிக்க பட விழா**

எகிப்து தலைநகரான கெய்ரோவில், ஆசிய- ஆபிரிக்க பட விழா 1960 மார்ச் மாதம் நடை பெற்றது. இதில் இந்தியாவின் சார்பில் வீரபாண்டிய கட்டபொம்மன் கலந்து கொண்டது.

சிவாஜிகணேசன், பத்மினி, பி.ஆர்.பந்தலு மற்றும் சிலருடன் கெய்ரோ சென்று இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

இந்தியாவைப்போல எகிப்தும், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்த நாடு. எனவே, கட்ட பொம்மன் படத்தை எகிப்தியர்கள் கைதட்டி ரசித்தனர்.

(தொடரும்)

## எட்கா உடன்பாட்டை எதிர்த்து

# வைத்தியர்கள் திங்கட்கிழமை அடையாள வேலைநிறுத்தம்

(கொழும்பு)

**எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்படல் மற்றும் மாலம்பே தனியார் வைத்திய கல்லூரியின் மாணவர்களை வைத்தியசாலையில் அனுமதி வழங்குவதற்கு முயற்சித்தல் உள்ளிட்ட ஆறு காரணிகளை எதிர்த்து நாளை மறுதினம் திங்கட்கிழமை வைத்தியர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டமொன்றில் ஈடுபடவுள்ளனர்.**

முதல் கட்ட எச்சரிக்கையாக வைத்தியர்கள் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையில் போராட்டம் நடத்த வுள்ளனர்.

மகப்பேற்று மருத்துவமனைகள், புற்று நோய் வைத்தியசாலைகள் மற்றும் சிறுவர் வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் இந்த போராட்டத்தில் இணைந்து கொள்ளமாட்டார்கள் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் நவிந்த சொய்சா தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் தொடர் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என அவர் ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடல், வெளிநாட்டு பயிற்சிகளை முடித்து வரும் வைத்தியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை வழங்காமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது. (இ-10)

# 30 ஆயிரம் ரூபா மாத வருமானம் பெற்றால் இலவச சட்ட உதவிகள் வழங்கத் தீர்மானம்

## சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

30 ஆயிரம் ரூபா வரையில் மாத வருமானத்தைக் கொண டவர்களுக்கு இலவச அடிப்படையில் சட்ட உதவிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத் தரணி ஜிப்ரி அழகரட்ணம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் 15 ஆயிரம் ரூபா மாத வருமானம் ஈட்டுவோருக்கு மட்டுமே இலவச சட்ட உதவிகள் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த சலுகை மாதம் 30ஆயிரம் ரூபா வருமானம் ஈட்டுவோருக்கும் வழங்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் சட்ட உதவிகளை ஆலோசனைகளை இலவசமாக வழங்குவார்கள் என சங்கத்தின் உப தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் கேகாலையில் 8 ஆயிரம் வீடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய கேகாலை மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவரகளுக்கு 8000 வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் 800 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வீடுகள் அமைக்கும் நடவடிக்கையானது முன்னெடுக்கப்படவுள்ளதாக கேகாலை மாவட்ட அபிவிருத்தி குழு தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக அமைச்சர் மஹிபால ஹேரத், அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் சுஜித சஞ்சய பெரேரா உள்ளிட்டவர்களின் தலைமையின் கீழ் இரண்டு நாட்கள் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்காக அரச யாக்க மற்றும் தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்களின் கீழ் பராமரிக்கப்படும் இடங்கள் குறித்த வீடுகள் அமைப்பதற்காக பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)



# பிரதியமைச்சர் அதிபரைத் தாக்கினார்; ஆசிரியர் தொழிற்சங்கம் முறைப்பாடு

(கொழும்பு)

தற்கொலைக்கு முயன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் முன்னர் பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும, மத்துகம் ஆரம்ப பாடசாலை அதிபரை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. 9 மாணவர்களை முதலாம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரி பிரதியமைச்சர் கடந்த சில நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.



இந்த நிலையில் பாடசாலையின் அதிபரை அவர் தாக்கியுள்ளார். இதனையடுத்து அதிபர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது அவர், பலாத்காரமாக குறித்த 9 மாணவர்களின் பெயர்களையும் பாடசாலை வகுப்பு பதிவேட்டில் பதித்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தற்கொலைக்கு முயன்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பிரதியமைச்சருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாக கொழும்பின் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது. (இ-10)

# செய்தித்துளிகள்

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும். 30 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும் . (இ-5)

## வழிபடுவோர் சபைக்கூட்டம்

சுன்னாகம் தெற்கு ஆதி மயிலிட்டி காசி பூதராயர் ஆலய வழிபடுவோர் சபையின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சுன்னாகம் தெற்கு ஸ்ரீ சிவபூதராயர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் கடந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல், புதிய வருடத்திற்கான நிர்வாக சபைத் தெரிவு, திருவிழா தொடர்பான கலந்துரையாடல், பொது விடயங்கள் கலந்துரையாடல், 2014,2015 வரையான காலப்பகுதிக்குரிய கணக்கறிக்கை சமர்ப்பித்தல் என்பன இடம்பெறும். (இ-5)

## ஹப்புத்தளையில் மினி சூறாவளி

ஹப்புத்தளை, இதல்கஸ்ஹின்ன பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீசிய மினி சூறாவளியினால் ஆறு பேர் காயமடைந்துள்ளதுடன் 10 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரியவருகிறது. அப்பகுதியில் தொடர்ந்தும் கடுங்காற்றுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. (இ-10)

## 10இராணுவத்தினருடன் மாயமான விமானம்

ரஷ்ய நாட்டில் 10 ராணுவ வீரர்களுடன் பயணமான விமானம் ஒன்று நடுவானில் மாயமாகியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சைபீரியாவில் உள்ள Krasnoyarsk என்ற காட்டுத் தீ பரவி வருகிறது.

தீயை கட்டுப்படுத்த Russian IL-76 என்ற மீட்பு விமானத்தில் 10 ராணுவ வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

காட்டுப்பகுதிக்கு சென்ற அந்த விமானம் தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டபோது, திடீரென காணாமல் போயுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி யுள்ளது.

இந்த தகவலை தொடர்ந்து பரசூட்கள் உதவியுடன் சுமார் 100 மீட்பு குழுவை சேர்ந்த வீரர்கள் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருவதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது. (இ-10)

## கனமழையால் 30 பேர் பலி!

இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலத்தில் கனமழைக்கு இதுவரை 30 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பித்தோராகர் பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. சுவா கிராமத்தில் விவசாய பயிர்கள் முற்றிலும் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டு நாசமாகியுள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் 54 மீ.மி மழை பதிவாகியுள்ளது.

தால்-முன்ஸ்யாரி சாலையில் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. 12இற்கு மேற்பட்ட வாகனங்கள் அடித்து செல்லப்பட்டுள்ளன. யமுனோத்ரி தேசிய நெடுஞ்சாலை பாதிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 30 பேர் பலியாகியுள்ளதாகவும் பலர் அடித்து செல்லப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-10)

## கனடாவில் உயர் விருது பெற்ற இரண்டு இலங்கைத் தமிழர்கள்

கனடாவுக்கு குடிபெயர்ந்தவர்கள் மத்தியில் திறமை அடிப்படையில் வழங்கப்படும் ஆர்பிசி25 உயர் விருதுகளில் இலங்கை வம்சாவளி தமிழர்கள் இருவர் உள்ளடங்கி யுள்ளனர். இவர்களுக்கான விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டன. தமது துறைகளில் சிறப்புக்களை பெற்றவர்கள் என்ற அடிப்படையில் இவர்கள் இந்த உயர்விருதுக்கு தெரிவாகியுள்ளார்கள். பிரபல "ரூம்" என்ற நாவலின் ஆசிரியையான டப்ளினில் பிறந்த எமா டொனொக்கும் இந்தவிருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இலங்கையர் இத்தாலியில் கைது

இத்தாலியின் மெசீனா நகரில் வைத்து இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் இலங்கையர்கள் பலரிடம் கொடுத்த பணத்திற்கு வட்டிப்பணம் பெற்றுக்கொண்டிருந்த போதே இத்தாலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யும் போது இவரிடம் வட்டிப்பணம் 250 யூரோக்கள் இருந்ததாகவும், அத்துடன் கடவுச் சீட்டுக்கள் பலவற்றையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரவித்துள்ளனர். மேலும் சந்தேகநபரின் வாகனத்தை சோதனையிட்ட பொலிஸார் அதிலிருந்து கத்தி மற்றும் துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# இலங். உள்ளக விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் விவகாரம்!

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 32ஆவது கூட்டத்தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமர்வில் இலங்கை சார்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் உள்ளக விசாரணைப் பொறிமுறையின் முன்னேற்றம், நல்லிணக்க செயற்பாடுகள், வடக்கில் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கை, காணாமல் போனோர் தொடர்பான விடயங்கள் என பல்வேறு அம்சங்கள் குறித்து விளக்கமளித்துள்ளார்.



அத்துடன், சர்வதேசத்திடம் இலங்கையானது நல்லிணக்க வேலைத்திட்டத்தில் எவ்வாறான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதாவது, இலங்கையானது நீதிப்பொறிமுறை விடயத்தில் சர்வதேச பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு அஞ்சவில்லை. கடந்த காலங்களில் பல விடயங்களில் சர்வதேச பங்களிப்பினை பெற்றுள்ளோம். சர்வதேச பங்களிப்பில் பல தன்மைகள் காணப்படுகின்றன. ஆனால் இவை குறித்து ஆலோசனை செயற்பாட்டிலேயே தீர்மானிக்க முடியும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் தெரிவித்திருக்கிறார்.

நல்லிணக்கப் பொறிமுறையொன்றை அமைப்பதற்காக பிரதமர் அலுவலகத்தினால் நல்லிணக்க செயலகமொன்று நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் நிலைமாறுகால நீதியை பெற்றுக்கொள்வதற்கு ஒரு பொறிமுறை தேவை என பதை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. சிலர் இந்த பொறிமுறை அமைக்கும் செயற்பாடானது தாமதத்திற்கான உபாயம் எனக் கூறுகின்றனர். இது தவறானதாகும். இந்த நல்லிணக்கத்துக்கான செயலகமானது ஏற்கனவே ஆலோசனைகள் வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு இராணுவத்திடமுள்ள பொதுமக்களின் காணிகளும் விடுவிக்கப்பட்டு விடும். அரசாங்கமானது ஜனநாயகம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் ஆகிய மூன்று திட்டங்களின் அடிப்படையில் செயற்படுகிறது. தற்போது புதிய அரசியலமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், இலங்கை சர்வதேச சமூகத்துடன் நம்பிக்கையுடன் செயலாற்றுகிறது. விசேட ஆணையாளர்கள், விசேட அறிக்கையாளர்கள், ஐ.நா. குழுவினர் இலங்கை வந்து செல்கின்றனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது பயணமானது அரப்பணிப்பு, நல்லிணக்கம், அபிவிருத்தி என்பவற்றை நோக்கிச் செல்கின்றது. அடுத்த வருடம் மார்ச் மாதம் நான் இங்கு வரும்போது புதிய இலங்கை கட்டியெழுப்பப்பட்டிருக்கும். எமக்கு உதவுகின்றவர்கள், தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். எமது பயணத்திற்கு பொறுமையுடன் ஆதரவு தருமாறு கோரிக்கை விடுக்கிறோம். சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவோம் என்றும் ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நீதி வழங்குவதற்கான உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டுமென சர்வதேச மட்டத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வரும் நிலையிலேயே இலங்கையின் சார்பில் ஜெனிவாவில் உரையாற்றியிருந்த அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச பங்களிப்பு தொடர்பில் இலங்கை அச்சம் கொள்ளவில்லை எனக்கூறியிருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்னர் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை வளாகத்தில் நடைபெற்ற இலங்கையின் விவகாரம் குறித்தும் உப குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த அமைச்சர் மங்கள சமரவீர, நீதி வழங்கும் பொறிமுறையிலான சர்வதேச பங்களிப்பை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கவில்லை என்று கூறியிருந்த நிலையிலேயே தற்போது அதற்கு சற்று அப்பால் சென்று சர்வதேச பங்களிப்புக்கு அஞ்சவில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதாவது, அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் இவ்வாறு ஆரோக்கியமான முறையில் கருத்து வெளியிடுவது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆனால், இங்கு குறிப்பிட்டு கூற வேண்டிய விடயம் என்னவெனில் அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் ஒன்றைக் கூறிவிட்டு உள்நாட்டு மட்டத்தில் மாற்றமான கருத்தைக் கூறுவதற்கு முற்படக்கூடாது. இவ்வாறு செயற்பட்டால் அரசாங்கத்தின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையில் பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கையற்றுப் போய்விடும். அது மட்டுமன்றி அரசாங்கமானது பாதிக்கப்பட்ட மக்களும் சர்வதேச தரப்பினரும் மனித உரிமை ஆர்வலர்களும் ஏன் உள்ளக விசாரணைப் பொறி றையில் சர்வதேச நீதிபதிகள் இடம் பெற வேண்டுமென கோருகின்றனர் என்பதை ஆழமாக புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது, கடந்த காலங்களில் உள்நாட்டு நீதித்துறையில் தமக்கு உரிய நீதி கிடைக்காததன் காரணமாகவே பாதிக்கப்பட்ட மக்கள் நீதிப்பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பு இடம்பெற வேண்டுமென சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனை அரசாங்கம் புரிந்துகொண்டு நீதி வழங்கும் விசாரணைப்பொறிமுறையில் பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் செய்ற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். இதேவேளை கடந்த புதன்கிழமை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னம் அவசியமாக இடம்பெற வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர்.



அமெரிக்கா, நெதர்லாந்து, கனடா, ஜப்பான், நோர்வே, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கொரியா உள்ளிட்ட நாடுகளும் சிறுபான்மை உரிமைக்கான அமைப்பு, சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு, அனைத்து விதமான அநீதிகளுக்கும் எதிரான அமைப்பு உள்ளிட்ட தரப்புக்களும் உள்ளக விசாரணையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளீர்க்க வேண்டும் என்று ஜெனிவாவில் வலியுறுத்தியுள்ளன.

எனவே, தற்போது உள்ளக விசாரணையின் ஊடாக நீதி வழங்கும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துவரும் அரசாங்கம் அதனை நம்பகரமானதாக உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதாவது பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை வைக்காவிடின் எந்தவொரு நீதி வழங்கும் பொறிமுறையும் வெற்றியடையாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல்ஹுசேனும் சர்வதேச பங்களிப்புடனேயே நீதி வழங்கும் பொறிமுறை நம்பகரமாக அமையும் என்பதில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அதனை தானும் உணர்வதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார். அந்த வகையில், தற்போது இந்த விவகாரத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே காணப்படுகிறது.

இந்த விடயத்தில் அரசாங்கம் எவ்வாறான தீர்மானத்தை எடுத்தாலும் அது நீதி வழங்கும் பொறிமுறையை வலுப்படுத்துவதாக அமைய வேண்டும். விசேடமாக நீதி வழங்கும் பொறிமுறையானது பக்கச்சார்பின்றியும் நம்பகத்தன்மையுடனும் சுயாதீனமானதாகவும் இடம் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கமானது மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் குறிபபிடத்தக்களவு நம்பிக்கை ஏற்படும் வகையில் கடந்த 18 மாத காலத்தில் செயற்பட்டு வருகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

எனவே தொடர்ந்து இந்த நம்பிக்கையை பேணும் வகையில் நல்லாட்சி அரசாங்கம் உள்ளக விசாரணைப் பொறிமுறை விடயத்தில் ஆரோக்கியமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமானதாகும். அரசாங்கம் இந்த விடயத்தில் எந்தளவு தூரம் நம்பகத்தன்மையுடன் செயற்படுகின்றது என்பதை பாதிக்கப்பட்ட மக்களும் சர்வதேச சமூகத்தினரும் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி, அரசாங்கம் நீதி வழங்கும் பொறிமுறையை நம்பகரமான முறையில் முன்னெடுக்கும் என்ற நம்பிக்கையிலேயே சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கி வருகிறது. எனவே, அனைத்து நகர்வுகளும் செயற்பாடுகளும் அரசாங்கத்திற்கு சாதகமாக அமைந்துள்ள நிலையில், அந்த தருணத்தை பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியது தலைவர்களின் பொறுப்பாகும்.

அந்தவகையில், உள்ளக பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை, ஏன் பாதிக்கப்பட்ட தரப்பும் சர்வதேச சமூகமும் கோருகின்றது என்பதை ஆழமான முறையில் புரிந்துகொண்டு அரசாங்கம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கமானது பாதிக்கப்பட்ட மக்களின் பக்கத்திலிருந்து சிந்திக்க வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்

நன்றி-இணையம்

குறைகளை விட அதை திருத்தியமைக்க வழி என்ன என்று கண்டு பிடியுங்கள்.
– ஹென்றிபோர்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அனுமதிக்கத் தவறினால் நடவடிக்கை என்ன?

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தொடரில் கடந்த சில வருடங்களாக இலங்கை விவகாரம் பேசுபடு பொருளாகியுள்ளது.

ஒவ்வொரு தடவையும் இலங்கை அரசுக்கு மனித உரிமைகள் ஆணையம் அறிவுறுத்தல்களை வழங்குகின்ற போதிலும் அவை எதுவும் நடைமுறைக்கு வருவதாகத் தெரியவில்லை.

தேர்தலில் மகிந்த அரசு வீழ்ந்து போனமை உலக நாடுகள் சிலவற்றுக்கு திருப்தியைக் கொடுத்ததன் விளைவாக அந்த நாடுகள் இலங்கை தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் –உரிமை மறுப்புகள் தொடர்பில் எவ்வித கவனிப்பும் செலுத் தாமல் இருப்பதைக் காணமுடிகின்றது?

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் காரணமாக இனிமேல் தமிழர்களின் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்பது போல் குறித்த நாடுகள் இருப்பதால், இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் இறுக்கங்கள் போதுமானதாக இல்லை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இத்தகைய போக்குகள் ஐ.நா மீதான நம்பிக்கையைப் பலவீனப்படுத்தும் என்பதுடன் உலகின் வல்லமை மிக்க நாடுகளின் சுட்டுவிரல்கள்தான் ஐக்கியநாடுகள் சபையையும் இயக்குவிக்கின்றது என்ற முடிவுக்கு இட்டுச்செல்லும். எனவே வன்னிப்போரில் இன அழிப்பு நடத்தப்பட்டமை தொடர்பில் ஐ.நாவின் நடவடிக்கைகள் காத்திரமானதாக இருக்க வேண்டும்.

30 ஆண்டுகால போராட்டத்தின் முடிவில் ஈழத் தமிழினம் அழிக்கப்பட்டது. அந்த மக்களின் வாழ்வியல் என்பது கேள்விக்குறியாக்கப்பட்டது.

விதவைகள், அநாதைகள், அங்கவீனர்கள், காணாமல் போனவர்கள் என்றொரு பட்டியல் ஈழத்தமிழினத்தை சின்னாபின்னமாக்கியது.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தால் அதற்கொரு நடவடிக்கை, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தால் அதற்கு வேறொரு நடவடிக்கை என்பது ஆட்சியில் யார் இருக்கிறார்கள் என்று பார்க்கப்படுகிறதே அன்றி பாதிக்கப்பட்டவர்கள் பற்றி கரிசனை கொள்ளவில்லை என்பது தெட்டத்தெளிவாகின்றது.

உண்மையில் இலங்கையின் ஆட்சியில் யார் இருக்கிறார்கள் என்பது பற்றிய பார்வை தேவையற்றது. மாறாக வன்னிப் போரில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். இன அழிப்பு நடக்கும் அளவில் போர்க் கொடுமை இருந்துள்ளது.

கொத்துக் குண்டுகள் வீசப்பட்டதற்கான தடயங்கள் உள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

போரின் போது பொதுமக்கள், சிறுவர்கள், பெண்கள் மற்றும் போராளிகள் எவ்வாறு நிட்டுரப்படுத்தப்பட்டனர் என்பதற்கு சனல் 4 காணொளி தக்க சான்றாக உள்ளது.

நிலைமை இவ்வாறாக இருக்கின்ற போதிலும் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படுவதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையமோ, அமெரிக்கா போன்ற நாடுகளோ தயாரில்லை.

மாறாக ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் போர்க்குற்ற விசாரணைகளின் போது சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் உறுப்பு நாடுகள் வலியுறுத்துகின்றன.

இருந்தும் இலங்கை அரசு தெட்டத்தெளிவாக சொல்கிறது, போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அப்படியானால் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் உறுப்பு நாடுகளின் வலியுறுத்தல்கள் எந்தளவுக்கு நடக்கப்போகிறது.

இதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள மறுத்தால் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என்ற கேள்விகள் முன்னிற்பது தவிர்க்க முடியாததே.

# தனிமையிலிருந்த முதியவர் மரணம் 3 நாட்களின் பின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நோய்வாய்ப்பட்டு தனிமையிலிருந்த முதியவர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்து மூன்று நாட்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் கொழும்புத்துறை புங்கன்குளத்தை சேர்ந்த அறுபத்து நான்கு வயதுடைய பொன்னுத்துரை சுந்தரலிங்கம் என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இறந்துள்ள நிலையில், நேற்றுக் காலையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர் மேற்படி இடத்தில் நீண்டகாலமாகவே வெளித்தொடர்புகள் எவையும் அற்ற நிலையில் வாழ்ந்து வந்துள்ளார்.

இதனால் அயல் வீட்டாருக்கும் அந்த வீட்டில் என்ன நடக்கின்றதென்று தெரியாமல் இருந்துள்ளது. இதனால் அவர் நோய்வாய்ப்பட்டுள்ளதும் தெரியாமல் இருந்துள்ளது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று குறித்த முதியவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்போது வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் அவரை உடனடியாக வைத்தியசாலையில் யாராலும் அனுமதிக்க முடியவில்லை.

இதன் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளதாக திடீர் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் குறித்த வீட்டில் துர்நாற்றம் வீசியதன் காரணத்தினால் அயலவர்களின் உதவியுடன சடலத்தை மீட்ட பொலிஸார் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் திடீர் விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி முத்துக்குமாரு உதயசிறி மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் வீடுகளில் தனிமையாக வசிப்பதனை அனைவரும் தவிர்த்து கொள்ளுமாறும் அவ்வாறு தனிமையில் வசித்தால் அயலவர்களுடன் அடிக்கடி தொடர்புகளை பேணிவருமாறும் அறிவுறுததப்பட்டுள்ள அதேவேளை, உயிரிழந்த குறித்த முதிய வரை உரிய நேரத்திற்கு வைத்தியசாலையில் அனு மதித்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மாவட்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மிக விழிப்புணர்வுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-5)

# சிங்கப்பூரில் பிரதமர் விசேட உரை

மூன்றாவது தெற்காசிய புலம்பெயர் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் பிரதமர் ரணில வக்கிரமசிங்க கலந்து கொண்டு விசேட உரையாற்ற உள்ளார்.

மூன்றாவது தெற்காசிய புலம்பெயர் மாநாடு எதிர் வரும் 18 மற்றும் 19ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் இடம் பெறவுள்ளது.

இம்மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் உரையாற்றவுள்ளார்.

அத்துடன் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, தெற்காசி யாவில் சட்டம் மற்றும் அமைதி எனும் தலைப்பில் இம் மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

மாநாட்டில் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பங்கேற்பார்கள் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் சிங்கப்பூரின் பிரதிப் பிரதமர் தர்மன் சண்முகரத்தினம், வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் மற்றும் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# விவாதப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திக்கு அருகேயுள்ள சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம்பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டியில் நேற்று 01.07.2016 இல் நடைபெற்ற விவாதப் போட்டி முடிவுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**முதலாம் சுற்று :**

போட்டி 1

யா/இந்துக் கல்லூரி (198 புள்ளிகள்), யா / கொக்குவில் இந்துக் கல்லூரி (202 புள்ளிகள்)

போட்டி 2

யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி (110 புள்ளிகள்), மு/ பாண்டியன்குளம் மத்திய மகா வித்தியாலயம் (197 புள்ளிகள்)

**இரண்டாம் சுற்று :**

**தலைப்பு: மனவ லிமை கிடைப்பது தியானம் பற்றிய அறிவைத் தேடுதலா? இடையறாத தியானப் பயிற்சியாலா?**

மு / பாண்டியன்குளம் மத்திய மகா வித்தியாலயம் (216 புள்ளிகள்), யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி (240 புள்ளிகள்)

**மூன்றாம் சுற்றுக்குத் தெரிவாகிய அணி**

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

**நடுவர்கள்:**

பிரதான நடுவர்: வேலாயுதம் சிவராஜா B.Com, M.A(PDS),Dip.In.coun.Phy

நடுவர் 2: டாக்டர் சிவசங்கர் MBBS (உள வளத் துணை)

நடுவர் 3: பிரம்மகுமாரி அம்பிகா ( கல்கிசை சென் தோமஸ் கல்லூரி ஆசிரியை)

**அடுத்த போட்டி விபரங்கள் (04-07-2016)**

காலை 9.00 - 1.00

போட்டி 1- ஒத்துழைப்பு கிடைக்காமல் போவதற்குக் காரணம் எனது கடந்த காலமா? நிகழ்காலமா?

போட்டி 2- நேர்மையின் அத்திவாரம் சகிப்புத் தன்மையா? சுதந்திரமா? (இ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



கொள்ளை நோயோ பஞ்சமோ வந்து மக்கள் துயருறும் இடங்களில் எல்லாம் நீங்கள் அனைவரும் சென்று அவர்களின் துன்பங்களைத் தணியுங்கள். மிஞ்சினால் அம்முயற்சியில் இறக்கலாம். அதனால் என்ன? உங்களைப் போல எத்தனைபேர் புழுக்களைப் போல் தினமும் பிறக்கவும் இறக்கவும் செய்கின்றனர்? பரந்த உலகிற்கு அதனால் ஆவதென்ன? இறப்பதோ நிச்சயம். அதனால் இறப்பிற்கும் ஒரு பெரிய குறிக்கோளைக் கொள்க. வாழ்க்கையில் ஒருபெரும் குறிக்கோளைக் கொண்டு இறப்பது மிக நல்லது. வாசல்தோறும் இக் குறிக்கோளைப் பரப்புங்கள். அத்னால் நீங்கள் நன்மையடைவதோடு நாட்டுக்கும் நன்மை செய்வீர்கள். நமது நாட்டின் பிற்கால நம்பிக்கைகள் உங்களையே பொறுத்துள்ளன.

ஒன்றும் செய்யாமல் நீங்கள் வாழ்வதைக் காண என் மனம் மிக மிக வருந்துகின்றது. முயற்சியில் ஈடுபடுங்கள். வேலை செய்யுங்கள். தாமதம் வேண்டாம். மரணகாலம் நாளுக்கு நாள் நெருங்கிவருகிறது. பின்னாளில் ஒவ்வொன்றும் உரியகாலத்தில் நடக்கும் என்றெண்ணிச் சோம்பலில் நாளைக் கழிக்காதீர்கள். அந்த வழியால் ஒன்றும் நடைபெறாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# 'புதுத்தோட்ட நாயகனே' இசை இறுவட்டு வெளியீடு

நெல்லியடி கிழக்கு புதுத்தோட்டம் ஸ்ரீ விநாயகப் பெருமானின் புகழ் பாடுகின்ற புதுத்தோட்ட நாயகனே என்ற இசை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வே.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் ஆசியுரையினை நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள் நிகழ்த்தவுள்ளதுடன் வரவேற்பு உரையினை கி.கலைச்செல்வன் வழங்கவுள்ளார்.

இதன்போது நூலினை ஆலய 2ஆம் திருவிழா உபயகாரர் க. வேலாயுதம் வெளியிட்டு வைக்க, செல்ல முத்தூஸ் ரெக்ஸ் ரைல்ஸ் உரிமையாளர் ச. பிறேம்குமார் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

நூல் வெளியீட்டு உரையினை யாழ்ப்பாணம் புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் மேற்கொள்ளவுள்ளார். செ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** யாழ்.பிரதேசத்தில் கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில் பலாலி வீதி, கோண்டாவில் யாழ் வீதி, மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கடவையிலிருந்து தட்டார்தெரு சந்தி வரை, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஒட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப் புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, காதி அபூபக் கர் வீதி, கம்பஸ் லேன், தொழில் நுட்பக்கல்லூரி, பல்கலைக் கழக கல்லூரி, 'ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிரட், அண்ணா மலையான் சிறி இராகவேந்திரா என்ரபி றைசஸ் பிறைவேற் லிமிரட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி. மருதனார்மடம் - யாழ் நுண்கலைப்பீடம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** ஒட்டறுத்தகுளம், வவுனிக்குளம், பாலிநகர், சிவபுரம், செல்வபுரம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், குமுழமுனை, கரி யாலை நாகபடுவான், அன்பு புரம், முழங்கா வில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆதிவிநாயகர் கோவில பிரதேசம், வெளிக்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, கிறிட்டிலிருந்து வவுனியா நகரம், ஓவியா விடுதி, SVR அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# இன்றைய போட்டிகள்

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் நேதாஜி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தீருவில் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட முன்னணிக் கழங்களுக்கிடை யில் நடத்தப்பட்டுவரும் ஹென்றீசியன் சவால்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவுசெண்யூட் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

J.P.L வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் போட்டியில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி சி.சி. விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கு)

# நேதாஜி வெற்றி

அமரர்களான கந்தசாமி குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது -20 தொடரில் நடைபெற்ற போட்டியில் உதயசூரியன் அணியை எதிர்த்து நேதாஜி வி.கழகம் மோதியது.

உதயசூரியன் 17 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 78 ஓட்டங்கள் பெற்றது. உதயசூரியன் சார்பில் சிவகுமார் 12 ஓட்டங்கள், நேதாஜி சார்பில் பிரகாஸ் 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

நேதாஜி அணி 10 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 82 ஓட்டங்கள் பெற்றது. வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நேதாஜி சார்பில் பிரபு 19 ஓட்டங்கள், உதயசூரியன் சார்பில் ராகவன் 3 விக்கெட்டுக்கள் கைப்பற்றினர். நேதாஜி அணி 3விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (கு)

# அமரர் தங்கராசா ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## உதயசூரியன் சம்பியன்







வித்தியானந்தக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இ.தங்கராசா ஞாபகார்த்தமாக வித்தியா விளையாட்டுக்கழகத்தினர் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கடந்த (26 ஆம் திகதி) நடைபெற்ற இறுதிப்போட்டியில் உடுப்புக்குளம் அலை ஓசை அணியினரும் செம்மலை உதயசூரியன் அணியினரும் மோதிக்கொண்டனர்.

போட்டி நேர நிறைவில் இரு அணியினரும் தலா ஒரு கோலினைப் பெற்று சமநிலையை அடைந்தமையால் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் உதயசூரியன் அணியினர் அதிக கோல்களைப் போட்டு வெற்றியை தமதாக்கினர். போட்டியின் ஆட்டநாயகனாக உதயசூரியன் அணியின் மோகனும் சிறந்த கோல் காப்பாளராக அலை ஓசை அணியின் கணேசலிங்கமும் சிறந்த அணியாக இரணைப்பாலை சென். அன்ரனீஸ் அணியும் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வெற்றிக்கிண்ணத்தினை பழைய மாணவர் சங்க செயலாளரும் முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளருமாகிய செ. சிவராசா, பழைய மாணவனும் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய சு.திருஞானம் மற்றும் பழைய மாணவனும் முன்னாள் கோட்டக் கல்வி பணிப்பாளருமாகிய மு. பாலசிங்கம் ஆகியோர் ஒன்றிணைந்து வழங்கிக் கௌரவித்தனர். அத்துடன் போட்டியிட்ட அனைத்து வீரர்களுக்கும் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (கு-302)

# தீருவிலை வென்றது சைனிங்ஸ்



அமரர்களான கந்தசாமி. குகதாஸ், ஜெயலட்சுமி. பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் வி.கழகம் நடத்தும் இருபது -20 தொடரில் நடைபெற்ற போட்டியில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து தீருவில் அணி மோதியது.

தீருவில் 12 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது. தீருவில் சார்பில் திருக்குமரன் 34 ஓட்டங்களையும் சைனிங்ஸ் சார்பில் பிரசாந் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சைனிங்ஸ் அணி 15 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 55 ஓட்டங்களைப் பெற்றது. சைனிங்ஸ் சார்பில் பிரசாந் 13 ஓட்டங்கள். தீருவில் சார்பில் மது 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். சைனிங்ஸ் அணி 1 விக்கெட்டால் வெற்றி பெற்றது. (க)

# கந்தையா துரைராஜா ஞாபகார்த்த கிரிக்கெட்டுக்கு விண்ணப்பிக்குக

அரியாலை சனசமூக நிலைய 67 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கந்தையா துரைராஜா ஞாபகார்த்தமாக நடத்தப்படும் வடமாகாண ரீதியிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்டதாக போட்டி நடைபெறும்.

விண்ணப்பமுடிவுத்திகதி 06.07.2016. போட்டியானது எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகும். சம்பியன் ஆகும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் பின்வரும் தொலைபேசி இலக்களுக்கு தொடர்பு கொண்டு போட்டிக்கு விண்ணப்பிக்கலாம் 077 309 0839, 077 021 0723. (கு)

# இரணைப்பாலை றோ.க.மகா வித்தியின் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## அளம்பில் அணி வெற்றி





வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

முல்லைத்தீவு இரணைப்பாலை றோ.க.மகா வித்தியாலயத்தின் பாடசாலையின் வைர விழாவினை முன்னிட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 19 வயது பிரிவினருக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் அளம்பில் றோ.க.ம.வி.1:0 என்ற கோல் கணக்கில் விசுவமடு ம.வி.இனை வெற்றி கொண்டுள்ளது. (கு)

# ஞானமுருகன், உருத்திரபுரம் சுப்பர் 8இற்கு தகுதி பெற்றது





எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 26.06.2016 நடைபெற்ற சுப்பர் 8 இற்கான தகுதிகாண் போட்டிகளில் முதலாவது போட்டியில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியினை 0:2 என்ற கோல் ரீதியில் ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் 2 ஆவது போட்டியில் வலைப்பாடு சென் ஆன்ஸ் விளையாட்டுக்கழகத்தை பனால்டி மூலம் 3:0 என்ற ரீதியில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் வெற்றியினை தனதாக்கி சுப்பர் 8 தகுதி பெற்றுள்ளன. (கு)

# காலிறுதிக்குள் நுழைந்தது பாஷையூர் சென்.அன்ரனீஸ்



அரியாலை சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்படுகின்ற அணிக்கு 11 பேர் கொண்ட சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார்? உதைபந்தாட்டத் தொடரின் 27.06.2016 நடைபெற்ற போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா வி.கவை 0:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது பாஷையூர் சென். அன்ரனீஸ் வி.கழகம். (கு)

# மாணவி மீது துஷ்பிரயோகம்; ஐவரின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வரணிப் பகுதியிலுள்ள பாடசாலையில் மாணவி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாக கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய 9 சந்தேக நபர்களில் 5 சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிகப்பட்டுள்ளது.

வரணி பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவரும், அந்த குற்றத்தை மறைக்க உதவியவர்கள் என்னும் சந்தேகத்தில் குறித்த பாடசாலை அதிபர் மற்றும் மூன்று ஆசிரியைகள் உட்பட ஒன்பது பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

அதில் கடந்த 29ஆம் திகதி அதிபர் மற்றும் மூன்று ஆசிரியைகள் உட்பட நால்வரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் எடுதத்துக் கொள்ளப்பட்டது.

அதன் போது குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒன்பது சந்தேக நபர்களும் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

அதில் 1-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் சந்தேகநபர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, அவர்களையும் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி இருந்தார்.

எனினும் பிணை விண்ணப்பத்தை நிகாரித்த நீதிவான் 1-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் ஆகிய சந்தேக நபர்களை எதிர்வரும் 15-ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அதேவேளை சந்தேக நபர்கள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஊடகங்களில் சந்தேக நபர்களை குற்றவாளிகள் என குறிபிட்டு செய்திகள் பிரசுரமாகின்றன.

இதனால் சந்தேக நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் ஆகியோர் பாதிக்கப்படுகின்றார்கள் என நீதிவானிடம் சுட்டிக்காட்டினர். (செ-11)

# அடையாளம் காணப்படாது 2 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள்

(கொழும்பு)

எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான இதுவரை அடையாளம் காணப்படாத சுமார் 2000 பேர் நாட்டில் இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான 2 ஆயிரத்து 400 பேர் வரை இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சின் பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே குறிப்பிட்டார்.

அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 50 வீதமானோர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்றும் பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் கூறினார்.

இது தவிர கட்டிட நிர்மாணங்கள் இடம்பெறும் சூழல்களில் பணிபுரியும் தொழிலாளர்களில் பலர் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்காகியுள்ளமை தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-11)

# ஞாயிறு நள்ளிரவு தொட...

கட்டண திருத்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் பஸ் கட்டண திருத்தத்தை மிகவிரைவாக மேற்கொள்ள வேண்டும் என பஸ் சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் பஸ்கட்டணம் திருத்தம் குறித்த வரையறைகள் தொடர்பாக நிபுணர் குழுவின் ஊடாக தீர்மானிக்கப்பட வேண்டும். அது வரை கட்டணத்திருத்தம் குறித்து உறுதியான முடிவை வழங்கமுடியாது என போக்குவரத்து அமைச்சர் இதன போது தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை தனியார் பஸ் சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரயஞ்சித், கலந்துரையாடல் வெற்றியளிக்காமையினால் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்ததுடன்,

மேலும் இவ் வேலை நிறுத்தமானது ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் ஆரம்பமாகும் எனவும் குறிப்பிட்டார். (செ-11)

# ஐ.நா.அமர்வு...

தொடர் நடைபெற்றது.

இதன்போது பல்வேறு நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து கூட்டத் தொடர் முழுவதும் ஆராயப்பட்டது.

அத்துடன் இலங்கை மனித உரிமை நிலைமை குறித்த வாய் மூல அறிக்கையும் இம்முறை மனித உரிமை பேரவை கூட்டத் தொடரில் வெளியிடப்பட்டது.

மேலும் இலங்கை சார்பில் அமைச்சர் மங்கள சமரவீர பேரவையில் உரையாற்றியதுடன் இலங்கை விவகாரத்தை முன்னிறுத்திய பல்வேறு உப குழுக் கூட்டங்களும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மாடியிலிருந்து வீழ்ந்து குழந்தை படுகாயம்

முதலாம் மாடியிலிருந்து தவறுதலாக கீழே விழுந்த 2 வயது குழந்தை ஒன்று படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் உள்ள மாடி வீட்டொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்நத விமல்ராஜ் நிதர்சிகா (வயது 2) என்ற பெண் குழந்தையே படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-30)

# மரத்திலிருந்து வீழ்ந்த இளைஞன் படுகாயம்

மா மரத்திலிருந்து கீழே விழுந்த இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் கிளிநொச்சி விநாயகபுரத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் அதே இடத்தினை சேர்ந்த தர்மராசா தனுசன் (வயது 19) என்ற இளைஞனே படுகாய மடைநத வராவார்.

படுகாயமடைந்த இளைஞர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாறறப்பட்டுள்ளார். (செ-30)

# உதய கம்மன்...

நேற்று கொழும்பு கோட்டே நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எனினும் அவரது கடவுச்சீட்டை பறிமுதல் செய்த நீதிமன்றம் வெளிநாடு செல்வதற்குத் தடைவிதித்துள்ளது.

25 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

உதய கம்மன்பிலவுடன் கைது செய்யப்பட்ட 2 ஆவது சந்தேக நபரான சிட்னி ஜயசிங்கவும், 15 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கம்மன்பில உட்பட இருவருக்கும் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்துள்ள கொழும்பு நீதவான் லங்கா ஜயரத்ன, அவர்களின் கடவுச் சீட்டுக்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

நடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதுவரை இடம்பெற்ற வழக்குகளை தவிர்க்கவில்லை என்றும் அனைத்து விசாரணைகளுக்கும் ஒத்துழைத்துள்ளதாகவும் குறிப்பிட்ட நீதவான் தனக்கு எதிரான சாட்சிகளைக் குழப்புவதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதாலேயே பிணை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வர்த்தகரான ப்ரயன் செடிக் என்பவருக்கு சொந்தமான 110 மில்லியன் ரூபாய் பெறுமதியான பங்குகளை, போலி பத்திரம் மூலம் உதய கம்மன்பில விற்பனை செய்ததாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது. (செ-11)

# முஸ்லிம் மாண...

யல்ல உறுதியளித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் சந்திப்பொன்று பல்கலைக்கழக மானிய ஆணையகத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் பல்கலைக் கழக மானிய ஆணையகத்தின் துணைத் தலைவரான பேராசிரியர் மொஹான் டி சில்வா, வர்த்தக கைத் தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதின், துணை வேந்தர்கள், பேராசிரியர்கள் மற்றும் முஸ்லிம் மாணவ பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தெற்கிலுள்ள பல்கலைக்கழகங்களில் ஐந்து வேளை தொழுகையில் ஈடுபட பிரத்தியேக தொழுகை அறை வசதி ஏற்படுத்தி தரப்பட வேண்டும்.

வெள்ளிக்கிழமை களில் நண்பகல் ஜூம்மா தொழுகையில் ஈடுபடுவதற்காக நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை பரீட்சைகள் மற்றும் பாட நெறிகள் நடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் .

போன்ற கோரிக்கைகள் குறிப்பாக மாணவ பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்ட போது இது தொடரபாக அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் பல்கலைக்கழக மானிய ஆணையகத்தினால் சுற்றறிக்கை அனுப்பி வைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

களனி மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களில விஞ்ஞான பீடத்தில் முதலாம் ஆண்டு விரிவுரை தனிச் சிங்களத்தில் நடைபெறுவதால் தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் எதிர்கொள்ளும் மொழி ரீதியான பிரச்சினைகள் குறித்தும் இந்த சந்திப்பில் மாணவ பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்ட போது, மொழி பெயர்ப்பு வசதியளிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என பல்கலைக்கழக மானிய ஆணையகத்தின் துணைத்தலைவரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பீட முஸ்லிம் மாணவிகள் கலாசார ரீதியான ஆடை அணிதல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக சுகாதார அமைச்சருடன் பேசி தீர்வை பெறுவதற்கும் இந்த சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (செ-11)

# இராணுவத்...

ஜூரிகள் முன்னிலையில் நேற்று ஆஜரான இருவரில் ஒருவர் தனது மகன் மற்றும் மகளின் கொலையை நேரடியாகப் பார்வையுற்ற சாட்சியாளராகவும், மற்றையவர் தனது குடும்பத்தினர் ஏழு பேரை இரத்த வெள்ளத்தில் பார்த்த சாட்சியாகவும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளனர்.

இதன்போது நேற்றைய முதலாவது சாட்சியாக சாட்சியமளித்துக் கொண்டிருந்த பெண் தன் பிள்ளைகளின் படுகொலைகள் தொடர்பில் விபரிக்கும் போது நீதிமன்றத்தில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதையடுத்து, நீதிமன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டதையடுத்து மீண்டும் அரை மணித்தியாலத்தின் பின்னர் அவரது சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

தமது ஊர்ப்பக்கம் பலமாக வெடிச்சத்தம் கேட்ட போது வீட்டுக்கு விரைந்ததாகவும் அங்கு தனது நறை மாத கரப்பிணியான மனைவி உட்பட 7 பேரை உயிரிழந்த நிலையில் கண்டதாகவும் 50 வயதான சாட்சியாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இராணுவத்தினரே அவர்களை சுட்டுக்கொன்றதாக சம்பவத்தைக் கண்டவர்கள் கூறியதாக அவருடைய சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள ஆறு படை வீரர்களில் மூவர் சாட்சியாளர்களால் தனித்தனியே இதுவரை அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

மேலும் நாளைமறுதினம் திங்கட்கிழமை வரை சாட்சி விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பாதுகாப்பு செயலர் நினைத்...

என மீள்குடியேற்ற அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேளவியெழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் ஆயிரத்து ஐந்நூறு ஏககர் விடுவிப்பதாக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு குறித்து என்னிடம் நீங்கள் கூறியது குறித்து எனக்கு தெரியவில்லை.

எனினும் கடந்த வாரம் தெல்லிப பழை பிரதேசத்தில் 220 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இன்னும் 500 ஏக்கர் கிளிநொச்சியில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த கிளிநொச்சி காணியும் விடுவிக்கப்பட்டால் எல்லாமாக 4 ஆயிரத்து 300 ஏக்கர் காணிகள் இந்த வருடம் எமது அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்டுவிடும்.

தொடர்ந்து காணிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை எமது அரசாங்கம் செய்து வருகின்றது. ஆயிரத்து ஐந்நூறு ஏக்கர் நிலம் விடுவிப்பதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அது குறித்து எனக்கு தெரிய வில்லை. அவ்வாறு நடக்க வாய்ப்புண்டு என்றார்.

இதன் போது கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்கள், வலி வடக்கில் இன்னமும் ஐயாயிரத்து நூறு ஏக்கர் நிலப்பரப்பு படையினர் வசம் உள்ளது.

இவற்றில் இரண்டாயிரம் ஏக்கர் காணிகளை இராணுவம் தனக்கு சொந்தமாக்கி கொள்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் உங்களுக்கு ஏதும் தெரியுமா? என கேட்டபோது, தகவலை வைத்து நான் பதில் கூற மாட்டேன்.

நடந்தால்தான் நான் கதைப்பேன், தகவலை வைத்து ஒரு புத்தகமே எழுதிவிடலாம். நடந்ததை என்னால் கூற முடியும்.

நடக்க போவதை எதிர்வு கூற முடியாது என அமைச்சர் பதிலளித்தார். மேலும் வலி வடக்கில் காணிகளை விடுவிப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராட்சியிடம் பேசியுள்ளோம். அது அவருடைய முடிவின்படி நடந்தால் தான் நடக்கும். நடக்கிறதற்கும் இடமிருக்கின்றது என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார். (செ-4)

# "சந்தேகத்துக்கு என்னால்...

தனக்கு எதுவும் தெரியாது என குறிப்பிட்ட மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். சந்தேகங்களுக்கு தம்மால் பதில் கூற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

யாழில் அண்மையில் இடம்பெற்றிருந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையாகிய முன்னாள் புலி உறுப்பினர்களில் இதுவரை 103 பேர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்கள் எனவும் சிறையில் இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையாகும் முன்னாள் போராளிகள் அனைவரையும் சர்வதேச மருத்துவர்களால் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் புலிகளின் முன்னாள் தளபதி ஒருவரின் மனைவி ஒருவர ஊடகங்களுக்கு தெரிவிததிருந்தார்.

இது தொடர்பில் நேற்றையதினம் யாழ்ப்பாணம் வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள் மற்றும் உறுப்பினர்களை புனர்வாழ்வுக்கு பின் விடுதலை செய்வதற்கு முன்னதான நாட்களில் சர்வதேச மருத்துவர்களால் அவர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும்.

அவர்களுக்கு எந்த விதமான நோய்களும் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் விடுதலையாகிய முன்னாள் போராளிகள் இதுவரை 103 பேர் சந்தேகத்துக்கிடமான நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். அரசாங்கம் அதை மூடி மறைக்கிறது.

எனவே இலங்கை மருத்துவர்கள் முன்னாள் போராளிகளை பரிசோதிப்பதை விடுத்து சர்வதேச மருத்துவர்கள் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். என அந்த பெண் கூறியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டு குறித்து புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனிடம் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இன்போதே இது வெறும் குற்றச்சாட்டாகவே உள்ளது எனவும் இவ் சந்தேகங்களிற்கு தம்மால் ஒருபோதும் பதிலளிக்க முடியாது என அவர பதில் கூற மறுத்துவிட்டார். (செ-4)

# சில மாணவர்களின் வாழ்க்கை...

நூறு கிலோ கஞ்சா உடைமையில் வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள வழக்கு தொடர்பான பிணை மனு யாழ் மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிபதி இளஞ்செழியன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

யாழ் நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் உள்ள ஒரு சில மாணவர்களே பாடசாலை நேரத்தில் பாடசாலை வளாகத்தில் மது அருந்துதல், புகை பிடித்தல் மற்றும் போதை கலந்த இனிப்புகளை ருசித்தல் போன்ற போதைவஸ்துகளைப் பயன்படுத்துகின்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக மேல் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்படுவதாக நீதிபதி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

யாழ்ப்பாணம் நகர்ப்புற பிரபல பாடசாலைகளில் ஒரு சிறு தொகை மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் கல்வி கற்கும் நேரத்தில் போதைவஸ்து பாவிப்பதாகவும், போதை கலந்த இனிப்புகளை உண்பதாகவும், புகை பிடித்தல் மற்றும் மது அருந்துவதாகவும் பாடசாலை சமூகங்களினால் மேல் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அந்தப் பாடசாலைகளின் ஒருசில ஆசிரியர்களும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்கி வருவதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் பராயத்தினராகிய சிறு தொகை மாணவர்களே இத்தகைய போதைவஸ்து பாவனை குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்ற பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்கள் மது பாவனை மற்றும் சிகரட் பாவனை தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக இருந்தபோதிலும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் இந்தக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அச்சமடைந்திருப்பதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடும் மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களுடைய பெற்றோருக்கு அதுபற்றி அறிவித்து, அவர்களை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டியது அதிபர் ஆசிரியர்களின் கடமையாகும்.

இத்தகைய மாணவர்களை பொலிசாரின் ஊடாக நேரடியாகக் கண்காணித்து, அவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அந்தப் பாடசாலைகளின் ஏனைய மாணவர்களின் ஒழுக்கம், கல்வி, எதிர்காலம் என்பவற்றின் நலன் கருதி போதைவஸ்து பாவனை குற்றச் செயல்களுக்காகக் கைது செய்யப்படுகின்ற மாணவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

போதைவஸ்து பாவனை இளம பராயத்தினர் மத்தியில் அதுவும் மாணவர்கள் மத்தியில் அனுமதிக்கப்பட முடியாது. அவர்கள் மத்தியில் இத்தகைய குற்றச் செயல்கள் இடம்பெறுவதை சட்டத்தை நேசிபபவர்களும், சட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்களும் பார்த்திருக்கவும் முடியாது என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார். (செ-4)

# வருங்காலத் தலைவர்களை...

துள்ளார். கணித விஞ்ஞான ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவம் நேற்றையதினம் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

கடந்த காலங்களில் வடபகுதியில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக எமது பகுதியிலிருந்த கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியமையினாலும் ஓய்வு பெற்றமையினாலும் ஏற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் எமது மாணவர்கள் கணித, விஞ்ஞான, ஆங்கிலக் கல்வியை பெறுவதில் இடர்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களது இந்த இடரினைப் போக்கும் முகமாகத் தற்போது நியமனம் வழங்கப்படும் ஆசிரியர்களாகிய நீங்கள் மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான, ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதனூடாக எதிர்காலத்தில் சிறந்த கணித, விஞ்ஞான, ஆங்கில துறையில் வல்லுனர்களை உருவாக்குவதுடன் எமது பகுதிக்கும் நாட்டுக்கும் தேவையான விரிவுரையாளர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்களைப் பெற்றுக்கொள்ள நீங்கள் வழி அமைப்பீர்கள.

அதுமட்டுமல்ல. எமது கல்லூரிகளின் சாதனைகள் அண்மைக் காலமாகச் சரியத் தொடங்கியுள்ளன. அவற்றைத் திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டிய கடப்பாடு உங்களுக்கு உண்டு. மேலும் ஆங்கிலம் கற்பிப்போர் முறையாக, உரியவாறு, பிழையின்றி ஆங்கில மொழியைப் பேசக்கற்றுக் கொடுத்தல் அவசியம். நீங்கள் ஆங்கிலத்தை முறையாக உச்சரித்தால் தான் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம் என்பதை மறவாதீர்கள்.

இன்று எம் இளைஞர்களின் மனம் ஒருநிலையில் இல்லை. வெளிநாடு செல்வதா வேண்டாமா என்பதே பலரின் மனதில் எண்ணம் எழும். இவ்வாறான எண்ணத்துடன் வாழ்வதால் எம் மக்களுக்கு சேவை புரிய உங்களுக்குக் கிடைகும் நல்ல சந்தர்ப்பத்தை நீங்கள் நழுவ விட வேண்டிவரும்.

உங்கள் மனம் வேற்று நாட்டைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் எம் மாணவ மாணவியருக்குத் தான் அதன் பாதிப்பு தெரியவரும்.

உங்கள் பணியானது மகத்தானது. வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் பணி உங்களுடையது. எனவே இன்று (நேற்று) பதவியேற்கும் உங்கள் ஒவ்வொருவரிடமும் உங்கள் பணிகளில் சிரத்தையையும், சிறந்த செயற்பாட்டையும், செய தொழிலில் அக்கறையையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பலர் வேலையின்றி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் அதிர்ஷ்டம் உள்ளவர்கள். வேலை கிடைத்துள்ளது.

அந்த அதிர்ஷ்டத்தை உதாசீனம் செய்யாது மாணவ சமுதாயம் உருமாற உன்னத நிலையடைய, உலகில் உயர்ச்சி பெற உங்கள் கடமைகளைத் தொழிற் திறனுடன் ஆற்ற நீங்கள் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-7,9)

# வடக்கு இளைஞர் யுவதிகளுக்கு...

சங்க உறவுகள் இராஜாங்க அமைசசர் ரவீந்திர அமரவீரவிர தெரிவித்துள்ளார்.

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் கீழ்மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நேற்றையதினம் யாழ் மாவட்டச்செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது அதில் பிரதமஅதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 30 வருட கால யுத்த அசௌகரியங்களுக்குப் பின்னர் இப்போது இருக்கும் அரசாங்கத்தினூடாக பல்வேறு சேவைகளைப் பெற்றுக் கொடுக்க தயாராக இருக்கின்றோம்.

அதாவது நீங்கள் பெற்றுக் கொடுத்த வாய்ப்பின் ஊடாக புதிய அரசு ஆட்சிக்கு வந்த ஆண்டின் பின்னர் எமது பிரதேசத்துக்கு பல சேவைகளையும் வசதிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். அதனுடைய பிரதிபலனாக நாங்கள் மேலும் பல்வேறுபட்ட விடயங்களை அபிவிருத்திகளை இங்கும் ஆரம்பித்துள்ளோம்.

எமது அமைச்சின் ஊடாக 30 வீத வேலையின்மையைக் குறைப்பதற்காக இப்பிரதேசத்திலே வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

எமது அமைச்சினூடாக மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களத்தின் அமைப்பினை யாழ்.மாவட்டதில் அமைத்து அதன் ஊடாக வேலைதேடும் இளைஞர் யுவதிகளுக்கு உதவி செய்யவுள்ளோம்.

இந்த 30 வருடமாக காணப்பட்ட யுத்தத்தின் காரணமாக இங்கிருந்து இளைஞர்கள் சரியான கல்வியைப் பெற்றிருக்காத காரணத்தால் தாம் எதிர்பார்க்கும் விரும்பும் தொழிலை தேடிக்கொள்வது கஷ்டமாகவுள்ளது.

எனவே எதிர்காலத்திலே இங்கு உள்ளவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மிகப்பெரிய வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வாறான திணைக்களத்தினை யாழ்ப்பாணத்தில் அமைத்து மிக விரைவாக இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களைக் கொடுப்பதற்கு தயாராகவுள்ளோம்.

இன்று (நேற்றைய தினம்) ஆரம்பித்த இந்த நிகழ்வின் ஊடாக வெளிமாவட்டங்களுக்குச் சென்று வேலைபுரியத் தயாராக இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் நாம் வேலைகொடுக்கத் தயாராகவுள்ளோம். எங்களுடைய முக்கிய நோக்கம் இங்குள்ள இளைஞர் யுவதிகள் இன்னும் சில வருடங்களில் தங்களுடைய வாழ்க்கையில் சுயமாக நல்ல நிலையைப் பெற்றுக்கொடுப்பதே ஆகும்.

வேலைவாய்பை பெற்றுக்கொடுப்பதற்காக இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கி அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். முன்னர் பயிற்சிகளை பெற்றவர்களுக்கு வேறு அரசாங்கங்கள் ஊடாகவும் நாம் வேலை வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம்.

எமது அரசாங்கத்தின் ஊடாக ஏனைய மாவட்டங்களில் உள்ள இளைஞர் - யுவதிகள் போன்றே இங்குள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

ALLAINCE FRANCHAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
வகுப்பு ஆரம்பம் - 02.07.2016 பிரெஞ்சு மொழி
உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!
☎ 021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(C-5067)
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

Diploma In Spoken English
புதிய பிரிவு ஆரம்பம்
02.07.2016 @ 3.00மணி
(இப்பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில், மாலை 3.00 - 5.30 வரை இடம்பெறும்)
ஆங்கில மொழியைக் கற்பித்துப்பேச வைப்பதில் வடமாகாணத்தில் முதன்மை ஆங்கிலக் கல்லூரி
உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்
University of Cambridge (UK) Certificates
CITY & GUILDS (UK) Certificates
E-CITY Diploma in English Certificates
City & Guilds
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
E-CITY COLLEGE OF ENGLISH
இல.372, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ். 0773400418/0212217106
(C-5071)

விஸ்டம்
விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
வடக்கின் தலைசிறந்த தொழில்நுட்ப வளவாளர்களை ஒருங்கிணைத்து விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படும்
A/L 2016 தொழில் நுட்ப பிரிவு
மாணவர்களிற்கான விசேட செயலமர்வு
08,09.10.Jul.2016 { பொறியியல் தொழில்நுட்பம் / உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
12,13.14.Jul.2016 I.C.T விவசாயம், புவியியல்
15,16.17.Jul.2016 தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- எதிர்பார்க்கை வினாக்களும் விடைகளும்
- அலகுரீதியான குறிப்புக்களும் விளக்கங்களும்
- மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்
- எதிர்பார்க்கை செயன்முறைகள் தொடர்பான முழுமையான விளக்கங்கள்
நேரம் காலை 8.30 - 1.30
முற்பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
தொடர்புகளுக்கு 0772487774
(5101)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course
Up to 30% Discount
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி (பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் 08/07/2016 - Friday
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(C-5082)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.